திரும்பிப்பார்!

கதை - வசனம்

கலைஞர் மு. கருணாநிதி

திராவிடப் பண்ணை

தெப்பக்குளம் :: திருச்சி

முதல் பதிப்பு: 1953

உரிமையுடையது.

விலை ரூ. 0–10–0

சிட்டி பிரஸ், மதுரை ரோ



கலைஞர் பேசுகிறார்!

எந்த மனிதனும் தான் கடந்துவந்த வாழ்க்கைப் பாதையை ஒரு முறை திரும்பிப் பார்க்க வேண்டியது மிக மிக அவசியம். நல்லவரும் சரி; நாசகாலரும் சரி; திரும்பிப்பார்க்க வேண்டும்.

வாழ்வுப் பாதையைத் திரும்பிப் பார்ப்பதால் கிடைத்த அனுபவங்களை, இன்னும் கடக்கவேண்டிய பாதைக்கு கைகாட்டியாக அமைத்துக்கொள்ள முடியும், நல்லவர்கள்.

தங்கள் பாதையில் இதுவரையில் பயிர் செய்யப்பட்ட தீமைகளைத் திரும்பிப் பார்த்து பெருமூச்சு விடுவதால் இனியாகிலும் தூய வழியில் நடப்போம் என்ற எண்ணம் மலரலாம் நாசகாலர்களாய் இருந்தவர்களுக்கு!

திரும்பிப்பார்! தீயவனே! உன் வாழ்க்கை வண்டியின் சக்கரத்தில் சிக்கி உருத்தெரியாமல் போனவர்

கள்—உருப்படாத நிலைபெற்றவர்கள் எத்தனைபேர்! திரும்பிப்பார்!

திரும்பிப்பார்! உழைப்பையே கருவியாக்கி, உண்மை இதயத்தின் துணைக்கொண்டு உயர்ந்தவனே! அந்த உயர்வால் நீ இறுமாந்துவிடாமலிருக்க உன்னையே ஒருமுறை திரும்பிப்பார்!

இத்தகைய கருத்துக்களை உள்ளடக்கித்தான் இந்தத் திரைச் சித்திரம் தீட்டப்பட்டது.

பழையநாள் புராணங்கள், இதிகாசங்கள், கடவுளரின் கதைகள்—எல்லாமே மக்களை நாசவலையில் தள்ளிடும் நயவஞ்சகத் திட்டங்கள்.

கிருஷ்ணபரமாத்மா — கடவுளின் அவதாரம்! ஆனால் அவர் லீலா விநோத சிங்கார புருஷன். ''கண்ணன் காட்டிய வழியே செல்'' என்று ஆற்றங்கரையில் பஞ்சாங்கமேந்தியிருப்பவர்கள் மட்டும் அல்ல; அரசு கட்டிலில், பாராளும் கோல் ஏந்தி அமர்ந்திருப்பவர்களும் சொல்கிற நேரமிது!

கண்ணன் காட்டிய வழியிலே சென்றுன் ஒரு வாலிபன். இந்திரன் மூறைகளைக் கையாண்டான். அந்த வாலிபனின் வாழ்க்கை வரலாற்றைத்

தான் இந்த திரைச் சித்திரம் விளக்கிக் காட்டுகிறது.

புகழ்தேடும் பூச்சிகள் சில போலித் தலைவர் வேடமிட்டு அரசியலைக் குழப்பி அவதிக்குள்ளாக்குகின்றன. அவர்களையும் அம்பலத்திற்கு இழுத்து உண்மைத் தலைவன் எப்படியிருக்க வேண்டும் — சிறைச்சாலை அழைத்தாலும், மனைவியின் கண்ணீர் வெள்ளத்தைக் கண்டாலும்— அவைகளைப் பொருட்படுத்தாமல் பொதுநல சேவையில் நாட்டங் கொள்பவனே வீரன் என்பதை பாண்டியன் என்ற கதாபாத்திர மூலமாக விளக்கப்பட்டிருக்கிறது இந்தக் கதையில்!

புத்தகம் வெளியிடுபவர் என்ற போர்வையில் வேஷங் கட்டித் திரியும் சில சுயநலப் பெருச்சாளிகளை மக்கள் மன்றத்தில் நிறுத்திக் காட்ட வேண்டும் என்ற ஆசையும் ஓரளவுக்கு பூர்த்தி செய்யப்பட்டிருக்கிறது இந்தக் கதையில்!

மொத்தத்தில் மனிதன், தன்னை ஒருமுறை திரும்பிப்பார்ப்பது அவனை நல்வழியில் நடக்கத் தூண்டும் என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டுள்ளது இந்த சித்திரம்.

இதைப் பேசும் சித்திரமாக்கித் தந்து பற்பல அவதிகளுக்கிடையே வெளியிட்ட மாடர்ன் தியேட்டர் சாருக்கு என் நெஞ்சுகந்த நன்றி.

திரையோடின்றி, நூல் வடிவிலும், இந்தக் கதை வெளிவர வேண்டுமென்று, திராவிடப் பண்ணையார் கருதினர். வெளியிட்டுக்கொள்ள அனுமதி தந்திருக்கிறேன். இதை நூல் வடிவாக்க திருச்சி திராவிடப் பண்ணையைத் தவிர வேறு யாருக்கும் உரிமை யளிக்கப்படவில்லை. அவர் கட்கும் என் நன்றி.

நாம் கையிலே பேனா பிடிக்கும் போது—நமக்கெதிராக சிலர் கத்தரிக் கோல் பிடிக்கத் தயாராயிருக்கிறார் கள். 'பாவம்' அவர்களுக்கும் கொந் தளிக்கும் திராவிடத்தின் சார்பாக "நன்றி (?)" தெரிவித்துக் கொள் கிறேன்.

அன்பன்

மு. கருணாநிதி

முக்கிய அறிவிப்பு

வேறு யாரும் இந்நூலை வெளியிட முனைந்து, இந்தக் கதையிலே வரும் கருடன் பாத்திரமாக மாறிக் கொள்ள நினைத்தால் அவர்கள் நிச்சயம் நீதிக்கு முன்னால் நிறுத்தப்பட வேண்டியவர்களாவார்கள் —நிறுத்தப்படுவார்கள்.

—திராவிடப் பண்ணை.

கலைஞர் மு. கருணாநிதியின்

அரிய நூல்கள்

★

விடுதலைக் கிளர்ச்சி	ரூ. 1—0—0
பராசக்தி	1—0—0
நாடும் நாடகமும்	1—0—0
பூந்தோட்டம்	0—4—0

திரும்பிப்பார்!

காட்சி 1] [கோர்ட்

[வக்கீல் பேசிக்கொண்டிருக்கிறார்]

வக்கீல்: கொலை செய்தது பூமாலைதான் என்று பத்திரிகைகளில் வந்த செய்தி தவறானது! புலன் விசாரணைக்குப் பிறகு, வழக்கின் உருவமே மாறியிருக்கிறது. கொலை செய்யப்பட்டவரை பூமாலை கொன்றிருக்கவேண்டிய அடிப்படை காரணங்கள் எதுவுமே இல்லை. (பூமாலை காட்டப்படுதல்) கொலை செய்யப்பட்டவரின் பரம விரோதியாக ஆதிமுதல் இருந்தது பாண்டியன்தான். (பாண்டியன் காட்டப்படுதல்) குடும்ப விவகாரங்களிலும் சரி, பொதுவாழ்க்கையிலும் சரி இருவருக்கும் பல நாட்களாகவே பகை வளர்ந்திருக்கிறது. இந்தப் பகை வெறியாக மாறி கொலையில் முடிந்திருக்கிறது!

பூமாலை: இல்லை. பாண்டியன் நிரபராதி! அவர் கொலை செய்யவில்லை—கொலை செய்யவில்லை. நானேதான் கொலை செய்தேன்.

(நீதிபதி மேஜையைத் தட்டுதல் Silence)

வக்கீல்: பூமாலை கொலைக்குற்றத்தை தானே ஏற்றுக்கொள்வது பாண்டியன் மீதுள்ள அன்பின் காரணமாக. பாண்டியனைக் காட்டிக் கொடுக்கக் கூடாது என்ற ஒரே காரணத்திற்காக.

பூமாலை: இல்லை இல்லை. நீதிபதி அவர்களே! பாண்டியனுக்கும் இந்தக் கொலைக்கும் சம்மந்தமே இல்லை. தயவுசெய்து என் குடும்ப வரலாறு முழுவதையும் கேளுங்கள்!.....

நீதிபதி: இந்தக் கொலை வழக்கிற்கும், உன் குடும்ப வரலாறுக்கும் என்னம்மா தொடர்பு!

பூமாலை: நிறைய இருக்கிறது! இந்த வழக்கிற்கு ஆதரவாக அந்த வரலாறு மட்டுமல்ல, ஆஸ்பத்திரி வாட்ச்மேன், மில்

முதலாளி முதலிய சாட்சிகளுமிருக்கிறார்கள். அவர்களையும் விசாரியுங்கள்! முதலில் என் கதையைக் கேளுங்கள்!

நீதிபதி: சொல்லு!...

பூமாலை: எங்கள் குடும்பம் இருந்தது கோயமுத்தூர்! அங்கே ஒரு புத்தக நிலையம் இருந்தது! அதன் பெயர் கருடன் பதிப்பகம். அங்கேதான்!...

✲

காட்சி 2] [பூமாலைவீடு—காலை நேரம்

[பூமாலை ஏழெட்டு குழந்தைகளுக்கு பாட்டு மூலமாக நீதி போதனைப் பாடம் சொல்லித்தருகிறாள்]

பூமாலை: நாளைக்கு காலையிலே வந்துடணும்...

(குழந்தைகள் போகின்றன)

பரந்தாமன்: (தூங்கியெழுந்த சோம்பலுடன் வந்துகொண்டே) ஆமாம் காலையிலே வந்துடுங்க! மனுஷனை தூங்கவிடாமல் கத்தலாம்...

பூமாலை: கத்தலா இது! கற்கண்டைவிட இனிப்பாயிற்றே மழலை மொழி!

பரந்தாமன்: அக்கா! இதெல்லாம் எனக்குப் பிடிக்கிலே! பஞ்சத்திலே அடிபட்டதையெல்லாம் இங்கே ஏன் கூப் பிடுறே? எங்கயாவது தர்மப் பள்ளிக்கூடத்துக்குப் போகட்டுமே...

பூமாலை: எனக்குப் பொழுதுபோக வேண்டும் தம்பி!

பரந்தாமன்: பணக்கார வீட்டுப் பெண்களுக்கு பொழுதைக் கழிக்கவா வழியில்லை? பல வழியிருக்கு! பேட்மிட்டன், பிங்பாங், லேடீஸ் கிளப், இங்கிலீஷ் பிக்சர், So many entertainments.

பூமாலை: பல வழியிருக்கலாம் தம்பி! ஆனால் மற்றவர்களுக்கும் பயனுள்ளதாக இருக்க வேண்டாமா?

பரந்தாமன் : சரி...உன் இஷ்டம்! இனிமே இந்த வீட்டுக்கு படுக்க வர்ரதே தப்பு! நமக்கு சத்திரம் சாவடியா இல்லே.

பூமாலை : தம்பி அப்படியெல்லாம் சொல்லாதே! கடல் போல வீடு இருக்கு!

பரந்தாமன் : நல்லா இருந்ததுபோ! அக்கா! பணம் எதுக்காக இருக்கு...அனுபவிக்க—வாழ்வு, சுகம், பணம்—எல்லாமே மூன்று எழுத்து.

பூமாலை : அன்பு, தொண்டு—அதுகூட மூன்று எழுத்துத்தான், பரந்தாமா வாழ்வு தேவைதான். ஆனால் மற்றவர்களுக்காக வாழ்கிற வாழ்வு—சுகம் வேண்டியதுதான்—பிறருடைய ஆனந்தத்திலே ஏற்படுகிற இதய சுகம் ... ...

பரந்தாமன் : ஊம் கும். கூடிய சீக்கிரம் இந்த வீடு ஒரு ஆஸ்ரமமா ஆயிடும்.

(கடுகடுப்புடன் போகிறான். பாமாவின் பெற்றோர் வருகின்றனர்.)

பூமாலை : யாரு ... . ஓ ... . வாங்க வாங்க! உக்காருங்க! குண்டுமணி! டீ கொண்டுவா!

(எல்லோரும் உட்காருகின்றனர்.)

★

காட்சி 3] [Bath Room

[டூத் பிரஷை போட்டுவிட்டு முணுமுணுத்தப்படி]

பரந்தாமன் : அன்பு...தொண்டு...அவரைக்காய்...

(ஆத்திரமாய் பம்பைத் திருகிவிட்டு ஷவர்பாத் எடுக்கிறான் தண்ணீர் மேலே விழுந்த பிறகுதான் தெரிகிறது. அவன் Nightdress களோ கழற்றாமலே குளிக்கிறான் என்பது....)

பரந்தாமன் : அடெடெ! இதுவேற நியூசென்ஸ்.

★

காட்சி 4] [பூமாலைவீடு ஹால்

[சாப்பிட்டான கப் சாசர்களை ஒரு பெண் எடுத்துப் போகிறாள்]

குணரத்தனம்: அப்ப சந்தோஷம். ஏழாந்தேதி ஒரு நல்ல நாள் இருக்கு ... ...

பூமாலை: நாள் எதா இருந்தா என்ன!

குணரத்தனம்: இல்லம்மா! எனக்கு நாள் நக்ஷத்திரத்திலே கொஞ்சம் நம்பிக்கை.

பூமாலை: சரி சரி ... ... அதனால என்ன!

தங்கம்: நீ ஏம்மா கல்யாணம் பண்ணிக்காம ... ...

பூமாலை: இந்தக் குடும்பத்து பொறுப்பாளியே நான்தானே. தம்பி செல்வமாக வளர்ந்தவன், குடும்ப கஷ்டத்தை அவனுக்கு கொடுக்கக் கூடாதுன்னு அப்பா அம்மா உத்தரவு. அக்கா மகள், தாய் தந்தை இல்லாதவள் சென்னையில் படித்துக்கொண்டிருக்கிறாள், அவளுக்கு நான்தான் துணை.

குணரத்தனம்: இப்படி எல்லோருக்கும் அம்மா துணையா இருக்கிற தாலதான் அவங்க வாழ்க்கைத் துணைவரை வீட்டோட இருக்கிறவரா பாக்கிறாங்க! ... ...

தங்கம்: ஏம்பா....அது மாதிரி புருஷன் கிடைக்காது .... லக்ஷ்மி மாதிரி இருக்குது பொண்ணு!

(பரந்தாமன் வருகிறான் குளித்து டிரஸ் செய்துகொண்டு)

பூமாலை: வா தம்பி! இவங்கள்ளாம் தெரியுமா? (பரந்தாமன் முழித்தல்) ஓ! இவுங்க பெண்ணைமாத்திரந்தான் தெரியும் போலிருக்கு ... ... பாமாவோட பெற்றோர்!.

பரந்தாமன்: ஓகோ! நமஸ்காரம்!

பூமாலை: கல்யாணம் நிச்சயம் பண்ண வந்திருக்காங்க! என்ன ... ... சம்மதந்தானே உனக்கு ... ...

(பரந்தாமன் மௌனம், நாணம்)

குணரத்தனம்: என்ன கேக்கிறீங்க இதைப்போயி! வாழைப் பழம் வேண்டாங்கிற கு.... குழந்தை உண்டாங்கிறேன். ஆ குழந்தை.... ....

பூமாலை: என்ன பரந்தாமா!

பரந்தாமன்: சரிக்கா!

குணரத்தனம்: அப்பசரி. நாங்க வரோம். சந்தோஷம். ஆக வேண்டியதைக் கவனிப்போம்.

★

காட்சி 5[[கருடன் பதிப்பகம், கோவை—முன் இரவு

[கட்டப்பட்ட பார்சல்கள், புக்போஸ்டுகள்மீது பதிப் பகத்தின் ரப்பர் ஸ்டாம்பு குத்தப்படும் சப்தம் டக் டக் என்று கேட்டபடி இருக்கிறது]

கருடன்: (ஆபீஸ் பையனிடம்) பையா...உம்...பார்சலுக்கு நேர மாச்சு புறப்படு...புறப்படு. பாக்கி நாளைக்கு அனுப்பலாம்.

('டக் டக்' என்று தட்டும் சப்தம்)

கருடன்: யாரு? உள்ளே வாருங்க.

(உள்ளே பாண்டியன் வருகிறான்)

கருடன்: யாரு...எங்கேயோ பாத்தமாதிரி....(சந்தேகமாய்)

பாண்டியன்: (கோபமாய்) மறந்திருப்பீர். நான்தான் பாண்டி யன். ஞாபகமிருக்கிறதா? (தன் கையிலுள்ள நூலைக் காட்டி) இந்தப் புத்தகத்தின் உண்மையான ஆசிரியர்.....

கருடன்: சே சே...இதற்கு ஆசிரியர் பரந்தாமன் என்று அட் டையிலே போட்டிருக்கிறதே!

பாண்டியன்: அச்சு யந்திரத்திற்கு என்ன தெரியும் நீங்கள் செய்யும் அநியாயம். சிந்தித்து சிந்தித்து செந்நீரையெல் லாம் வியர்வையாக்கி சிரமத்தை சுமந்து பலநாள் பாடு பட்டு எழுதிய எனக்கல்லவா தெரியும் இது யார் எழுதிய தென்று.

கருடன் : இல்லே பரந்தாமன்.

பாண்டியன் : யாரது பரந்தாமன்?

குரல் : பக்தா!

பரந்தாமன் : ஏன் ஆத்திரப்படுகிறாய்? பதறுகிறாய்—பரந்தாமனை அழைத்த விஷயமென்ன? யார் இவன்?

கருடன் : பாண்டியனும்...

பரந்தாமன் : யார் அவன்! பாண்டியன்! தலையாலங்கானத்து செருவென்ற பாண்டியனா? ஆரியப்படை கடந்த நெடுஞ் செழியனா? போர்க்கருவி எதுவுமின்றி புகுந்த பாண்டியன் நீ யாரப்பா?

பாண்டியன் : நானா? எழுத்துத் திருடனை சந்திக்கவந்த இல்லற ஜோதியின் உண்மை ஆசிரியர் பாண்டியன்...

பரந்தாமன் : ஹா...ஹா...ஹா...இல்லற ஜோதிக்கு நீ ஆசிரியனா? புத்தகத்திற்கா?...சபாஷ்!...சபாஷ்!...

பாண்டியன் : அச்சியற்றுவதாக என்னிடத்திலே வாங்கி அயோக்கியத்தனம் செய்துவிட்டு, சிரித்து மறைக்கிறீர்களா; திருடர்களே, எழுத்தைக் களவாடிப் பிழைப்பதைக் காட்டிலும், கழுத்திலே ஒரு கயிறு மாட்டிக்கொள்ளலாமே.

பரந்தாமன் : மரியாதையாகப் போகமாட்டாய் நீ!...

பாண்டியன் : சீ...பேசாதே! (பரந்தாமனின் கன்னத்தில் அறைகிறான்) மரியாதை வேறு மானங்கெட்டவர்களுக்கு! இப்படி எத்தனை பேர் கிளம்பியிருக்கிறீர்கள்? ஊரான் எழுத்தைச் சுரண்டிச் சாப்பிட.

பையன் : அது பலபேரு கிளம்பியிருக்காங்க...போய்யா.

கருடன் : (பையனிடம்) சீ முந்திரிக்கொட்டை...

(பரந்தாமன் ஆத்திரமுடன் மேஜையிடம் ஓடி, மேஜையைத் திறந்து ரிவால்வரை எடுக்க, கருடன் தடுக்கிறான்)

கருடன் : ஸ்...சும்மா யிரு ! அப்புறம் கம்பி எண்ணனும்...நல்ல வேலை செஞ்ச...

(என்று ரிவால்வாரை வாங்கி டிராயரில் வைத்து மூடி விட்டு பையனிடம்)

ஏ பையா ! சூடா ஒரு கப் காபி கொண்டாந்து கொடு.

(பையன் போதல்)

பரந்தாமன் : விடக்கூடாது...

கருடன் : (கம்பீரமாய்) ஆமாம் விடக்கூடாது !

பரந்தாமன் : ஏய்.. நான் அடிபட்டதை வெளியில் விடக்கூடாது!

கருடன் : அது சரி...நான் அப்பவே சொன்னேன். பிறத்தியான் எழுதினதை உன் பேரால் போடவேண்டாமென்று—இப்ப பஞ்சணை புத்தகம் எழுதியிருக்கே ! அதுக்கு இருக்கிற மதிப்பு...இல்லற ஜோதிக்கு இருக்குதா? ஏன் வீண் வம்பு அனாவசியமா. அடாடா...பஞ்சணையைப்பத்தி லெட்டர் கள் வந்திருக்கு...யார் அந்தத் துறவி என்பவர். அவரைப் பார்க்க முடியுமா? போட்டோ இருக்கா? அவர் வரகவியா, சுய கவியா? அவர் கையிலே பேனா இருக்கிறதா, மன்மத னின் வில்லே இருக்கிறதா? பேனாவிலே மை இருக்கிறதா, அல்லது கருப்பஞ் சாறே இருக்கிறதா? இப்படியெல்லாம் உன்னை வர்ணிக்கிறார்கள். இல்லற ஜோதியை அப்படி வர்ணிக்கவும் இல்லை. அது நிறைய விக்கவும் இல்லை.

பரந்தாமன் : வியாபாரமாகாவிட்டாலும், இல்லற ஜோதி எனக்கு ஒரு இன்பமான ஜோடியை அளித்திருக்கிறது.

★

காட்சி 6] [குளக்கரையோரமுள்ள தென்னஞ்சோலை—பகல்

[பாமா பாடிமுடிந்ததும் குடத்தை எடுத்துக்கொண்டு போகிறாள்-மரத்தின் மேலே இருந்த பரந்தாமன் குடத்தின் கழுத்தில் சுருக்குப் போட்டு இழுக் கிறான். பாமா மேலே பார்த்து—]

பாமா : இது என்ன வேலை...

(சிரித்தபடி பரந்தாமன் கீழே வருதல்)

பாமா : குடத்திலே விழுந்த சுருக்கு தவறி என் கழுத்திலே விழுந்தது,

பரந்தாமன் : கழுத்திலேயுந்தான் சுருக்குப் போடப் போறேனே.....

பாமா : என்னது.....

பரந்தாமன் : பயப்படாதே ! இந்தக் கயிற்றுல் அல்ல. உன் மரகதமணிக் கழுத்திலே மஞ்சள் தோய்ந்த மாங்கல்யக் கயிற்றுல். (பாமா வெட்கம்) பாமா ! சொன்னது சரி தானே ! அட சொல்லு..... (பாமா புன்னகை) ஆகா ! புயலை அடக்கும் தென்றல், எரிமலையை அணைக்கின்ற பனிக் கட்டி, கேள்விப்பட்டதே இல்லை நான் !... ஆனால் அந்தப் புதுமையான சக்தியை உன்னுடைய ஒரு புன்னகையிலேயே காணமுடிகிறது.

பாமா : இதெல்லாம் வெறும் வர்ணனையாகப் போய்விடாதே ?

பரந்தாமன் : ஏன் சந்தேகம் ! (தோளில் கை வைத்து) நேற்று தானே அறிமுகமானேன். இன்று தொட்டு விளையாடுகிறேன், நானே ஓடிவிடுவானே என்று அஞ்சுகிறாயா ? கொஞ்சு மொழியாளே ! கூர்ந்து கவனிக்கவில்லையா நீ, இல்லற ஜோதியிலே என்ன எழுதியிருக்கிறேனென்று.

பாமா : எழுதியபடியே நடப்பீர்களா ?

பரந்தாமன் : (அலுத்தபடி) பெண்களே இப்படித்தான் சந் தேகப் பிராணிகள்.

பாமா : இல்லை...யில்லை... (அவன் முகத்தைத்திருப்பி) இங்கு பாருங்கள்...

பரந்தாமன் : பாமா ! கண்ணே ! (நெருங்கல்)

பாமா : ஊஹூம்...எல்லாம் திருமணம் ஆனபிறகு...

பரந்தாமன்: திருமணந்தான் ஆகப்போகிறதே!

பாமா: திருமணம். நான் பாக்யசாலி.

☆

காட்சி 7] [பூமாலை விடு-பகல்

[உள்ளே பெண்கள் பலர் திருமண வேலைகளில் ஈடு பட்டிருக்கின்றனர். குமுதா வரல்—பூமாலை ஆவ லுடன் ஓடிச்சென்று]

பூமாலை: குமுதா!

குமுதா: சின்னம்மா! (இருவரும் தழுவல்)

பூமாலை: ஏம்மா இவ்வளவு தாமதம்?

குமுதா: பரீட்சை சின்னம்மா. உடனே வரமுடியிலே...

பூமாலை: உட்காரு குமுதா. தம்பிக்கு உன்னை கல்யாணம் செஞ்சு வச்சு வீட்டோட இருப்பேன்னு நெனச்சேன்...

குண்டுமணி: அதுக்குள்ளதான் அவரு காதல் திருமணம் பண்ணிட்டாரே.

குமுதா: ஏய் குண்டுமணி.

(பரந்தாமன் வருகை)

பரந்தாமன்: அடடே! குமுதா தேவி எப்போது வந்தார்கள்?

குமுதா: மாமா, மாப்பிள்ளை முருக்கிலேயே இருக்காரே! ஏன் மாமா, மாமி சிகப்பா கருப்பா?

பரந்தாமன்: அய்ய...படிச்ச பெண்ணுக்கு இதுகூட தெரியி லேயே. ஒரு பெண்ணு சிகப்பு நிறமாயிருந்த எவனுவது விரும்புவானு? ரத்தம், குங்குமம் இதெல்லாம் சிகப்பு-இந்த நிறத்தை எவன் தொடுவான். இனிமேல் இப்படிக் கேளு. எழுமிச்சம்பழ நிறமா, நாகற்பழ நிறமா, அல்லது இரண்டுங் கலந்ததா?

(குமுதா சிரிக்கிறாள்)

குமுதா : கல்யாண உற்சாகத்திலே மாமாவுக்கு கவிதைகளால்ல ஊறுது !

குண்டுமணி : அதுவும் கலர் கவிதைகளால்ல ஊறுது ! (சிரிப்பு)

★

காட்சி 8] [பூமாலை ஹால்

புரோகிதர் : மாப்பிள்ளையை வரச்சொல்லுங்க...

(பூமாலை பெருமூச்ச)

புரோகிதர் : எங்கே மாப்பிள்ளை—முகூர்த்தநேரம் தவறிடும்—சீக்கிரம்—சீக்கிரம்...

குமுதா : சின்னம்மா ! மாமாவைக் காணும்.

பூமாலை : ஆ ! காணுமா.

(மாப்பிள்ளையைக் காணும் ரகளை)

★

காட்சி 9] [மாடியில் ஓர் அறை—பகல்

[மாடியில் தேடி அலுத்து பிரமைபிடித்தவள்போலிருக்கும் பூமாலையிடம் குமுதா ஓடிவருகிறாள்]

பூமாலை : குமுதா !

குமுதா : சின்னம்மா !

பூமாலை : குமுதா ! இந்த அவமானத்துக்கு என்ன செய்வது... அய்யோ...(என்று அலறுகிறாள்)

★

காட்சி 10]

[பாமாவின் கண்ணிலிருந்து நீர் வழிகிறது.
வழிந்த நீர் கையில் விழுகிறது.
கையில் விழுந்த நீர் அருவியாக மாறுகிறது.
அருவி ஆறுகப் போகிறது.]

★

காட்சி 11] [ஆறு

[படகொன்று போய்க் கொண்டிருக்கிறது. படகில் பரந்தாமனும், வேறு ஒரு பெண்ணும் பாடிக் கொண்டு போகிறார்கள்.]

★

காட்சி 12]. [பூமாலை வீடு–பகல்

[பூமாலை மனைவேதனையுடன் வீட்டுக்குள் நுழைகிறாள். பரந்தாமன் உட்கார்ந்திருக்கிறான்.]

பூமாலை: எங்கே வந்தாய்...

(அவன் வைத்துள்ள 'வாழு' என்ற கையெழுத்துப் பிரதியில் 'வாழு' என்பதற்குக் கீழே ஆசிரியர் 'துறவி' என்று எழுதுகிறான்.)

பூமாலை: உன்னைத்தான் கேட்கிறேன், எங்கே வந்தாய்...

பரந்தாமன்: என் வீட்டுக்கு நான் வந்தேன்.

பூமாலை: உன் வீட்டில் நீயே இரு—நான் போய்விடுகிறேன்.

பரந்தாமன்: யாரும் போகவேண்டாம். நானே போகிறேன். செத்தே போகிறேன். அப்போதுதான் நீ நிம்மதியாயிருப்பாய்.

பூமாலை: நீயேன் சாகிறாய். இன்னும் எத்தனை பெண்களின் கண்ணீர் வெள்ளத்தில் நீச்சல் விளையாட்டு நடத்த வேண்டும் நீ.

பரந்தாமன்: போதும். நான் சாகவேண்டுமென்பதை நீ ஜாடையாகக் கூறிவிட்ட பிறகும் உயிரோடிருக்கவா போகிறேன் இல்லை, இல்லை.

பூமாலை: பயமுறுத்தாதே! உற்சாகச் சேறு, உல்லாசச் சகதி, இவைகளிலே உடலைப் புரட்டவேண்டும் என்பதையே வாழ்க்கை லட்சியமாகக் கொண்டவர்கள் சாவை நினைக்கக் கூட பயப்படுவார்கள் என்பது எனக்குத் தெரியும்.

பரந்தாமன் : இப்போது என்னதான் சொல்லுகிறாய்.

பூமாலை : நானு சொல்லவேண்டும். ஊரே சொல்கிறதே ! சூதுவாதறியாத கன்னி யொருத்தியின் வாழ்வைக் களவாடிய சூதாடியின் அக்காள் இவள் தானென்று சுட்டிக் காட்டிச் சொல்கிறதே. போதும் உன்னுல் வந்த வேதனை. தம்பியை ஒழுங்காகப் பார்த்துக்கொள் என்று அப்பாவும் அம்மாவும் ஆயிரம்முறை சொல்லியிருப்பார்களே. மிக ஒழுங்காகப் பார்த்துக் கொண்டேன். மிருகத்தைக்கூடப் பழக்கி விடலாமப்பா...உன்னை திருத்தவே முடியாது.....

பரந்தாமன் : உனக்கென்ன தெரியும் என் நிலைமை—அழுவாய். அதைப் பார்த்து ஊர்-அக்காள் நல்லவள் தம்பி கெட்டவன் என்று சொல்லும். உன் முகாரிக்கு முழு வெற்றி கிடைத்து விடும்...கல்யாணம் நின்றுவிட்டதே, அதனுல் விருந்து நடத்த வாங்கிய ஏராள சாமான்கள் வீணுகிவிட்டதே, பந்தல்காரனுக்குத் தந்த பணம் பாழாயிற்றே ; செலவு செய்த செல்வத்தை இனி மீண்டும் சேர்க்க முடியுமா என்ற கவலை உனக்கு. எனக்கல்லவா தெரியும் பணம் வீணுகாமல் பாமா பரிணயம் முடிந்திருந்தால் பிறகு என் மனம் படும் பாடு. உனக்கு எப்படித் தெரியும். அப்பா அம்மாவா இருக்கிறார்கள் என்னைப்பற்றி கவலைபட.

பூமாலை : தம்பி. அப்படியெல்லாம் சொல்லாதே. ஏன் கல்யாணத்தன்று ஓடிவிட்டாய்.

பரந்தாமன் : பாமா பரிசுத்தமானவள் அல்ல. அவளை நம்பி மோசம் போனேன்.....

பூமாலை : இருக்காது—யாரோ தவருக சொல்லியிருக்கிறார்கள். பாமா பத்தரைமாற்றுப் பசும்பொன்.

பரந்தாமன் : பொன்னல்ல—பொன் பூசிய பித்தளை.

பூமாலை : என்னுல் நம்பமுடியாது. உன் தவறுக்கு காரணம் கற்பிக்கிறாய்...

பரந்தாமன்: (கண்டிப்பாக) நம்பவேண்டாம். எனக்குக் கல்யாணம் பிடிக்கவில்லே. அவ்வளவுதானே...

பூமாலே: இந்த ஞானோதயம் முன்பே வந்திருக்கவேண்டும்.

பரந்தாமன்: பெரிய பெரிய மனிதர்களுக்கே பிறகுதான் உதயமாகியிருக்கிறது. நான் என்ன சாதாரணம்.....

('வாழு' புத்தகத்தை எடுத்துக்கொண்டு போகிறான்)

[பாடம் கற்கும் குழந்தைகள் ஓடி வருகின்றன பூமாலேயிடம்]

ஒரு குழந்தை: அக்கா, அக்கா. அம்புஜம் சொல்று, நாய் வாலே நிமிர்க்க முடியாதாம். நிஜந்தானு அக்கா!

பூமாலே: ஆமாம். சரி வாங்க படிக்கலாம்...

★

காட்சி 13] [கருடன் பதிப்பகம்

பரந்தாமன்: (வாழு புத்தகத்தைக் காட்டியபடி) கருடா! புத்தகம் எப்படி?

கருடன்: ரொம்ப பிரமாதம்.

பையன்: இந்த புஸ்தகத்திலே ரொம்ப நல்லாயிருக்கிறது....

கருடன்: என்னடா?

பையன்: மேல் அட்டைங்க.

கருடன்: சி! அட்டை மாத்திரந்தான் நல்லா இருக்கா? அச்சு கூடத்தான் மணி மணியா இருக்கு.

பரந்தாமன்: கருடா! அச்சு எப்படி, அட்டை எப்படி என்று விமர்சனம் கேட்கவில்லே; அறிவுரைகள் தந்திருக்கிறேனே, அது எப்படி என்றுதான்.

கருடன்: ஆஹா! அதைக் கேக்கணுமா...

(புத்தகத்தைப் பிரித்துப் பாடல்)

★

காட்சி 14] [ஸ்டேஜ்

[ஸ்டேஜில் பாட்டு. பாட்டு முடிந்ததும் பரந்தா மனும் கருடனும் ஆத்திரத்துடன் வெளியே போகிறார்கள்]

பாண்டியன் : தோழர்களே! வணக்கம்! ஒரு சில எழுத்தாளர் கள் இளம்பியிருக்கிறார்கள் ஆபாச நடையிலே, அர்த்தமற்ற அடுக்குத் தொடரிலே தேவையற்ற கேடுதரும் கருத்துக் களை நாட்டில் பரப்புவதற்காகவே. சமீபத்தில் 'வாழு' என்ற புத்தகம் வெளியாகியிருக்கிறது. மனிதன் தன் னுடைய லீலா விநோதங்களுக்காகவே உலகத்தில் அவ தரிக்கிறான் என்று அதன் ஆசிரியர் கூறுகிறார். வாழு என்ற கொள்கையும், வாழாதே, வாழ்வாவது மாயம் என்ற வரட்டுத் தத்துவத்தையும் தவறு என்று எடுத்துக் காட்டவே வாழு வாழ விடு என்ற நூலை எழுதினேன். அதை நாடகமாகவும் ஆக்கினேன். 'வாழு' என்பது சுய நலம். 'வாழாதே' என்பது அறிவீனம். 'வாழு வாழ விடு' என்பது பகுத்தறிவு. இந்த உண்மை உங்கள் ஆதர வால் வெற்றிபெற வேண்டும். நாடகத்திற்கு வந்துள்ள அனைவருக்கும் என் நன்றி வணக்கம்.

*

காட்சி 15] [புண்யகோடி வீடு–இரவு

[கதவு தட்டப்படுகிறது. பாண்டியன் திறக்க, புண்ய கோடி உள்ளே வருகிறான்.]

பாண்டியன் : அப்பா எங்கப்பா போயிருந்திங்க.

புண்யகோடி : எல்லாம் நல்ல காரியமாகத்தான்.

(உள்ளே வந்து உட்காருகிறான்)

பாண்டியன் : ஏம்ப்பா நாடகத்துக்கு வரவில்லை. நாடகம் ரொம்ப ஜோர்.

புண்யகோடி : கேள்விப்பட்டேன்.

பாண்டியன் : யாருப்பா சொன்னது ?

புண்யகோடி : நம்ம மில்லு தொழிலாளிங்க எல்லாம் வந்திரிந்தாங்கள்ள, அவுங்க சொன்னாங்க !

பாண்டியன் : மில் தொழிலாளிகள் வர முடிந்தது. மேஸ்திரி வர முடியிலே, இல்லேப்பா !

புண்யகோடி : கோபிக்காதே ! நானும் உன் விஷயமாகத்தான் டவுன் வரையிலும் போயிருந்தேன்... ...

பாண்டியன் : என்ன விஷயமப்பா !

புண்யகோடி : உனக்கு கல்யாணம் நிச்சயம் பண்ணீட்டேன்.

பாண்டியன் : இப்ப ஏன் எனக்குக் கல்யாணம். ஏதாவது நிலையா ஒரு வேலை கிடைச்சு... ...

புண்யகோடி : இருக்கிற வேலை போதும் ! எழுத்தாளன் வேலை நிலையான வேலைதானே. இந்தா பாரு தம்பி ! ரொம்ப நல்ல இடம்...பெண்ணும் நல்ல அழகு ! மறுக்காம கல்யாணம் பண்ணிக்க... ...

பாண்டியன் : பெண்ணை நான் பார்க்க வேண்டாமாப்பா ?

புண்யகோடி : தெரியுமே உன் சேதி எனக்கு ! அதுக்குத்தானே போட்டோவை வாங்கிட்டு வந்திருக்கேன்.

(கோட்டுப் பையைத் தேடி)

என்னடாது ஒவ்வொரு சலவைக்கு ஒவ்வொரு பாக்கட்டா திங்கிறான்..... (போட்டோவை எடுத்துக் கொடுத்தல்)

புண்யகோடி : என்னப்பா சொல்றே !

பாண்டியன் : உங்களிஷ்டம்.

புண்யகோடி : அப்படிச் சொல்லு ராஜா ! நாளைக்கே மில் முதலாளி கிட்ட போயி கல்யாணத்துக்குக் கொஞ்சம் பணம் கேக்கிறேன். (ஆத்திரமாக) அவன் எங்க தரப்போறான். கஞ்சன்.

பாண்டியன் : என்கிட்டேயே பணம் இருக்குப்பா !

புண்யகோடி : அப்போ சீக்கிரமே கல்யாணத்தை நடத்திடலாம்.

(பாண்டியன் புன்னகை)

★

காட்சி 16] [கருடன் பதிப்பகம்—பகல்

[கருடன் திருமணப் பத்திரிகை படிக்கிறான்]

கருடன் : சிங்க நல்லூர் சிவசக்தி மில்ஸ் மேஸ்திரி புண்யகோடியின் மகன் எழுத்தாளர் பாண்டியனுக்கும், கோவை மெர்ச்சண்ட் குணரத்னம் திருச் செல்வி பாமாவுக்கும் திருமண விழா மணமகள் இல்லத்தில் சிறப்பாக நடைபெறும். தங்கள் சுற்றமும் ....

(பரந்தாமான் பத்திரிகையை வேகமாகப் பிடுங்கி கசக்கி எறிதல்)

கருடன் : அந்தப் பயல் பாடின்யன் நம்ப விஷயத்திலே குறுக்கிட்டு கொண்டேயிருக்கிறான். அன்னைக்கு என்னடான்னா நாடகம் நடத்தி நம்ம கொள்கையை கிண்டல் பண்றான். இன்னைக்கு என்னடான்னா நம்ப கல்யாணம் பண்ணிக் வேண்டிய பெண்ணை ...

பரந்தாமன் : ஏய் ...

கருடன் : இல்லே. நீ கல்யாணம் பண்ணிக்க வேண்டிய பெண்ணை ...

பரந்தாமன் : யார் விட்டார்கள்.

★

காட்சி 17] [பாமா அறை—இரவு

[பாமா சோகப் பதுமையாக அமர்ந்திருக்கிறாள், மறு நாள் நடைபெற இருக்கும் மண விழாவை நினைத்து ! கதவு தட்டப்படுகிறது. பாமா போய் கதவைத் திறக்கிறாள். பரந்தாமன் வருகிறான்]

பரந்தாமன் : பாமா !

(பாமா திடுக்கிடுகிறாள்)

பாமா : இது என்ன அக்ரமம். எனக்கொன்றும் புரியவில்லையே போய்விடுங்கள் தயவு செய்து...

பரந்தாமன் : ஸ்...சத்தம் போடாதே ! தூங்குபவர்கள் விழித்துக் கொள்வார்கள். பாமா என்னைப் பார் ! பார்க்கமாட்டாயா !....ஏன் பாமா என்னை இப்படி ஏமாற்றினாய்...

பாமா : ஏமாற்றுவது எனக்குத் தொழிலல்ல.

பரந்தாமன் : சரிதான்...கல்யாண தினத்தன்று காணமற் போய் விட்டானே காதலன். எங்கே போனான். என்ன ஆனான். என்பதைப் பற்றி யெல்லாம் கவலைப்படாமல், அடுத்த காதலனை அவசரமாகத் தேர்ந்தெடுத்த நீ....எதுவும் தெரியாதபோதை ! நான் ஏமாற்றுக்காரன்—அப்படித்தானே....

பாமா : எங்கே போனீர்கள். இந்த லோகத்தைவிட்டு சொர்க்க லோகத்துக்கா ?....

பரந்தாமன் : சொர்க்கலோகம் போனாலும், அங்கே சொக்க வைக்கும் திலோத்தமை, மயக்குமொழி மேனகா அத்தனை பேரையும் உதறித் தள்ளிவிட்டு உன் சுந்தர முகத்தை நினைத்தபடி ஆகாயத்திலிருந்து குதித்திருப்பேனே, ஒரு சூழ்ச்சிக்கார லோகத்துக்குப் போய்விட்டேன் பாமா ! ஒரு சூன்யக்காரன் ஏமாற்றி விட்டான் பாமா !

பாமா : என்ன சொல்கிறீர்கள் !

பரந்தாமன் : யாரோ ஒரு மந்திரவாதி....சாப்பிடுவதற்கு ஒரு காயகல்பம் இருக்கிறது. சாப்பிட்டால் எண்பது வயது வரையில் இளமை மாறாது என்றான். நம்பினேன், சாப்பிட்டேன். உனக்கும் வாங்கிவர எண்ணினேன். அவன் என்னை எங்கேயோ கொண்டு போய் விட்டான். என்னிடமிருந்த பத்தாயிர ரூபாயையும், உனக்காக நான் வாங்கிய வைர மாலையையும் திருடிக்கொண்டு எங்கேயோ போய்விட்டான்.

பாமா : போலீஸாருக்குச் சொல்லவில்லையா.

பரந்தாமன்: இந்த வெட்கக்கேட்டை எப்படி வெளியில் சொல்வது! மனமொடிந்து அலைந்து திரிந்து இங்கு வந்தேன்..... வந்தால், நீ வாழ்க்கைக்கு வேறு திட்டம் போட்டுவிட்டாய்...பாமா! நான் ஏமாற்றப்பட்டவன்தானே? அந்த மந்திரவாதியைவிட நீ பெரிய ஏமாற்றுக்காரியாகி விட்டாயே, பாமா!....

பாமா: (பரந்தாமனின் காலைப்பிடித்துக் கொண்டு விம்மியபடி) மன்னித்துவிடுங்கள் என்னை. அப்பாவின் ஆத்திரத்தை என்னால் எதிர்க்க முடியவில்லை.

பரந்தாமன்: பொழுதுவிடிந்தால் உனக்குத் திருமணம். வேறொருவன் மனைவி! உன்னை மன்னிக்க நான் யார்!

பாமா: என்னைக் காப்பாற்றுங்கள். இப்போதே அப்பாவிடம் சொல்லி கல்யாணத்தை நிறுத்தி விடலாம்....

பரந்தாமன்: நிறுத்த மாட்டார். நம்முடைய காதல் நீடிக்க, ஒரே ஒரு வழிதானிருக்கிறது.

பாமா: என்ன வழி (அழுகிறாள்).

பரந்தாமன்: அழாதே! அன்புக்கரசி! அழகுமணி மாளிகையின் அலங்காரத் திருவுருவே. அழித்தெழுதா சித்திரமே— ஆடிவரும் பொன் விளக்கே! கட்டாணி முத்தழகி! கண் கவரும் ரத்தினமே! உன் கண்ணில் நீர் என்னால், என் உள்ளம் களங்குதய்யோ! அழாதே பாமா!.... அழாதே!

பாமா: நாம் வாழ வழி சொல்லுங்கள்.

பரந்தாமன்: வாழ வழி! இப்போதே இருவரும் வெளியேறி விடுவதுதான்....

பாமா: ஆ!

பரந்தாமன்: தங்கமே கேள்! தந்தைக்கு ஒரு கடிதம் எழுதி வை. "திருமணம் பிடிக்கவில்லை—வெளியேறி விட்டேன்" என்று சிந்தைக்கினியவளே! சிங்கார மயிலே.... உம் சீக்கிரம்... எழுது கண்ணே! என் எழுதாத ஓவியமே எழுது!

★

காட்சி 18] [பாண்டியன் அறை

[பாண்டியன் பாமாவை மணக்கப்போகிற மகிழ்ச்சியில் இருக்கிறான். வெளியிலே மாப்பிள்ளை ஊர்வலத்துக்கு ஏற்பாடு நடக்கிறது. உள்ளே]

புண்யகோடி : சீக்கிரம் புறப்படுடா தம்பி! எல்லாம் தயாரா இருக்கு.

பாண்டியன் : ஊர்வலம் வேணுமாப்பா? எனக்கென்னமோ பிடிக்கலே!

புண்யகோடி : அது கெட்டுது போ! ஊர்வலமே வேண்டாமா! நம்ப என்ன அவாளை இவாளை கூப்பிட்டு கச்சேரியா வைக்கப் போறோம். கொஞ்சம் சிறப்பா, வெறும் மாப்பிள்ளை ஊர்வலம் கூடவா கூடாது-பெண் உன் பக்கத்திலே இருக்கப் போறதில்லை நீ ஏன் வெட்கப் படுறே.

(பாண்டு வாத்யம் திடீரென நிற்கிறது. ஒருவன் புண்ய கோடியின் காதில் பெண் ஓடிவிட்டாள் என்ற செய்தியைக் கூறுதல். பாண்டியன் திகைப்பு)

*

காட்சி 19] [பூமாலை ஹால் —பகல்

[பூமாலை ஊருக்குப் புறப்பட ஏற்பாடு செய்கிறாள்— அவளிடம் பாடம் கற்கும் ஒரு பெண் வந்து]

பெண் : பட்டணத்துக்கு ஏம்மா போறீங்க...

பூமாலை : குமுதாவுக்கு பரீக்ஷை முடிவு ரெண்டுநாளில் தெரிந்து விடும். அவளை அழைத்து வருவதற்காகப் போகிறேன் ...

குண்டுமணி : (வந்தபடி) அம்மா! அம்மா! விஷயம் தெரியுமா! நம்ப சின்ன எஜமானுக்குப் பாத்த பெண்ணு.....

பூமாலை : இன்னைக்கு கல்யாணம் அதுக்கு என்ன?

குண்டுமணி : பெண்ணு நேத்தி ராத்திரி ஓடிட்டுதாம்!

பூமாலை : அப்படியா! (யோசனை) ம்...பரந்தாமன் எங்கே?

குண்டுமணி : அவரு...அவரு...ம்...அவருகூட மெட்ராஸ் போக ணும்னு கருடன் கிட்ட சொல்லிக்கிட்டு இருந்தாரு.

பூமாலை : (சிந்தனை) ம்...சரி புறப்படு. ரயிலுக்கு நேரமாச்சு.

★

காட்சி 20] [Rail Carriage—பகல்

[பூமாலை ரயிலில் உட்கார்ந்திருக்கிறாள்.]

குண்டுமணி : அம்மா! அப்ப நான் அடுத்த வண்டில ஏறிக் கிறேன்.

(போகிறான். பாண்டியன் வந்து அதேCarriageல் ஏறு கிறான். அவன் எழுதிய புத்தகமான 'வாழு வாழவிடு' என்பதின் மூலம் பூமாலை அவனை அடையாளம் புரிந்துகொள்கிறாள். பிறகு டிபனை எடுத்து)

பூமாலை : சாப்பிடுங்கள்...

பாண்டியன் : இல்லை வேண்டாம்.

பூமாலை : கொஞ்சம் எடுத்துக் கொள்ளுங்கள்.

பாண்டியன் : ரொம்ப நன்றி! நீங்கள் சாப்பிடுங்கள்!....

பூமாலை : நீங்கள் எந்த ஊருக்குப் போகிறீர்கள்.

பாண்டியன் : நானு...எனக்கே தெரியவில்லை.

பூமாலை : மிகவும் மனவேதனை அடைந்திருக்கிறீர்கள். இதெல் லாம் உலகத்தில் சகஜம். பொருட்படுத்தக் கூடாது...

பாண்டியன் : என்னைத் தெரியுமா உங்களுக்கு!...

பூமாலை : தெரியும்... இதோ... (புத்தகத்தைக் காட்டுதல்)

பாண்டியன் : (தலையைத் தாழ்த்தியபடி) வெட்கக் கேடு... அய்யோ...

பூமாலை : வருத்தப்படாதீர்கள்.

பாண்டியன் : என் கதை முழுதும் புரியுமா உங்களுக்கு.

பூமாலை : (சஞ்சலமுடன்) புரியும். இன்று மணமகனுய் இருக்க வேண்டிய நீங்கள்.....

பாண்டியன் : போதும்...உலகத்தின் முகத்திலேயே நான் விழிக்கக் கூடாது!

பூமாலை : நீங்கள் ஒரு தவறும் செய்யவில்லையே.

பாண்டியன் : நானு தவறு செய்யவில்லை. மானம் மரியாதைக்குக் கட்டுப்பட்டு வாழ்ந்த நான், இன்று அவமானச் சின்னமாக மாறிவிட்டேன், என் அறிவீனத்தால். கண்டவர் காரி உமிழ, காணுதவர் கேலி பேச, கண்ணிருந்தும் குருடனுய், காதிருந்தும் செவிடனுய் கள்ளி யொருத்தியைப் பற்றி தீர விசாரிக்காமல் கல்யாண மாப்பிள்ளையாக வேஷங் கட்டிக் கொண்டு ஓடி வந்தேனே முட்டாள். நானு தவறு செய்யவில்லை.

பூமாலை : சும்மாயிருங்கள். சென்னைக்கு வந்து எங்கள் வீட்டில் கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொள்ளலாம்.

பாண்டியன் : ஓய்வு. இந்த வேதனையை விரட்ட எந்த ஓய்வாலும் முடியாது.

(ரயில் போகிறது)

*

காட்சி 21] [சென்னை குமுதா வீடு—பகல்

சமையல்காரன் : அம்மா! சின்னம்மா வர்ருங்க!

(குமுதா ஓடி வருகிருள்)

குமுதா : சின்னம்மா!

பூமாலை : குமுதா! (தழுவிக் கொள்ளல்)

குமுதா : (பாண்டியனைப் பார்த்து) சின்னம்மா இவரு ...

பூமாலை : சொன்னல் தெரியுமா உனக்கு?

குமுதா : சொல்லாமலே தெரியும். "வாழு, வாழ விடு" மன்னிக்கவும். தங்கள் பெயர் பாண்டியன்தானே!

பாண்டியன் : ஆமாம்.

சமையல்காரன் : யாருங்க. அந்த கோவலனைக் கொன்னுரே அந்தப் பாண்டியனு ...

குண்டுமணி : ஆக்கும்...சௌந்தர பாண்டியன். ஆளைப்பாரு ! ...

குழுதா : வாருங்கள் முதலில் காபி சாப்பிடுவோம் ...

*

காட்சி 22] [ஹோட்டலறை

பாமா : எத்தனை நாளைக்கு ஹோட்டலில் தங்கியிருப்பது. சீக்கிரம் ஒரு வீடு பாருங்கள்.

பரந்தாமன் : வீடு பார்ப்பது இருக்கட்டும்...வா இன்றைக்காவது ஊரைச் சுற்றிப் பார்த்துவிட்டு வரலாம்.

பாமா : ஊஹூம்...முதலில் குடும்பம் ஆரம்பிக்க வேண்டும்.

பரந்தாமன் : ஆரம்பிப்போமே. ஏன் அவசரப்படுகிறாய். குடும்பத்துக்கும் சென்னையைச் சுற்றிப் பார்ப்பதற்கும் என்ன சம்பந்தம் ?

பாமா : சென்னையில் என்ன இருக்கிறது ?

பரந்தாமன் : சென்னையில் என்ன இருக்கிறதா ? கண்காட்சி சாலையைப்பற்றி கதை கதையாகச் சொல்கிறார்கள். கதிரவனைப் பழிக்குமாம் கலங்கரை விளக்கம். மிருகக் காட்சி சாலையும், மெரினு கடற்கரையும் பார்க்காத கண்கள் பாபக் கண்களாம். ம்...புறப்படு ! அன்புக்கரசி, அழகு மணி மாளிகையின் அலங்காரத் திருவுருவே. அழித்தெழுதா சித்திரமே. புறப்படு. வா. (புறப்படுதல்)

*

காட்சி 23] [மிருக காட்சிசாலை

[கூண்டில் புலி]

பரந்தாமன் : (பாமாவிடம்) புலி வாயில் உன்னைத் தள்ளிவிட்டால் என்ன செய்வாய் ?

பாமா : புல்லாக மாறிவிடுவேன்....புலி பசித்தாலும் புல்லைத் தின்னுது !

காட்சி 24] [கடற்கரை

பாமா : நீலக்கடல் நேர்த்தியான காட்சி !

பரந்தாமன் : இந்தக் கடல் திடீரென்று பொங்கிவிட்டால்...

பாமா : அழகுக்குப் பக்கத்தில் எப்போதும் ஆபத்து இருக்கும்.

பரந்தாமன் : இது பலருக்குப் புரிவதேயில்லை.

★

காட்சி 25]

[தமயந்தி தூங்கும்போது நடுராத்திரியில் அவளை ஏமாற்றி விட்டு, வஞ்சித்து விட்டு சேலையில் பாதியை கிழித்துக்கொண்டு நளன் புறப்பட்டு ஓடிப் போனான் ! போனான், போனான், புண்ணிய வதியைத் தவிக்கவிட்டுப் போனான். போயே போய்விட்டான்.]

[அதேபோல பரந்தாமன், நளனைப் பின்பற்றி பாமா வைத் தவிக்கவிட்டுப் போய்விட்டான். பாமா பரந்தாமனைக் காணுது திகைப்பது.]

கானகத்தில் காதலியை காரிருளில் கைவிட்டுப் போன துவும் வேந்தர்க்குப் போதுமோ ...

★

காட்சி 26]

(பாமா ஓடுகிறாள்)

[பாமா பைத்தியக்காரி போலானாள். பரிதாபத்திற் குரியவளானாள். ஓடினாள், எங்கேயோ ஓடினாள், ஒரு முடிவு தேடி ஓடினாள். வழ வழப்பான தார் ரோடு, வஞ்சிக்கப்பட்ட அவளுக்குப் பாதை காட்ட முடியவில்லை. மாலுமிகளுக்கு வழி காட்டும் தீப ஸ்தம்பம் திக்கற்ற அவளுக்கு திசை காட்ட முடிய வில்லை. கொந்தளிக்கும் கடல் குமுறி எழும் அவள் உள்ளத்தோடு போட்டிபோட முடியவில்லை. உறுமு

வது புலியல்ல. உலகம்! உலகம்! அவள் வெறுத்து விட்டு வந்த உற்றார் உறவினர் தாய் தந்தையர் வாழும் உலகம்! அந்த உலகத்தின் முகத்திலே இனி அவள் விழிக்க முடியாது! விழிக்க முடியாது! விழிக்கவே முடியாது! (கடலோரத்தில் விழுகிறாள்)

*

காட்சி 27] [குமுதா விடு—சென்னை

குமுதா: குண்டுமணி! இன்னுமா டீ தயாராகவில்லை?

(மேலே இறங்கி வருகிறாள்—பூமாலை அங்கு வருகிறாள்)

குமுதா: சின்னம்மா! நீ அவருக்கு டீ அனுப்பச்சொல்லு. நான் போயி கேமராவுக்கு பிலிம் வாங்கிட்டு வர்றேன்...

(குண்டுமணி டீ கொண்டுவருதல்)

பூமாலை: குண்டுமணி இரு!...நான் கொண்டுபோறேன் டீயை. நீ போய் வேலையைப் பாரு!...

குண்டுமணி: சரிம்மா...

(வாங்கிக்கொண்டு மாடிக்குப் போகிறாள்)

குண்டுமணி: (தனக்குள்) பாண்டியனுக்கு உபசாரம் பண்ற துன்னு அம்மா முன்னுடி நிக்கிறாங்களே என்ன விஷயம். ஆங் சேசே! அம்மா நல்லவங்க...ம்...யாரு கண்டா. அப் பேர்பட்ட (சந்தேகம்) எப்பேர்பட்ட ... ... சரிசரி வேலைக் காரனுக்கு என்ன இதெல்லாம்... ...

*

காட்சி 28] [குமுதா விடு—சென்னை

[பாண்டியனை நிற்கவைத்து குமுதா போட்டோ எடுக்கிறாள்]

குமுதா: நில்லுங்க சரியா—ஆங்-கொஞ்சம் சிரிங்க ... கொஞ்சம் கொஞ்சம்...ஸ்டடி பிளீஸ், ரைட்...தேங்க்ஸ்...

(போட்டோ எடுத்துவிடுகிறாள்)

பாண்டியன்: இங்கே கொடு. நான் உன்னைப் பிடிக்கிறேன்.

குமுதா : என்னது...

பாண்டியன் : படம் பிடிக்கிறேங்கிறேன்.

குமுதா : அதானே ! (வெட்கமுடன்)

பாண்டியன் : (கேமராவை வாங்கி) ம்...ஸ்டடி பிளீஸ்....

(குமுதா நடராஜர் போல அபிநயம் பிடித்து நிற்கிறாள்)

பாண்டியன் : இது என்ன இது !

(அப்போது பூமாலை வருகிறாள்)

குமுதா : சின்னம்மா !

பூமாலை : ஏங்கண்ணு !

குமுதா : நாங்க தனித்தனியா போட்டோ எடுத்துட்டோம். ரெண்டுபேரும் நிக்கிறோம் நீ எடு !

பூமாலை : ஊஹூம் குமுதா ! எனக்கு எடுக்கத் தெரியிலே நீயே எடு !

குமுதா : போசின்னம்மா ! (சிணுங்கியபடி கேமராவை வாங்கிக்கொண்டு) சரி சின்னம்மா ! நீங்க ரெண்டுபேரும் நில்லுங்க நான் எடுக்கிறேன். (களங்கமில்லாமல்)

பூமாலை : நானு.

குமுதா : போய் நில்லு சின்னம்மா !

(பூமாலை பாண்டியன் அருகே போய் நிற்கிறாள். குமுதா போட்டோ எடுக்கப் போகிறாள்)

குமுதா : ஸ்டடி பிளீஸ்...

(குண்டுமணியின் சந்தோஷ கூச்சல்-குமுதா நடுங்கியபடி கேமராவைக் கீழே போட்டுவிடுகிறாள்)

பூமாலை : ஏ...என்ன...என்ன ?

குண்டுமணி : (பேப்பரைக் காட்டி) குமுதாம்மா பாஸ் ! பாஸ் ! பாஸ் !

குமுதா : பாஸா !

பூமாலை : பாஸ் ! குமுதா நீ கெட்டிக்காரி !

(தழுவிக்கொள்ளுதல்)

பாண்டியன் : குமுதா கங்ராஜுலேஷன்ஸ்...

(இருவரும் கை கொடுக்க முயலல்)

குண்டுமணி : (பத்திரிகையைக் காட்டி) இந்த பாருங்க நம்பரு. பதினாறு இருபத்தினாலு....

பாண்டியன் : இருபத்தினாலு...அட என் வயசுகூட இருபத்தி நாலுதான்.

குமுதா : என் வயசு பதினாறுதான்.

குண்டுமணி : பொருத்தமான நம்பருதான்.

பூமாலை : (அதட்டல்) ஏய்....சும்மா இரு ...

குண்டுமணி : இல்லிங்க. குமுதாம்மா எண்ணும் பதினாறு வயசா மார்க்கண்டி மாதிரி இருக்கணுங்கிறேன்.

(எல்லோரும் சிரிப்பு)

பூமாலை : அப்ப ஊருக்குப் புறப்படலாமா !

குமுதா : அவர்...

குண்டுமணி : அவரைப்பத்தி நீங்க கவலைப்படவேண்டதில்லம்மா. இனிமே நம்ப விரட்டினாகூட அவர் நம்பளவிட்டுப் போமாட்டாரு !

★

காட்சி 29] [கருடன் பதிப்பகம்

[பரந்தாமன் வருதல்]

கருடன் : வாப்பா ! இரண்டு மூணு வாரமா ஏக ஜாலியா இருந்திருக்கும் life...

பரந்தாமன் : பாவம்...சென்னையிலே குடும்பம் அமைத்து என்னை சம்சார சிறையிலே போடலாமென்று துடித்தாள் பாமா.... எங்கே போனாளோ என்ன ஆனாளோ !....

கருடன்; ம்...சம்சாரமாவது ஒண்ணாவது மனுஷன் free-யா இருக்கணும், என்னுட்டம். நமக்கு உதாரணமாகத்தானே கடவுள் படைத்திருக்கிறான், மலருக்கு மலர் தாவுகிற வண்டு...ம்...

பையன்: மரத்துக்கு மரம் தாவுகிற மந்தி

கருடன்: டெ...

பையன்: மறந்துட்டிங்களோன்னு ஞாபகப்படுத்தினே.

கருடன்: கம்பர் மகன் அம்பிகாபதி! சும்மாயிருடா முந்திரிக் கொட்டை!

★

(தெருவிலே தொழிலாளர் ஊர்வலம் செல்லும் ஒலி கேட்கிறது.)

கோஷம்

சிவசக்தி மில் தொழிலாளர் கூலியை உயர்த்து. தொழிலாளர் சம்பளத்தை உயர்த்து....தொழிலாளர் சம்பளத்தை உயர்த்து.

★

பரந்தாமன்: என்னடா?

பையன்: நமக்குச் சம்மந்தமில்லே.

கருடன்: நமக்காமில்ல நமக்கு! இவரும் சேந்துக்கிறாரு விஷயத்தை சொல்லு கழுதை!

பையன்: மில் தொழிலாளிங்க சம்பள உயர்வுக்காக கிளர்ச்சி பண்றாங்க!...

பரந்தாமன்: அப்படியா? அப்ப நமக்கு சம்பந்தமில்லே.

கருடன்: ஏன் இல்லே? எனக்கு ஒரு வழி தோணுது. இந்தக் கிளர்ச்சியை சாதகமாக்கிக்கிட்டு பாட்டாளிகளைப்பத்தி ஒரு புஸ்தகம் எழுதினா இந்தச் சமயம் நல்லா விக்கும்.

பரந்தாமன்: ஆமாம்....இன்றைக்கே எழுத ஆரம்பிக்கிறேன். பெயர் என்ன வைக்கலாம்—புஸ்தகத்துக்கு...ஆங்....சரி.... பாட்டாளியின் குரல்.

கருடன்: சபாஷ்! பாட்டாளியின் குரல். என்ன மூளை! என்ன மூளை!

பையன்: முதல்ல என் குரலே கொஞ்சம் கவனிங்க!

பரந்தாமன்; என்னடா?

பையன்: எனக்கு சம்பளம்....

கருடன்: (கோபமாய்) டேய்! மில் தொழிலாளிகளுக்காக புஸ் தகம் எழுதினு ...

பையன்: நானும் ஒரு தொழிலாளிதானுங்க!...

கருடன்: பெரிய தொழிலாளி இவரு! பரந்தாமா! நீ எழுத ஆரம்பிச்சுடு! லாபத்திலே உனக்கு கால், எனக்கு முக்கால்.

பையன்: எனக்கு...

கருடன்: அறை! (அறைதல்)

(பையன் அழுதல்)

★

காட்சி 30] [பூமாலை வீடு – பகல்

[பாமாவின் தந்தை குணரத்னம் பூமாலையிடம் தன் மகளைப்பற்றி வருத்தமுடன் கூறிக்கொண்டிருக் கிறார்]

குணரத்னம்: அவள் மாத்திரமா போனாள். வீட்டை அடமானம் வச்சு, செஞ்சுப்போட்ட ஆயிரம் ரூபாய் நகையோடவும் போய்ட்டா!

பூமாலை: ஆயிர ரூபாய் நகைதானே. இந்தாருங்கள்...(தன் அணிகலன்களைக் கழற்றிக்கொடுத்து) இதை வைத்துக் கொள்ளுங்கள். (கொடுக்கிறாள்)

குணரத்னம்: (அதை வாங்கி) ஏன்? இதை நான் யாருக்குப் போட்டு அழகு பார்க்கப் போகிறேன். நீயே வச்சுக்க. (கீழே போட்டுவிட்டு) எனக்குத் துரோகம் பண்ணுன வுங்க தொலஞ்சு போய்டுவாங்க!...

(போகிறார். பூமாலை சோர்ந்து சோபாவில் உட்காருகிறாள். பரந்தாமன் வந்து கீழே கிடக்கும் நகைகளைப் பார்த்து)

பரந்தாமன்: அக்கா. இது ஏது நகை?

(பூமாலை மௌனம்)

பரந்தாமன்: ஏன் இப்படிக் கீழே கிடக்கிறது. (எடுக்கிறான்) எல்லாம் பொன்னகைதானே?

பூமாலை: இல்லை. துரோகத்தின் புன்னகை!

பரந்தாமன்: (புரியாதவன்போல) என்னடா இது! என்னக்கா விஷயம்!...

பூமாலை: மான் தோலிலே வேங்கை அதிக நாள் வாழமுடியாது பரந்தாமா! அதையும் வேட்டையாட ஒரு வேடன் வந்துவிடுவான். ஊர்ப் பெண்களிடம் விளையாடுகிறவர்களை உயிரோடு விடுவதில்லை மக்கள்!...அதை ஞாபகம் வைத்துக் கொள்!

பரந்தாமன்: எப்போது வீட்டுக்கு வந்தாலும் இந்த ஒப்பாரி தானா? மனிதன் நிம்மதியா வாழவே முடியாது போலிருக்கிறது!

பூமாலை: மனிதன் தான் மாத்திரம் வாழக்கூடாது. மற்ற வரையும் வாழவிடவேண்டும்!

பரந்தாமன்: சரி போதும் போதும். காவியாடை கட்டிக் கொண்டு எங்கேயாவது தொலைய வேண்டியதுதான்.

பூமாலை: ஏன்! அந்தத் திரைமறைவிலே சுலபமாக ஏமாற்ற முடியுமென்று கருதுகிறாயா? பெண் இனத்தை மண்ணில் நெளியும் புழுக் கூட்டமாக மதித்துவிட்ட பித்தனே! எங்கு போனாள் பாமா? சொல். எங்கே அவளைத் தவிக்கவிட்டாய்? எரிமலைமீது விளையாட வந்த அந்த ஏழைச் சிறுமியின் கதி என்னவாயிற்று. சொல்! சொல்ல மாட்டாயா பாவி! எங்கே பாமா?

பரந்தாமன்: பரலோகத்தில் போய் தேடிப்பார்!

(போய்விடுகிறான்)

பூமாலை : (கண்ணீர் பெருக) ஆ ! அம்மா ! அப்பா ! உங்களுக்குக் கொடுத்த உறுதிமொழியை என்னால் காப்பாற்ற முடியாது போலிருக்கிறதே !

★

காட்சி 31] [பூமாலை விடு

[பாண்டியன் சிந்தனையிலமர்ந்திருக்கிறான் எழுதிய படியே...குமுதா "பாண்டியன் என் சொல்லே" என்ற பாட்டை தன் காதலே வெளியிட்டுப் பாடுகிறாள் அபிநய அசைவுடன்]

பாண்டியன் : உன் சொல்லைத் தாண்டிப்போனதே கிடையாதே!

குமுதா : பாண்டியன் !

(இருவரும் தழுவிக்கொள்ளுதல்)

★

காட்சி 32] [கருடன் பதிப்பகம்

[பேப்பர் பேல் கட்டு தூக்கிவந்த கூலி ஆள் ஆத்திரத்தோடு]

கூலி : இவ்வளவு பெரிய சுமை எங்கேருந்து தூக்கிட்டு வந்திருக்கேன். ஒழுங்காக காசை கொடுய்யா...

பரந்தாமன் : எட்டணுதான் அதோட மரியாதையா போ ! நான்சன்ஸ்...

கூலி : ஏன்ய்யா பெரிய மனுஷன் சின்ன வார்த்தையெல்லாம் பேசுரே. நான்சன்சாம்ல...

(பரந்தாமன் ஓங்கி இரண்டு மூன்று அடிகொடுத்தல்)

கூலி : அடிக்காதிய்யா. நான் தொழிலாளி !...

பரந்தாமன் : தொழிலாளி. தொழிலாளியாம் தொழிலாளி... ஓடு....ஓடு...

(கூலிக்காரன் ஓடுகிறான் வெளியே)

கருடன்: கொடுக்கிற காசை வாங்கிக்கிலேன்னு, இந்தப் பசங்களே யெல்லாம் இப்படித் தான் உதைக்கணும்.

(ஆபீஸ் பையனைப் பார்த்தல்—வாய் பொத்தி நிற்கிறான்)

பரந்தாமன்: பாட்டாளியின் குரல்! கருடா! பேரு நல்லா அமஞ்சு போச்சில்ல. (புத்தகத்தை புரட்டியபடி)

கருடன்: பேரு மட்டுமா! இரண்டு நாள்ள 5000 காப்பி வித்திருக்கு! அப்றம் என்ன?

(பரந்தாமன் சிகரெட் பற்ற வைக்கிறான். மேசையில் "பாட்டாளியின் குரல்"—இருக்கிறது. புண்யகோடி வருகிறான்).

கருடன்: யார் நீங்க!

புண்யகோடி: தெரியலியா என்னை. நான்தான் தொழிளாளர் தலைவன். நான் ஏன் வந்திருக்கேன் தெரியுமில்ல....

கருடன்: என்னுங்க....

(கருடன் பரந்தாமன் விழித்தல்)

புண்யகோடி: தொழிலாளி சம்பளம் ஜாஸ்தியா கேட்டா, அதை சிந்திச்சு பார்க்க...

கருடன்: இல்லிங்க, அவன் சம்பளம் கேக்கிலே. இந்த பேப்பர் பேலே தூக்கிட்டு வந்தான்...

புண்யகோடி: அது இல்லிங்க! நான் மில் தொழிலாளியை சொல்கிறேன்.

கருடன்: ஆமாம் ஆமாம். தொழிலாளிகள் பிரச்சினையை கவனிக்காத முதலாளிகளே சும்மாவிடக்கூடாது.

பரந்தாமன்: கருடா! வாயால் கத்தி பயன் என்ன? பாட்டாளிகளின் குரல் பலம் பெறவேண்டுமானால், பெரிய கிளர்ச்சி நடத்தவேண்டும்...

புண்யகோடி: அப்படிச் சொல்லுங்க...

பரந்தாமன் : இந்த நாட்டின் முதுகெலும்புகள் பாட்டாளிகள். ஒரு தேசத்தின் உயிரே தொழிலாளி வர்க்கம். அதைத் துவண்டுபோக விடக்கூடாது! நான் கங்கணம் கட்டி விட்டேன். தொழிலாளி விடுதலைப் போராட்டத்தை விரைவில் தொடங்கவேண்டும்.

புண்யகோடி : சபாஷ்! சபாஷ்! தங்களைப்போன்ற உண்மை யான உறுதி படைத்த வாலிபர்கள் இருந்தால் உலகத் துக்கே ஒரே நாளில் விமோசனம் பிறந்துவிடும். தாங்கள் எழுதிய பாட்டாளியின் குரல் படிக்கும்போது, படுகிழவ னையும் பாலகனுக்குகிறது. கோழையையும் புலியாக்கு கிறது. நாளையதினம் நடைபெறும் டுபாதுக்கூட்டத்திற்கு தாங்கள் தலைமை வகித்தாக வேண்டும்.

பரந்தாமன் : தலைமையா? நானா! வேண்டாம் நான் பொது ஜனத் தொண்டன்.

புண்யகோடி : இல்லை தம்பி! அப்படிச் சொல்லக்கூடாது! ஆயிரக்கணக்கான தொழிலாளரும் விரும்புகிறார்கள்.

பரந்தாமன் : தொழிலாளர் என் தோழர்கள்! அவர்கள் அன்புக் கட்டளையை நிறைவேற்றுகிறேன். இனி இந்த உலகத் தில் தொழிலாளி நினைத்ததெல்லாம் நடக்கவேண்டும்.

கருடன் : ஆமா...ஆமா...

(ஆபீஸ் பையன் கருடனிடம் கையை நீட்டி)

பையன் : சம்பளம் ஜாஸ்தியா...

கருடன் : ஏ போடா! பெரிய உலக விஷயம் பேசிட்டு இருக்கும்போது...

புண்யகோடி : அப்ப நான் வர்ரேங்க...

பரந்தாமன் : நமஸ்காரம்.

புண்யகோடி : (கருடனிடம்) நான் வர்ரேங்க!

★

[போலீஸ் 'பாரா'வோடு கூடிய ஆயிரக்கணக்கான தொழிலாளிகள் பரந்தாமனின் சொற்பொழிவுக்குக் காத்திருக்கின்றனர்]

புண்யகோடி : சகோதரர்களே! நாமெல்லோரும் வெகு ஆவலோடு எதிர்பார்த்திருக்கும் தலைவர் பரந்தாமன் இன்னும் சிறிது நேரத்தில் வந்துவிடுவார். எல்லோரும் அமைதியாயிருங்கள்! இன்றையதினம் புரட்சிகரமான திட்டங்கள் பல நிறைவேற்றப்பட இருக்கிறது. நாம் யாருக்கும் பயப்படப் போவதில்லை. அச்சமில்லை அச்சமில்லை அகில மெல்லாம் எதிர்த்துவரினும் அச்சமில்லை.

கூட்டம் : ஆமாம் ஆமாம்....

(திடீரென வெடிசப்தம் கேட்கவே பொதுமக்கள் சிதறுகிறார்கள்—ஒரே அல்லோலம். அப்போது கருடன் கார் ஓட்ட, பரந்தாமன் அமர்ந்திருக்க, பழைய ஆஸ்டின் கார் அங்கு வருகிறது. அந்தக் காரின் புகைபோக்கும் கருவிதான் அந்த சப்தத்தை உண்டாக்கியதென்பது தெளிவாகிறது. பரந்தாமனும் கருடனும் வந்து மேடையில் அமர, பொதுமக்கள் அமைதி!)

புண்யகோடி : நாம் இதுவரையில் வழிமேல் விழிவைத்து ஆவலோடு எதிர்பார்த்துக்கிடந்த பாட்டாளித் தங்கம் பயமில்லா சிங்கம்—பரந்தாமன் நமது பங்கம் போக்க, இந்த சங்கத்திற்கு எழுந்தருளியுள்ளார். அவருக்கு இந்த மாலை அணிவித்து தலைமைவகிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். (ஒருவனிடம்) ஏய்...நீ ஆமோதிடா!

ஒருவன் : (நடுக்கமுடன்) பரந்தாமன் தலைமை வகிப்பதை நான் ஆ...ஆ...மோதிக்கிறேன்.

கருடன் : நல்லா மோதிக்கிட்டீங்க!

(மாலை போடுதல்—கைதட்டல். பரந்தாமன் மாலையைக் கழற்றுமுலே பேசுகிறான்)

பரந்தாமன்: தலைவர் அவர்களே! (ஜனங்கள் சிரிப்பது) ஓகோ, நான்தான் தலைவரோ. மன்னிக்கவும். காடு வெட்டி கழனி திருத்தி காலையிலே மாடோட்டி கலப்பை யெடுத்துச் சென் றால் மாலையிலே வீடுதிரும்பும் மனமொடிந்த பாட்டாளியும், ரத்தத்தை வியர்வைக்குளமாக்கி, சித்தம்சோர்ந்து நித்த நித் தம் உழைக்கும் பஞ்சாலைத் தொழிலாளியும், புத்தம் புதிய வாழ்வு பெறவேண்டுமென்பதே என் நோக்கம்...ஏழைகள் பசி என்று கூறினால் என் இருதயம் வெடித்துவிடும் போலிருக்கிறது. அவர்கள் கண்ணீர்விட்டால் என் ரத்த மெல்லாம் கொதிக்கிறது. நம் கோரிக்கைகளை ஏற்க மறுக் கும் அவர்களின் கொட்டமடக்க—உடனே வேலைநிறுத்தம். ஒட்டுமொத்தக் கூட்டாகப் புறப்பட வேண்டும்! வெற்றி நமதே! வெற்றி நமதே!

(கரகோஷம். புண்யகோடிக்கு ஒரே பூரிப்பு)

*

காட்சி 34] [பூமாலை பிள்ளைகளுடன்!]

பூமாலை: ஜீவஹிம்சை கூடாதென்றவர்கள் இருவரைச் சொல்லு.

பையன்: புத்தர், காந்தி.

பூமாலை: முகுந்தா! மூவேந்தர் யார்?

பையன்: சேரன், சோழன்....(திணறுவது)

பூமாலை: உம். சொல்லு .... பாண்டியன் ...

(பாண்டியன் என்றதும் அவள் முகம் மாறுகிறது-உதடுகள் முணுமுணுக்கின்றன. பிறகு மாணவ-மாணவிகளிடம்)

பூமாலை: சரி வீட்டுக்கு போய்ட்டு நாளைக்கு வாங்க ... ...

(எல்லோரையும் அனுப்புகிறாள். அவர்கள் போனதும், தோட்டத்துப் பக்கம் போகிறாள்)

*

காட்சி 35] [தோட்டம்–மாலை

[இயற்கையை ரசித்துக் கொண்டிருக்கும் பாண்டிய னிடம் பூமாலை நெருங்கி]

பூமாலை: சிந்தனைக்கு இடையூறு ஒன்றும் இல்லையே...

பாண்டியன்: இல்லை, இல்லை....

பூமாலை: எதிலே பறிகொடுத்திருக்கிறீர்கள் மனதை! வானத்தின் அழகிலா—மேகத்தின் அசைவிலா?

பாண்டியன்: மோனத்திருக்கும் முதிர் சோலையில், கானத்தால் களிப்பூட்டும்

பூமாலை: வானம்பாடியின் வரவை எதிர்ப்பார்த்து ஏக்கமா? பாண்டியன்! சிரிக்கும் முல்லையும், சிங்காரக் கொல்லையும் உங்கள் சிந்தைக்கு விருந்தளிக்கப் போதவில்லை என்பதை உணர்ந்துதான் வானம்பாடி பறந்து வந்திருக்கிறது!

பாண்டியன்: எங்கே?

பூமாலை: தெரியவில்லை. விழியாலும் காணலாம். ஆனால் முதலில் நெஞ்சத்தால்தான் காண முயலவேண்டும்.

பாண்டியன்: (சந்தேகத்தோடு) பூமாலை ... ...

(சொல்லிக் கொண்டிருக்கும்போது அக்கா என்ற குரல் கேட்டு திடுக்கிட்டுத் திரும்புகிறாள். பரந்தாமன் வருகிறான்)

பரந்தாமன்: யார் இவன்?

பூமாலை: பரந்தாமா, இவர்தான்... ...

பரந்தாமன்: சொல்லவேண்டாம் தெரிகிறது. இந்த அயோக்யனை வீட்டுக்குள்ளே யார் அனுமதித்தது?

பூமாலை: (கோபமாக) பரந்தாமா...

பரந்தாமன்: அதட்டாதே! நீ செய்ததும் ஒரு நல்ல காரியம் தான்! இவனை நான் பலநாளாகத் தேடிக்கொண்டிருக்கிறேன்.

பாண்டியன்: எதற்கு என்னைத் தேடுகிறாய்!

பரந்தாமன்: ஆ! பரிசு கொடுக்க. இந்தா பதிலுக்குப் பதில் வாங்கிக்கொள்!

(அறைகிறான்—அங்கு வந்த குமுதா பரந்தாமன் கன்னத்தில் அறைகிறாள்)

பரந்தாமன்: ஆ...என்ன!...குமுதா!

குமுதா: முட்டாள்!

பூமாலை: (குமுதாவை அறைந்து) சீ! வாயை மூடு.

(பல அறைகள் கொடுத்துவிடுகிறாள்)

குமுதா: சின்னம்மா! சின்னம்மா!

(உள்ளே ஓடிப்போய் விம்மி விம்மி அழுகிறாள்—பரந்தாமன் ஆத்திரத்தோடு வெளியே போகிறான். பாண்டியன் திகைத்து நின்று மெதுவாக நகருகிறான்)

பாண்டியன்: என் வாழ்க்கை ஒரு போட்டி மேடை!...

★

காட்சி 36

[ஒரு அறை

[குமுதா அழுதபடியிருக்கிறாள்]

பூமாலை: அழாதே குமுதா! (கலங்கியபடி)

குமுதா: சின்னம்மா! ஏன் சின்னம்மா என்னை அடிச்சே! என்மேல் ஒரு தவறும் இல்லியே சின்னம்மா!

பூமாலை: பரந்தாமனுக்கு யாரு! நம்மைப் போலத்தானே அவனும்! அவனைப்போயி நீ அடிக்கலாமா?

குமுதா: சின்னம்மா பாண்டியனை மட்டும் மாமா அப்படி நடத்தலாமா?

பூமாலை: அதைக் கேட்க நான் இருக்கிறேனே! அவனை எனக்கு நேராகவே ....

குமுதா : உனக்கு உன் தம்பி பெரிசு !

பூமாலை : உனக்கு ?

குமுதா : எனக்கு என் காதலன் பெரிசு !

பூமாலை : (திடுக்கிட்டு) காதலனு ? ....

குமுதா : ஆமாம் ! பாண்டியன் என் காதலன் !

பூமாலை : உன் காதலன் ?

(விம்மியபடி வேறிடம்போய் அழுகிறாள். விரக்தியுடன்—குமுதா அவளிடம் ஓடிவந்து)

குமுதா : நான் காதலிக்கக் கூடாதா ?

பூமாலை : அவர் சம்மதம் கொடுத்துவிட்டாரா ?

குமுதா : இருவர் உள்ளமும் ஒன்றுபட்டுவிட்டது !

(பூமாலை அழுகிறாள்)

பூமாலை : சே ! எவ்வளவு பெரிய தவறு செய்துவிட்டேன் ! குமுதா !

குமுதா : என்ன தவறு செய்துவிட்டாய் சின்னம்மா ? அவரை அழைத்து வந்தாயே அது தவறு ? அல்லது எனக்கு அறிமுகப்படுத்தினாயே அது தவறு ?

பூமாலை. அழைத்து வந்ததிலும் தவறில்லை. அறிமுகப்படுத்தியதிலும் தவறில்லை.

குமுதா : பிறகென்ன நான் அன்பு காட்டியது தவறு ?

பூமாலை : அதுவுமில்லை குமுதா ! கொடி படரும் கொம்பிலே செடி பட்டர முயன்றதுதான் தவறு.

குமுதா : விளங்கவில்லையே ....

பூமாலை : விளங்க வேண்டாம் உனக்கு, விளங்கவே வேண்டாம்.

குமுதா : சின்னம்மா ! எங்கள் காதலை நீங்கள் அனுமதிக்க வில்லையா ?

பூமாலை : அனுமதிக்கிறேன் கண்ணே ! இப்போதே உங்க ளிருவரையும் வாழ்த்துகிறேன். ....பாண்டியன் ! பாண் டியன் !

(போகிறாள்)

*

காட்சி 37] [புண்யகோடி, விடு

[புண்யகோடி ஸ்ட்ரைக் நோட்டீஸ்களை பையனிடம் கொடுத்து]

புண்யகோடி : ராத்ரியோட ராத்ரியா ஊர்முழுக்க ஒட்ட ணும் ! ஒரு சுவரு பாக்கி இருக்கக்கூடாது ! தெரியுமா !

பையன் : சரிங்க !...

புண்யகோடி : ஆமாம் போ !

(பையன் போகிறான்—பாண்டியன் உள்ளே நுழை கிறான்—பாண்டியனின் சோகமுகத்தைப் பார்த்து புண்யகோடி அருகே வந்து)

புண்யகோடி : ஏம்ப்பா தம்பீ. ஏன் வருத்தமாயிருக்கே !

பாண்டியன் : ஒண்ணுமில்லப்பா !

புண்யகோடி : நேத்தியெல்லாம் சந்தோஷமாயிருந்தே ! மறு படியும் என்ன ?

பாண்டியன் : ஒரு கவலையுமில்லே.

புண்யகோடி : ம்...பாண்டியா ! உன்கிட்டே ஒரு விஷயம் சொல்லணும்னு இருந்தேனே !...உம்...

பாண்டியன் : (சிறிது திகைத்து) என்னப்பா !

புண்யகோடி : அது...அது...

(ஒரு பெண்ணின் போட்டோவைக் காட்டி)

புண்யகோடி : இதபாரு !

பாண்டியன் : (படத்தைப் பார்த்து) அப்பா ! எனக்கு கல் யாணமே வேண்டாமப்பா !

புண்யகோடி : உனக்கு வேண்டாம் சரி... இந்தப் பெண்ணு ...

பாண்டியன் : யாராயிருந்தாலும் சரி தேவையில்லை.

புண்யகோடி : நீ என்னைப்பா அவசரக்காரனுயிருக்கே! அந்தப் பெண்ணு துடியா துடிக்குது!

பாண்டியன் : துடிக்கட்டும்! அதற்காக!

புண்யகோடி : பெண்ணுக்கு இஷ்டம் இருக்குன்னுசொல்றேன்.

பாண்டியன் : ஐயோ இது என்ன வம்பு!...

புண்யகோடி : வம்பு ஒண்ணும் இல்லடா ... வயசானவன் கல்யாணம் பண்ணிக்கக்கூடாதுன்னு ... ஊர்ல கத்துவாங்களே அதுக்குத்தான் இவ்வளவும் சொல்றேன்.

பாண்டியன் : எனக்கு இப்பவும் கல்யாணம் வேண்டாம்! வயசான பிறகும் கல்யாணம் வேண்டாம்!

புண்யகோடி : அட உனக்கு இல்லடா உனக்கு இல்ல! அது கெட்டுது போ! என்னைப்பத்தி சொல்றேன் நான்!

பாண்டியன் : அப்பா! திருமணம் உங்களுக்கா?

புண்யகோடி : ஏன் ஆச்சரியப்படுறே! இது என்ன உலகத்திலே எட்டாவது அதிசயமா?

பாண்டியன் : எப்போதப்பா உங்களுக்கு இந்த ஆசை வந்தது!

புண்யகோடி : ஆமாண்டா! நல்ல கேள்விடா! எப்ப ஆசை வந்ததாம்? நான் வருஷம், மாதம், தேதி குறிச்சா வைத்திருக்கேன். ஆசைக்கு ஜாதகம் கேக்கிறான்.

பாண்டியன் : ஆசைக்கு ஜாதகம் இல்லாவிட்டாலும், அறுபது வயதை நீங்கள் கடந்துவிட்டீர்கள் என்பதற்கு ஜாதகம் இருக்கிறதப்பா!

புண்யகோடி : அதிகப்பிரசங்கி!

பாண்டியன் : அப்பா! ஒரு இளம் பெண்ணின் வாழ்வைக் கெடுக்காதீர்கள்!

புண்யகோடி : முட்டாள்! இளம் பெண்ணுக்கு வாழ்வை கொடுக்கப் போகிறேன்! விஷயம் புரியாமல் உளருதே! இந்தப் பெண்ணை யாரும் கல்யாணம் பண்ணிக்கமாட்டேங் கிறான். இது ஒரு ஊமை!

பாண்டியன் : பேசத் தெரிந்த பெண்களையே பேசாமடந்தை யாக்கிவிடும் பைத்தியக்கார சமூகம், ஊமைகளையா உயி ரோடு விடப்போகிறது.

புண்யகோடி : இப்ப என்னடா சொல்றே!

பாண்டியன் : உங்கள் முடிவை மாற்றிக்கொள்ள வேண்டு கிறேன்.

புண்யகோடி : முடியாது! உன் முடிவைத்தான் மாற்றிக் கொள்ள வேண்டும். உனக்கு முன்னடி பிறந்தவன் நான்!

பாண்டியன் : யார் மறுக்கிறார்கள்! பேரன் பேத்தியை கொஞ்சவேண்டிய வயது!

புண்யகோடி : உன்னைப் பெத்து வளர்த்து பாதுகாத்து மனுஷ னுக்கி விட்டதுக்கு, இப்படி எதிர்த்துத்தாண்டா பேசணும்!

பாண்டியன் : அதற்காக ஆயிரம் வணக்கம் செலுத்துகிறேன். ஆனால் மகன் கல்யாணத்தில், மாலை எடுத்துத் தரவேண்டிய பருவத்தில், மாப்பிள்ளையாக மாறுகிறேன் என்கிறீர்களே ; அதை என்னால் அனுமதிக்கவே முடியாது!

புண்யகோடி : சீ! நீ என்னடா அனுமதிக்கிறது. என் இஷ்டம் நான் செய்கிறேன்.

பாண்டியன் : வேண்டாமப்பா இந்த விபரீத முடிவு!

புண்யகோடி : சீ! என்கிட்ட பேசாதே!

பாண்டியன் : உங்கள் கல்யாணத்தை?

புண்யகோடி : நடத்தத்தான் போறேன்.

பாண்டியன் : என்னை வெறுத்துவிட்டா?

புண்யகோடி : உன்னை விரட்டிவிட்டு.

பாண்டியன்: நீங்கள் விரட்டவேண்டாம். நானே போகிறேன்.

புண்யகோடி: போடா! என் முகத்திலேயே முழிக்காதே! போடா போ!

பாண்டியன்: போகிறேன். உங்கள் போதை விரைவில் தெளியட்டும். (போகிறான்)

புண்யகோடி: போடா போ! போதை தெளியட்டுமாமில்ல. இங்க என்ன குடிச்சிபிட்டா உட்கார்ந்திருக்காங்க.

★

காட்சி 38] [தெரு-இரவு

[பாண்டியன் குழப்பமுடன் நடந்து கொண்டிருக் கிறான்—அவன் குரல் மட்டும் முகத்தில் ஒலிக்கிறது]

குரல்: கல்யாணத்தன்று ஒரு பெண் ஏமாற்றிவிட்டாள். காதலுக்காக இரண்டு பெண்கள் போட்டி போடுகிறார்கள். கம்பூன்றி நடக்கும் ஒரு கிழவனின் கட்டிலறை ஒரு பெண் ணுக்கு வெட்டுப்பாறையாகப் போகிறது. வேடிக்கையும் வேதனையும் நிறைந்த பெண் சமுதாயம்!

(பாண்டியனை பூமாலை சந்தித்தல். பாண்டியன் திடுக் கிட்டு நிற்கிறான்)

பாண்டியன்: பூமாலை!

பூமாலை: (நெஞ்சடைக்க) மன்னித்து விடுங்கள் என்னை!... உங்கள் மனதைக் குழப்பி விட்டேன்.

பாண்டியன்: நீதான் என்னை மன்னிக்கவேண்டும்! துல்யமான உன் வெள்ளை இருதயத்தில் காதல் என்னும் கரும்புள்ளி ஏற்பட நான்தான் காரணமாயிருந்தேன்!...

பூமாலை: காதல் கரும்புள்ளியல்ல. எட்டாத திராக்ஷை புளிக்குமா பாண்டியன்! (வேதனை) குமுதா, உங்கள் இதயம் கவர்ந்தவள்! அவளை ஏற்றுக்கொள்ளுங்கள்!

பாண்டியன்: என் வாழ்க்கை ஒரு போட்டி மேடை! பூகம் பம்! அதில் குமுதா போன்ற பூந்தோட்டங்கள் சிக்கி சிரழிய வேண்டாம்!...

பூமாலை : இனியும் போட்டிமேடையல்ல. பூமாலை தோல்வியை ஒப்புக்கொண்டுவிட்டாள். அதனால் பூகம்பமும் அல்ல ; புது மணம் வாரிவரும் தென்றல்—குமுதா உங்களை அழைக் கிறாள், அதனால்...

பாண்டியன் : (வருத்தமுடன்) பூமாலை...

பூமாலை : (தீர்மானமாக சோகமுடன்) பாண்டியன், என் காதலை தியாகம் செய்துவிட்டேன். என் குமுதாவுக்காக!

பாண்டியன் : காதலை தியாகம் செய்ய உனக்கு மட்டுந்தானே உரிமை? எனக்குமிருக்கிறது.

பூமாலை : வேண்டாம்—என் குமுதாவை ஏற்றுக்கொள்ளுங்கள்! அவளை ஏமாற்றிவிடாதீர்கள்!.....சோகத்தை சுமந்து கொள்ளும் வலிமை அவளுக்குக் கிடையாது! உங்களை மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். என் தவறுகளை மறந்து விடுங்கள்! வாருங்கள் வீட்டுக்கு!

பாண்டியன் : பூமாலை....

பூமாலை : சந்தோஷமாகத்தான் அழைக்கிறேன்! கண்மணி குமுதாவின் கண்ணீரைத் துடையுங்கள்! அவள் வாழ்ந் தால் போதும் எனக்கு! வாருங்கள்....

(பாண்டியன் நடக்கிறான் அவளுடன்)

★

காட்சி 39]

[ஊரெங்கும் சுவர்களில் மில் வேலைநிறுத்தப் போஸ் டர்கள் ஒட்டப்பட்டிருக்கின்றன]

[மில் முதலாளி அறை]

[பரந்தாமனும் கருடனும் வர]

முதலாளி : வாருங்கள்....உட்காருங்கள்!....

(இருவரும் உட்காராமல்)

பரந்தாமன் : அழைத்த காரியமென்ன ?

(இருவரும் உட்காருதல்)

முதலாளி : ம்...இந்த வேலை நிறுத்தத்தைப்பற்றி...

பரந்தாமன் : எல்லாம் என் ஏற்பாடுதான் — நான் காட்டிய வழியில் செல்ல ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் தயாராயிருக்கிறார்கள்.

முதலாளி : மிஸ்டர் பரந்தாமன் ! மில் தொழிலாளர்களின் கிளர்ச்சியை உங்களால்தான் நிறுத்த முடியுமென்று எனக்குத் தெரியும்.

கருடன் : சந்தேகமா அதிலே ! பரந்தாமன் மாத்திரம் இல்லாவிட்டால் இந்நேரம் மில்லையே அழித்திருப்பார்கள் !

பரந்தாமன் : அதோட, தங்கள் உயிருக்கே ஆபத்து ஏற்படுத்த இருந்தார்கள் ! நான்தான் தடுத்தேன் !

முதலாளி : சந்தோஷம் ! ரொம்ப நன்றி ! என் உயிரைக் காப்பாற்றியதற்காக ! தங்களுக்கு என்னுடைய சிறிய உதவியாக இந்த ஐயாயிர ரூபாயை அளிக்கிறேன்.

பரந்தாமன் : என்ன...பணமா !

கருடன் : வாங்கிக் கொள்ளப்பா ! தொழிலாளர் நிதியில் சேர்த்துவிடலாம் ! ஏழைகளுக்காக உழைக்கவே ஜென்மம் எடுத்துட்டோம் !

முதலாளி : நான் இதை லஞ்சமாக நினைத்துக் கொடுக்கவில்லை.

பரந்தாமன் : நானும் இதை அப்படி நினைத்து வாங்கவில்லை.

முதலாளி : இந்த ஸ்டிரைக்கை எப்படியாவது நிறுத்திவிடுவீர்களானால்....

பரந்தாமன் : நிறுத்திவிடலாம். அதற்கு புண்யகோடியை மாற்றினால்தான் முடியும் !

கருடன் : புண்யகோடி....அவன் மூவாயிரமாவது கேட்பான் !

முதலாளி : தருகிறேன்! இப்போதே தருகிறேன்.

(பணம் எடுத்துத் தருகிறார்)

பரந்தாமன் : தங்களுடைய நல்ல குணத்திற்காகவும், நம்முடைய நட்பு நீடிக்க வேண்டும் என்பதற்காகவும், ஒரு பெரிய கிளர்ச்சியை விட்டுக்கொடுக்கிறேன்.

முதலாளி : ரொம்ப நன்றி!

(இருவரும் எழுதல்)

★

காட்சி 40] [மில் Ext

பரந்தாமன் : (காரில் எழுந்து நின்றபடி) அன்புள்ள தொழிலாளர்களே! நமது போராட்டம் வெற்றிபெற்று விட்டது! நமது கிளர்ச்சி கண்டு கிடு கிடுத்துவிட்டார் முதலாளி! ... வெகு சிக்கிரத்தில் சம்பள உயர்வு பிரச்னையை கவனிக்கிறேன் என்று என்னிடம் உறுதி அளித்துவிட்டார்! வீரர்களே! வெற்றியடைந்துவிட்டோம்!

புண்யகோடி : நமது தலைவர் பரந்தாமனுக்கு!

மற்றவர்கள் : ஜே! ஜே!

பரந்தாமன் : ஆகவே எல்லோரும் அமைதியாக வேலைக்குச் செல்லும்படியாக உங்கள் தலைவன் என்னும் முறையில் கேட்டுக் கொள்கிறேன். விரைவில் வெற்றி விழாவை சிறப்பாகக் கொண்டாடுவோம்.

(பரந்தாமனுக்கு ஜே! என்ற கோஷமுடன் காட்சி முடிகிறது.)

★

காட்சி 41] [பூமாலை வீடு

[பரந்தாமன் உள்ளே நுழைகிறான்-கோட்டை கழற்றி ஸ்டேண்டில் மாட்டிவிட்டு மாடிக்குப் போகிறான். படியேறிக் கொண்டே சிகரெட்டை எறிகிறான்—சிகரட் மாட்டிய கோட்டின் பையில் விழுகிறது

—பை புகைகிறது. அப்போது அந்தப் பக்கமாக வந்த பூமாலை கோட்டில் நெருப்பு பிடித்திருப்பதைப் பார்த்து ஓடிப்போய் அதை அணைக்கிறான் — கோட்டின் பையில் மில் முதலாளியிடம் வாங்கிய நோட்டுக் கத்தை இருக்கிறது. 'சிவசக்தி மில்ஸ்' என்ற சிகிலிடப்பட்ட அதைப் பார்த்து மூணு முணுக்கிறான். அதே பையில் ஒரு சிறு தாள் இருக்கிறது. அதில் —

கல்யாணிக்கு	...	1000
சுபத்திராவுக்கு	...	300
சுலோசனாவுக்கு	....	500
தேவகிக்கு	...	1200

என்றிருக்கிறது]

(இவைகளை எடுத்துக் கொண்டு உள்ளே போகிறான். கையில் பத்திரிகையுடன் வந்த பாண்டியன் ஹாலில் வந்து உட்கார்ந்து படிக்கிறான்)

("சிவசக்தி மில் வேலை நிறுத்தம் முடிந்தது. தொழிலாளர் வேலைக்குத் திரும்பினர்" என்ற கொட்டை எழுத்துச் செய்திகளை கவனமாகப் படிக்கிறான். மாடியிலிருந்து பரந்தாமன் கீழே வருகிறான். கோட்டைப் பார்க்கிறான். பணத்தைக் காணவில்லை. படித்துக்கொண்டிருக்கும் பாண்டியனிடம் வந்து அவன் பையைத்தடவி தேடிப் பார்க்கிறான்.)

பாண்டியன் : என்ன தேடுகிறாய் ?

பரந்தாமன் : பணம் ...

பாண்டியன் : கேளேன் தருகிறேன் ...

(ஒரு பத்து ரூபாய் நோட்டை எடுத்து கொடுக்கிறான்.)

பரந்தாமன் : (கேலியாக சிரித்து விட்டு) சரியான திருடனப்பா ! நீ மரியாதையாகப் பணத்தைக் கொடுக்கிறியா இல்லையா ? ...

பாண்டியன் : என்ன சொல்கிறாய் இப்போது ?

பரந்தாமன் : ஏய் ! சரிதான். வீட்டுக்குள்ளேயே திருட ஆரம் பிச்சுட்டியா நீ ! நானே வீட்ல திருடுறது கிடையாது ....

(பரந்தாமா என்ற குரல் கேட்டுத் திரும்புகிறான்- பூமாலை வருகிறாள்.)

பூமாலை : என்னப்பா ....

பரந்தாமன் : பாரு அக்கா. பணம் வச்சிருந்தேன் திருடிவிட் டான்.

பூமாலை : ஏது பணம் ?

பரந்தாமன் : பதிப்பகத்திலேயிருந்து வாங்கிக்கொண்டுவந்தேன்.

பூமாலை : தெரியும் எனக்கு எங்கேயிருந்து வாங்கிக்கொண்டு வந்ததுயென்று.

பரந்தாமன் : உண்மைதான் அக்கா !

பூமாலை : முத்திரை போட்டிருக்கிறது பார். முதுகெலும்பு உடைய பாடுபடும் தொழிலாளிக்கு முகாரிதான் மோகன கீதமா என்று முழக்கம் செய்தாயே. அந்த முழக்கத் திற்குப் பரிசாக மில் முதலாளி வழங்கிய பணம் இது வென்று முத்திரை போட்டிருக்கிறது பார் !

(பணக் கட்டை காட்டுகிறாள். முத்திரையில் சிவசக்தி மில் மின்னுகிறது)

பரந்தாமன் : ஓ.... பணத்தைத் திருடி உன்னிடம் கொடுத்து விட்டானா ?

பூமாலை : போதும் ! கருங்காலித்தனம் செய்து ஏழைகளைக் காட்டிக் கொடுத்துவிட்டு கைக் கூலி பெறுகிற உனக்கு பேச்சுவேறு.

பரந்தாமன்: அக்கா! அதை எதற்காக வாங்கினேன் என்று உனக்குத் தெரியாது. தொழிலாளர் க்ஷேம நிதியில் சேர்ப்பதற்காக!

பூமாலை: படித்தேனப்பா அதையும்.... இதோ பார்.... கல்யாணிக்கு ஆயிரம், சுபத்ராவுக்கு முன்னூறு, சுலோசனாவுக்கு ஐநூறு, தேவகிக்கு ஆயிரத்து இருநூறு.

பரந்தாமன்: (சமாளிப்பதற்காக) ஹ ஹ ஹ — அட அட அடா அதைத் தவருகப் புரிந்துகொண்டயா. ஐயோ, ராமா, முருகா, நானும் கருடனும் சேர்ந்து சினிமா தியேட்டர் ஒண்ணு ஓப்பன் பண்ணப்போகிறோம். அதிலே கல்யாணி, சுபத்ரா, சுலோசனா, தேவகி இந்தப் படமெல்லாம் ரிலீஸ் பண்றத்துக்கு அட்வான்ஸ் கொடுத்த கணக்கு இது! ஹ ஹ ஹ அய்யோ அய்யோ ....

(பூமாலை மேசையில் போட்ட பணத்தையும் தாளையும் எடுத்துக்கொள்கிறான். கேலிச் சிரிப்பு ஆத்திரமாக மாறுகிறது. அதே Action-ல் பாண்டியனிடம்)

பரந்தாமன்: ஏய், நீதான் இவ்வளவுக்கும் காரணம்.

பாண்டியன்: எதற்கு! லஞ்சம் வாங்கியதற்கா, தொழிலாளரைக் காட்டிக் கொடுப்பதற்கா!

பரந்தாமன்: மரியாதையாகப் பேசு!

(குமுதா வந்து)

குமுதா: அதை நீ கற்றுக்கொள்ள வேண்டும் மாமா?

(வந்து பாண்டியனிடம் நிற்கிறான். நிலைமை மோசமாகிவிடும் என்பதையறிந்த பூமாலை குமுதாவிடம்)

பூமாலை: குமுதா! நீ அவரை அழைத்துக்கொண்டு போம்மா உள்ளே!

(பாண்டியன் குமுதாவுடன் உள்ளே போகத் திரும்புகிறான்)

பரந்தாமன் : ஆமாம்! அழைத்துக் கொண்டு போயி ஆராரோ பாடி பாப்பாவைத் தாலாட்டு போ!

குமுதா : (கோபமுடன்) போதும்!

பூமாலை : (அதட்டல்) குமுதா!

(குமுதா போய்விடுகிறாள் பாண்டியனுடன்)

பரந்தாமன் : இது வீடா, வேசி மடமா என்று தெரியவில்லை எனக்கு!

பூமாலை : பரந்தாமா! நிதானமாகப் பேசு!

பரந்தாமன் : பிறகென்ன, கல்யாணமாகாத பெண்ணை ஒரு காலிப் பயலுடன் தனியவிடுவது மாத்திரம் நன்றாயிருக்கிறதா?

பூமாலை : கல்யாணமாகிவிட்டது அவளுக்கு. பாண்டியனும் குமுதாவும் கணவனும் மனைவியும்.

பரந்தாமன் : காந்தர்வ மணமா அல்லது கனவு கண்டாயா?

பூமாலை : பதிவுத் திருமணம்.

பரந்தாமன் : பதிவுத் திருமணம். நான் ஒருவன் இருக்கிறேன் வீட்டில். எனக்குத் தெரியாமல் பதிவுத் திருமணம்...

பூமாலை : நீ வீட்டிலா இருக்கிறாய்...'வீடு' என்றாவது உன் வாயால் சொன்னாயே. அதுவே எனக்கு சந்தோஷம்!...

பரந்தாமன் : அக்கா! உன்னை உணர்ந்துகொண்டேன். தம்பீ தம்பீ என்று நீ பாசங்காட்டியதெல்லாம் வெறும் பாசாங்கு என்று புரிந்துகொண்டேன். இல்லாவிட்டால் குமுதா உனக்காக வாழ்கிறாள், உன் மனைவிதான் அவள் என்று அன்பு வழிவதுபோலக் கூறிவிட்டு, இப்போது யாரோ ஒரு அனுதைப் பயலுக்கு அவளை மனைவியாக்கிவிட்டேன் என்று கூறுவாயா!

பூமாலை : உனக்கேன் மனைவி? உனக்குத்தான் நினைத்தபோ தெல்லாம் மனைவிகள் கிடைக்கிறார்களே! அன்பைக் கேட்

காமல் ஐஸ்வரியத்தைக் கேட்கும் அந்த அழகிகளுக்கு அள்ளி அள்ளிக் கொடுக்க அப்பாவித் தொழிலாளர்கள் இருக்கிறார்கள் மில் முதலாளியிடம் அடகுவைக்க...

பரந்தாமன்: போதும் நிறுத்து!

பூமாலை: புத்திசாலி! புனிதமானவன்! இப்படியெல்லாம் உனக்கு புகழுரைகள் வரவேண்டுமென்று எதிர்பார்த்தேன். பரத்தையிலோலன், பாதகன் என்ற பழிச்சொற்கள் வரு மென்று நினைக்கவேயில்லை.

(பரந்தாமன் போகிறான். பூமாலை அவன் போவதைப் பார்த்துக்கொண்டே நிற்கிறாள் கலங்கியபடி)

★

காட்சி 42] [பூமாலை வீடு-மாடி அறை

[பாண்டியன் ஏதோ மளமளவென்று எழுதி எழுதித் தள்ளுகிறான். குமுதா அருகே ஆவலுடன் சென்று கவனிக்கிறாள்]

குமுதா: என்ன திடீரென்று எழுத ஆரம்பித்துவிட்டீர்கள்?

பாண்டியன்: நல்ல சிச்சுவேஷன் கிடைத்தது பாட்டு எழுது கிறேன்.

குமுதா: எந்தப் பத்திரிகைக்கு?

பாண்டியன்: நான் எந்தப் பத்திரிகைக்கு எழுதுவேன்...

குமுதா: எங்கே பாட்டைக் கேட்கலாம்...

(பாண்டியன் பாடுகிறான் எழுதியதை)

"கலப்படம் கலப்படம்"

★

காட்சி 43]. [கருடன் பதிப்பகம்-மாலை

"கலப்படம்" பாட்டை ஆபீஸ் பையன் பாடுகிறான். பரந்தாமன் வந்து அவனிடமுள்ள பத்திரிகையை வாங்கி கிழித்தெறிகிறான். அவன் வாய்மட்டும் ஆத்திரத்துடன் "பாண்டியன்" என்று முணு முணுக்கிறது.

★

காட்சி 44] [மைதானம்

[அங்கே கூட்டத்தை தூரத்தில் நின்று கருடன் பார்க்கிறான். பாண்டியன் பேசுகிறான்.]

பாண்டியன்: தோழர்களே! தொல்லைப்படும் தொழிலாளி வர்க்கத்திற்கு தொண்டு செய்வதாகக் கூறிக்கொண்டு ஒரு சில துரோகிகள் புறப்பட்டிருக்கிறார்கள். தொழிலாளர் கள் ஆர்வமென்னும் மலர்களால் கட்டப்பட்ட அருமை யான பூமாலை. அதை மந்தியின் கழுத்தில் போட்டு அழகு பார்க்காதீர்கள். உங்கள் உணர்ச்சியை, உரிமையை, ஆர்வத்தை, ஆவேசத்தை அடகு வைத்து பேரும் புகழும் பணமும் சம்பாதிக்கிற போலித் தலைவனை நம்பாதீர்கள். (கருடன் ஆத்திரம்)

போராட்டம் கூடாது என்று கூறும் கோழையல்ல நான். போராட்டத்திற்கு உங்களைத் தூண்டி விடுபவர்கள் புலிகள் அல்ல. புகழ் தேடும் பூனைகள் என்பதை எச்சரிக்கவே இதைக் கூறுகிறேன் ... பலாத்காரமற்ற விடுதலைக் கிளர்ச் சியை பகுத்தறிவுள்ள எந்த மனிதனும் மறுக்கமாட்டான். ஆனால் அடிப்படையில்லாத கிளர்ச்சி அடியற்ற நெடுமர மென சாய்ந்துவிடும். படாடோபம், பத்திரிகை விளம்பரம் பரந்தாமனுக்கு 'ஜே' - இந்தப் பகட்டுகளால் பாட்டாளி களின் தலைவனாகிவிட முடியாது. (கரகோஷம்)

(கருடன் அதைவிட்டு ஆத்திரத்துடன் போய் விடுகிறான்)

★

காட்சி 45] [மில் முதலாளி வீடு

[மில் முதலாளியும், உஷாவும்]

முதலாளி: ஒருவன் தொலைந்தானென்று பெருமூச்சு விட்டேன். இன்னொருவன் முளைக்கிறான். பாண்டியன்.

உஷா: எல்லோரையும் பரந்தாமனைப்போல நினைத்து பணத்தால் அடித்துவிட முடியுமா! லட்சியத்தில் உறுதி உள்ளவர்கள் இரும்புப் பெட்டிக்குத் தலைவணங்க மாட்டார்களப்பா!

முதலாளி : நீ சும்மாகிட உஷா ! உனக்கு ஒன்றும் தெரியாது !

உஷா : ஏம்ப்பா லேடி டாக்டருக்கு உலக விஷயம் தெரியாதுன்னு உங்கள் அபிப்ராயமா !

முதலாளி : லேடி டாக்டர் !...தொழிலாளர் தொழிலாளர் என்று தொல்லை கொடுத்து ஆயிரக் கணக்கில் எனக்கு நஷ்டம் உண்டாக்குகிறார்களே அந்த மனவேதனைக்கு மருந்து கொடுக்க முடியுமா உன்னால் ?

உஷா : ஓ ! கொடுக்க முடியும். ஆனால் இந்த மருந்தை இருதயம் என்ற இலையில் வைத்து, இரக்கம் என்ற தேனில் கலந்து சாப்பிட வேண்டும். மருந்துக்குப் பெயர் என்ன தெரியுமா அப்பா ? சமதர்மம். சமத்துவம். முதலில் கொஞ்சம் கசப்பாயிருக்கும். பிறகு சரியாகி விடும்.

முதலாளி : உஷா !

உஷா : ஏன் ஆத்திரப்படுகிறீர்கள். தொழிலாளியின் குறை களை கவனியுங்கள். எல்லாம் அடங்கிவிடும்.

(பியூன் வந்து)

பியூன் : பாண்டியனும். உங்களைப் பார்க்க வந்திருக்கிறார்.

முதலாளி : பாண்டியன் ! வரச்சொல் ! வரச்சொல் ! பார்த்தாயா உஷா ! எல்லாம் பண வேட்டைக்குத்தான் பயல்கள் தலைவர் வேஷம் போடுகிறார்கள்.

(பாண்டியன் வருதல்)

பாண்டியன் : (உட்காந்து) உங்களிடம் ஒரு முக்கியமான செய்தி பற்றி... ...

முதலாளி : சொல்லு...

பாண்டியன்.: தொழிலாளர்கள்

முதலாளி : தெரியும். அவர்களை அடக்க எவ்வளவு பணம் வேண்டுமானாலும் கேள் தருகிறேன்.

பாண்டியன் : அய்யா ! "மஞ்சத்திலே முதலாளி-பஞ்சத்திலே பாட்டாளி" என்று முழங்கிவிட்டு, லஞ்சத்திலே நீச்சலடிக்

கும் பரந்தாமனல்ல நான். பாண்டியன். பாட்டாளிகளின் தோழன்...

முதலாளி : பாண்டியா என் பேச்சைக் கேள்.

பாண்டியன் : உங்கள் பேச்சை நான் கேட்க வேண்டாம். உழைப்பவர்களின் பெருமூச்சை நீங்கள் கவனியுங்கள்!

முதலாளி : பெருமூச்சு, உழைப்பு, வியர்வை, ரத்தம் எல்லாம் கேட்டுக்கேட்டு காது அடைத்து விட்டதப்பா!

பாண்டியன் : காது அடைத்துவிடும், கண் இருட்டிவிடும், வாய் மூடிவிடும். கைகால் அசையாது! கடைசியில் இருதயமே நின்றுவிடும். அந்தப் பரிதாபகரமான நிலைமை ஏற்பட வேண்டாமென எச்சரிக்கிறேன்.

முதலாளி : ஏ, இங்கென்ன பிரசங்கமா செய்ய வந்தாய்?

பாண்டியன் : இல்லை. பின்னடைந்துபோன தொழிலாளர் நிலை கண்டு, மனம் புண்ணடைந்து புலம்ப வந்தேன்.

முதலாளி : புலம்புவதற்கு சுடுகாட்டுக்குப் போ.

பாண்டியன் : சுகபோகியே! ஞாபகமிருக்கட்டும்.

(போய்விடுகிறான்-முதலாளி ஆத்திரமுடன் உலாவுகிறார்)

*

காட்சி 46] [கருடன் பதிப்பகம்

பரந்தாமன் : (கருடனிடம்) கூட்டத்தில் அவ்வளவு பேசினான். கேட்டுக்கொண்டு வந்தாய்...ம்...

கருடன் : நான் என்னப்பா செய்றது. தனி மனுஷன்.

பரந்தாமன் : படாடோபம், பத்திரிகை ஜிளம்பரம், பரந்தாமனுக்கு ஜே...நேரிடையாகவே தாக்கியிருக்கிறான்.

கருடன் : தாக்கினாலும் பரவாயில்லை. அந்த ஐயாயிரம் விஷயத்தையும் சொல்லிவிட்டான்

பரந்தாமன் : பாண்டியன்! என் வீட்டுக்குள்ளேயே எதிரி! உயிரோடு உலவக்கூடாது அவன்.

கருடன்: பிணமா உலவினுல்கூட உன்பெருமைக்கு ஆபத்து தான்.

பரந்தாமன்: முடிவு கட்டுகிறேன். இன்றைக்கே முடிவு கட்டு கிறேன்.

(மேஜையைத் திறந்து ரிவால்வாரை எடுக்கிறான்)

*

காட்சி 47] [பூமாலை வீடு. மாடி.—இரவு

[பாண்டியன் குமுதா இருவரும் அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்கிறார்கள். பரந்தாமன் வந்து சுட்டு விட்டு ஓடிப்போகிறான். ஆனல் அவன் சுட்டது அங்குள்ள பெரிய கண்ணுடியை. பாண்டியன் குமுதா இருவரும் எழுந்து கட்டிக்கொள்கின்றனர் பயத்தால்.]

[பரந்தாமன் மாடிப்படிகளில் இறங்கி கீழே ஓடுகிறான். சப்தம் கேட்டு, 'குமுதா, குமுதா' எனக் கதறி வரும் பூமாலை மாடிப்படியில் பரந்தாமனை சந்திக் கிறாள்.]

பூமாலை: பரந்தாமன்! அடப்பாவி! என்ன செய்தாய்!

பரந்தாமன்: விடு. பரந்தாமனுக்கு இந்த உலகத்தில் பகைவர் களும் இருக்கக்கூடாது, பயன்படாதவர்களும் இருக்கக் கூடாது!

(சொல்லிவிட்டு ஆத்திரமுடன் போய்விடுகிறான்)

பூமாலை: குமுதா! குமுதா!

(என்று மேலே ஓடுகிறான்)

[குமுதா அறை]

பூமாலை: (அலறல்) குமுதா...

குமுதா: சின்னம்மா...(தழுவுதல்)

பாண்டியன்: என்னைக்கொல்ல முயற்சித்திருக்கிறார்கள் யாரோ.

குமுதா: வேறு யார், எல்லாம் நம் வீட்டு விரோதிதான், சின்னம்மா! இந்த வீட்டைவிட்டு நாங்கள் வெளியேற வேண்டும். அல்லது உன் தம்பி வெளியேற வேண்டும்.

பூமாலை : அவனை வெளியேறச் சொல்ல உனக்கும் எனக்கும் என்ன உரிமை இருக்கிறது.

குமுதா : என் கணவனை கொலை செய்யச் சொல்லத்தான் உனக்கு உரிமை இருக்கிறதாக்கும்.

பாண்டியன் : குமுதா ! என்ன இது !

பூமாலை : பேசட்டும் அவனைப் பேச விடுங்கள். அவள் தானே பாக்கி ! அவளும் பேசிவிட்டால் பிறகு எனக்கென்ன குறையிருக்கிறது.

பூமாலை : பாண்டியன் ! நான் சொல்வதை தயவுசெய்து கேளுங்கள். நீங்களும் குமுதாவும் இந்த ஊரைவிட்டே கொஞ்ச நாள்... ...

பாண்டியன் : சாவுக்கு பயந்தா, ஊஹூம்...

பூமாலை : என் குமுதாவிற்காக. அவள் கூந்தலிலே குலுங்கும் மலர்க்காடு அழிந்துவிடாமல் இருப்பதற்காக, இந்த ஒரே ஒரு வரத்தைக் கொடுங்கள் பாண்டியன்.

என் குமுதா துன்பத்தைத் தொட்டும் பாராதவள். எனக்குத் தெரியும், அவனைத் துண்டு துண்டாக வெட்டிப் போட்டாலும், தொடர்ச்சி கெடாமல் ஒட்டிவிடக் கூடிய மாமருந்து நீங்கள். அந்த மருந்தை, குமுதாவின் இன்ப விருந்தை நான் அழியவிட மாட்டேன். தயவு செய்யுங்கள். நான் உங்களுக்காக தியாகம் செய்தேனே காதல். (குமுதா action) அந்த தியாகத்தின் பெயரால், அந்தக் காதலின் பெயரால் கேட்கிறேன். கெஞ்சுகிறேன், சம்மதியுங்கள்.

குமுதா : சின்னம்மா... (ஓடிவரல்).

பூமாலை : பாருங்கள் பாண்டியன் என் குமுதாவை, அவள் வாழ்வு வீணாந்து விடாமல் காப்பாற்றுங்கள். இருவரும் சென்னைக்குச் சென்று விடுங்கள், உங்கள் பகைவனின் ஆத்திரம் தீர்ந்த பிறகு திரும்பலாம்... ...

பாண்டியன் : சரி, உங்களிஷ்டப்படியே செய்கிறோம்.....

★

காட்சி 48] [நில் வாசல் : ரோடு

[புண்யகோடியும் இரண்டு மூன்று தொழிலாளர் களும் பேசிக்கொண்டு வருகின்றனர்.]

ஒரு தொழிலாளி : (புண்யகோடியிடம்) என்னங்க மேஸ்திரி குறைகளையெல்லாம் சீக்கிரம் கவனிக்கப்போறாரு முதலாளின்னீங்க ஒண்ணியும் காணுமே!

புண்யகோடி : அதெல்லாம் சீக்கிரம் நடக்கும் பாரு!... நடக்கலேன்னு நம்ம தலைவர் இறுதிப் போராட்டம் ஆரம்பிச்சுடுவாரு!

தொழிலாளி : அது சரி...இப்ப ஆரம்பிச்ச ஜனவரிப் போராட்டமே பிசு பிசுண்ணு போய்ட்டுதுண்ணு சில பேர் பேசிக்கிறுங்களே!

புண்யகோடி : பேசுவாங்க, பேசுவாங்க! முட்டாள்கள். நம் முடைய தலைவர் பரந்தாமனே சாதாரணமா நினைச்சுக் கிட்டாங்க! புலி பதுங்குறது பாய்ச்சலுக்கு அடையாளம்ணு சொல்லு.

தொழிலாளி : பதுங்கிறது புலியா பூனையான்னுதானே சந்தேகப்படுறாரு பாண்டியன்!

புண்யகோடி : பாண்டியன்...அந்தப் பய பேச்சை என்கிட்டே பேசாதிங்க...அயோக்கியப் பயல்! அப்பன் கல்யாணம் பண்ணிக்கிறதைத் தடுக்கிற பயலை அகில உலகத்திலியும் நான் கண்டதில்லை.

தொழிலாளி : சரி மேஸ்திரி நாங்க வர்ரோம்...

(பரந்தாமன் காரிடம் நின்று கொண்டிருக்கிறான்)

புண்யகோடி : நமஸ்காரம்...

பரந்தாமன் : என்ன...ஆங்...

புண்யகோடி : இப்பதான் மில்வேலை முடிஞ்சு...

பரந்தாமன் : ம்...நான் சங்கத்துப் பக்கம் போய்ட்டு வர்றேன்...

புண்யகோடி : அப்படியா, வாங்களேன் வீட்டுக்குப் போகலாம்.

பரந்தாமன் : எனக்கு அவசரமா வேலையிருக்கிறது...

புண்யகோடி : சரிதான் வாங்க... நம்ம கல்யாணத்துக்குக்கூட வர்லே. கல்யாண விருந்தாக ஒரு கப் காப்பி சாப்பிட்டு வரலாம்.

பரந்தாமன் : ஓகோ... wife இங்கதானா!

புண்யகோடி : ஆமாம்.

பரந்தாமன் : சரி வாங்க காரில் போகலாம்.

★

காட்சி 49] [புண்யகோடி வீடு.

[கார் போய் நிற்கிறது. பரந்தாமனும் புண்யகோடியும் இறங்குகிறார்கள்].

புண்யகோடி : வாங்க! உள்ளே வாங்க...

பரந்தாமன் : கல்யாணத்தை ரொம்ப சிக்கனமாத்தான் செய்து விட்டீர்கள் இல்லையா...

புண்யகோடி : ஆமாம்... ... (உள்ளே திரும்பி) ராதா ராதா கொஞ்சம் வந்துட்டுப் போ.

(ராதா வந்து நிற்கிறாள்—அவளைக் காட்டி)

புண்யகோடி : இதுதான்...

பரந்தாமன் : ஓ.... பாண்டியனுக்கு தங்கச்சிவேறெ இருக்கா?

புண்யகோடி : தங்கச்சியா! இது அவனுக்கு சின்னம்மா! என் சம்சாரம்...

பரந்தாமன் : ஓ... அப்படியா...

புண்யகோடி : (அசட்டு சிரிப்பு) ராதா! டீ, காப்பி ஏதாச்சும் இருந்தா கொண்டா சீக்கிரம்....

(ராதா உள்ளே போகிறாள்).

புண்யகோடி : ரொம்ப தங்கமான பொண்ணு! ஒரே ஒரு குறை! வாய்தான் ஊமை! ஆனா சுமாரா படிச்சிருக்கு...

பரந்தாமன் : பாடுமா ?

புண்யகோடி : எப்படித் தம்பி பாடும் ஊமைங்கிறேன்...

பரந்தாமன் : ஓகோ..... ஏன் குயிலு வார்த்தையை சொல்லியா கூவுது. என்னமோ கத்துது. அதையுந்தான் குயில் பாடுதுங்கிறுன்.

புண்யகோடி : ஹி ஹி ஹி...ஆமா...ஆமாம். நல்லாசொன்னீங்க ஒரு வார்த்தை.

(ராதா காப்பியுடன் வருகிறுள் மேசையிடம்)

பரந்தாமன் : வயதான காலத்தில் கல்யாணம் செய்துகொள் வதே... சமையல் செய்யச் சொல்லி சாப்பிட, சங்கீதம் பாடச் சொல்லி ரசிக்கதானே.

புண்யகோடி : உங்களுக்குத்தான் தெரியுமே. அந்தப் பாழாப் போன மில்லுக்கு உழைக்கவே சரியாயிருக்கு நேரம்...

பரந்தாமன் : பாவம்... அதுவும் வயதான காலத்திலே...

புண்யகோடி : என்னு தம்பி சும்மா வயசாயிட்டு, வயசாயிட்டுங் கிறிங்க...(காபியை ராதையிடம் வாங்கியபடியே) தம்பி ! தொழிலாளர் விஷயமெல்லாம் எப்படி யோசனை பண்ணி யிருக்கீங்க...அதை மறந்திடாதிங்க...

(காபி அருந்தல்)

பரந்தாமன் : மறப்பேனு. மறக்கவே மாட்டேன். நினைத்ததை முடிக்காமல் விட்டதில்லே இந்தப் பரந்தாமன்...

புண்யகோடி : எங்கே முடிக்காம விட்டுடுறீங்களோன்னு பார்த் தேன்.

பரந்தாமன் : அப்ப வர்ரேன்...

*

காட்சி 50] [குமுதா மதருஸ் விடு : ஹால்

[குமுதா பாண்டியன் இருக்க குண்டுமணி வருதல்]

பாண்டியன் : குண்டுமணி எல்லாம் பிரின்ட் ஆயிட்டுதா...

குண்டுமணி : ஆயிட்டுதுங்க. இதோ மூணு காப்பி எடுத்தாந் திருக்கேன். (கொடுக்க)

குமுதா : இந்தப் புஸ்தகத்தைப் பார்த்தா பரந்தாமனுக்கு ஆத் திரம் வரும்.

பாண்டியன் : ஆத்திரம் வருவதற்கு இதை எழுதவில்லே. பரந் தாமன் போன்ற போலித் தலைவர்கள் அறிவு பெறுவதற் காக. அப்பாவி மக்களே ஏமாற்றுவதை நிறுத்துவதற்காக. குமுதா! இனியும் இந்த பூமியில் ஏமாளிகளும் இருக்கக் கூடாது! இளிச்சவாயர்களும் இருக்கக்கூடாது.

குண்டுமணி : இளிச்சவாயர் என்றுல் எப்ப பாத்தாலும் சிரிச்சிக் கிட்டே இருக்காங்களே அவங்களாங்க? (குமுதா சிரிப்பு)

பாண்டியன் : இளிச்சவாயர் என்றுல் அவர்களல்ல. புரட்டுக் காரர்களின் புன்சிரிப்பிலே புத்தியை பறிகொடுத்து, எந்த இழிவு வந்தாலும் எமக்கு என்னவென்று கவலைப்படாமல், ஏன், எப்படி என்று கேட்க தைரியமில்லாமல் வாயை இறுக மூடிக்கொண்டு கிடக்கிறார்களே அவர்கள்தான் இளிச்சவாயர்கள்!

★

காட்சி 51] [புண்யகோடி வீடு

புண்யகோடி : ஆமா ஆமாம்! அது நானேதான் இதுகூடவா சந்தேகம்...உம்...இருபது வருஷத்துக்கு முன்னே நான் எப்படியிருந்தேன்னு நீ நினைச்சுப் பாக்குறே! இருபது வருஷத்துக்கு அப்புறம் நீ எப்படியிருப்பேன்னு நான் நினைச் சுப் பாக்குறேன் ... உம் சராசரங்கள் வரும் சுழன்றே சரடுபோல் அருகாடான்னு....உம் அதை விடு கழுதை.... (அவளிடம் போய்) அப்பொ நான் போய்ட்டு வரட்டுமா? போய்ட்டு வரட்டுமான்னேன்...(போய் பிறகு திரும்பி) கேக்க மறந்தேனே. இன்னைக்கு என்ன சமையல்? இன் னைக்கு என்ன சமையல்னு கேக்கிறேன்...

(ராதா புண்யகோடியின் தொந்தியைத் தடவிக் காட்டுகிறாள்]

புண்யகோடி : ராதா! இனிமே இந்தத் தொந்தரவு வேண்டாம். ஆசைக்குக் கல்யாணம்பண்ணி அவஸ்தைபட வேண்டியிருக்கும் ... (பேப்பர் பென்சிலை எடுத்து) இந்தா இந்த பேப்பரை வச்சிக்க. இந்தப் பென்சில் குச்சியை வச்சிக்க. எல்லா விஷயத்துக்கும் எழுதியே காட்டிடு.

(ராதா புரியாமல் விழிக்க)

புண்யகோடி : இனிமே எல்லா விஷயத்துக்கும் எழுதியே காட்டிடு! .... போய்ட்டு வரட்டுமா ராதா நான் போய்ட்டு வரட்டுமா ... அது கெட்டுது போ! ... (போகிறான்)

*

காட்சி 52] [மில் கேன்டீன்

[புண்யகோடியுட்பட பல தொழிலாளர்கள் சிற்றுண்டி அருந்தியவாறு இருக்கிறார்கள்.]

புண்யகோடி : (சாப்பிட்டுக் கொண்டே) பரந்தாமனைப் போல ஒரு நாணயமான தலைவனைப் பார்க்க முடியாது. நல்ல ஒழுக்கம், நேர்மையான நடத்தை இவைகளுக் கெல்லாம் ஒரே ஒரு ஏக எடுத்துக்காட்டு நமது பரந்தாமனேதான்.

தொழிலாளி ஒருவன் : நீங்க புகழ்ந்து பேசுறீங்க. உங்க புள்ளே தான் எழுதியிருக்கு "போலித் தலைவன்" என்று.

புண்யகோடி : புள்ளே எழுதுவான் புத்தி கெட்டவன். அவன் எனக்குப் புள்ளேயா, துரோகி.

தொழிலாளி : சும்மா இருங்க. பாண்டியன் பெரிய பகுத்தறிவு வாதி! இலட்சிய வீரன்! உண்மைத் தொண்டன்.

புண்யகோடி : அவனு...துரோகி!

தொழிலாளி : போலித் தலைவன்னு சினிமாகூட எடுக்கப்போறுங்களாம்.

புண்யகோடி : எடுப்பாங்க எடுப்பாங்க! முதல்ல இந்த சினிமாவே ஒழியணும். சீர்திருத்தம் மண்ணுங்கட்டி, விதவைக்கு திருமணம். பால்ய விவாகம் கூடாது. வயசானவனுக்குக் கல்யாணமா. இதெல்லாம் சினிமா. எப்ப ஒழியுமோ இந்த சினிமா.

தொழிலாளி : ஏன் உங்களையே தாக்குதோ !

புண்யகோடி : ஏய், பாட்டாளிக்கு ஏண்டா படக்காட்சி !

தொழிலாளி : நாள் முழுதும் கஷ்டப்பட்டு வேலை செய்றவனுக்கு கொஞ்சம் நிம்மதி தர்றது சினிமா. அந்த அல்ப சந்தோஷங்கூட வேண்டாங்கிறீங்களா ?

புண்யகோடி : அய்ய சந்தோஷம். உலகம் பூரு இந்த கரண்டு கட்டு வந்து சினிமாவே ஒழிஞ்சி போகணும்.

தொழிலாளி : நல்ல எண்ணத்தைப் பாருடா. சினிமா ஒழியறத்துக்காக மழை பேஞ்சு ஊரு செழிப்பாகறதும் கூடாதுங்கிறரு !

மற்றொரு தொழிலாளி : வயசானுலே இப்படித்தான் உளறுவாங்க.

புண்யகோடி : யாருக்கடா வயசாச்சு...பல்லெத் தட்டிடுவேன். இந்தப் பசங்கள்ளாம் பாண்டியன் கோஷ்டிபோல இருக்கு. அவனும் இப்படித்தான் சொன்னன். வயசாயிட்டுதாம்ல வயசு. இது பழனி பஞ்சாமிருதம் பட்ட தலெ.

★

காட்சி 53] [கருடன் பதிப்பகம்

முரடன் : இத பாருங்க. உஷாவைப் பிடிச்சி இழுக்கும்போது இந்த நெக்லஸ்கூட அறுந்து கையோட வந்துட்டுது.

(பரந்தாமன் நெக்லஸை வாங்கிப் பார்த்தல்)

கருடன் : ஆஹா! அருமையான வைரம். ரொம்ப விலையிருக்கும். ம்...கொடு கொடு. அதாவது மிச்சப்படட்டும். பெட்டியிலே வைப்போம்.

(பரந்தாமன் நெக்லஸைக் கொடுக்கவில்லை)

பையன் : கனல் கக்கப் பேசுவது. காரசாரமாக எழுதுவது ! கட்டுப்பாடில்லாமல் கட்சி நடத்துவது. கண்மூடித்தனமாக தொழிலாளரைத் தூண்டுவது. இதெல்லாம் போலித் தலைவர் விடும் புஸ் வாணங்கள்.

(என்று "போலித் தலைவன்" என்ற பாண்டியனின் புத்தகத்தை படித்தபடி வருகிறான். பரந்தாமன் ஆத்திரம் அதிகமாகிறது.)

★

காட்சி 54] [Reading Room

[ஊர் மக்கள் பத்திரிகை செய்தி படித்துக் கொண்டிருக்கிறார்கள்.]

"பயங்கரமான வழிப்பறி. லேடி டாக்டர் உஷா தேவியின் நெக்லஸ் பறிபோயிற்று"—நேற்று இரவு கோவைக்குப் பக்கமுள்ள குனியமுத்தூர் கிராமத்திற்கு வைத்தியம் பார்க்கச் சென்று திரும்பிய, சிவசக்தி மில் முதலாளியின் புதல்வி லேடி டாக்டர் உஷா தேவியை சிலர் வழிமறித்து அவளுடைய ஐயாயிர ரூபாய் பெறுமானமுள்ள நெக்லஸை கொண்டுபோய் விட்டார்கள். போலீஸார் புலன் விசாரிக்கிறார்கள்.

*

காட்சி 55] [பூமாலை வீடு

[பூமாலை ஊருக்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறாள். அங்கு வந்த பரந்தாமன்]

பரந்தாமன்: எங்கக்கா பயணம்?

பூமாலை: மதராஸுக்கு...

பரந்தாமன்: என்ன திடீர்னு மதராஸ்!

பூமாலை: ஏன்? குமுதாவைப் பார்க்கப் போறேன். போகக் கூடாதா?

பரந்தாமன்: கூடாதென்ரு சொல்கிறேன்...ம்....ஆமாம் பாண்டியன் மெட்ரூஸில்தானே!...

பூமாலை: ஆமாம். நீ ஏன் அதெல்லாம் கேக்கிறே! உனக்குத் தான் உற்ரூர் உறவினர், நல்லவர் கெட்டவர் எதுவுங் கிடையாதே.

பரந்தாமன்: ஏதோ ஆத்திரத்தில் செய்துவிட்டேனக்கா அப்படி.

பூமாலை: நல்ல ஆத்திரம், கொஞ்சம் தவறியிருந்தால் குமுதா விதவையாக ஆகியிருப்பாள்.

(உள்ளே போகிறாள். நெக்லஸை பெட்டியில் வைக்கிறான். பூமாலை வந்ததும்)

பரந்தாமன்: நான் ஏதாவது தவறு செய்திருந்தால் மன்னித்து விடக்கா! (பூமாலை பார்த்தல்) நான் பாண்டியனை சுட முயன்றது தவறுதான். என்னை ஒருபோதும் காட்டிக் கொடுக்க மாட்டாயே...

(வேலைக்காரி வந்து)

வேலைக்காரி: நேரம் ஆச்சும்மா.

பூமாலை: (பரந்தாமனிடம்) நான் வரட்டுமா.

பரந்தாமன்: சரிக்கா! எல்லாரையும் விசாரிச்சேன்னு சொல்லு! பாண்டியனுக்கும் குமுதாவுக்கும் என் பரிபூரண ஆசீர் வாதங்களைச் சொல்லு!

(பூமாலை போகிறாள்)

*

காட்சி 56] [மில் முதலாளி வீடு

முதலாளி: உஷா! இரவு நேரங்களில் வெளியில் போகாதே என்று சொன்னேனே! கேட்டாயா! ஏழைகளுக்கு உதவி செய்கிறேன் என்று நீ போகிறாய்.

உஷா: போனதைப்பற்றி ஏனப்பா பேசுகிறீர்கள். போலீஸ் ஸார் என்ன சொன்னார்கள்.

முதலாளி: என்ன சொன்னார்கள். யாரும் அகப்படவில்லையாம்!

("அகப்பட்டுவிட்டான்!" என்ற குரலுடன் பரந்தாமன் பிரவேசிக்கிறான்.)

முதலாளி: யார்?

பரந்தாமன்: (உட்கார்ந்துகொண்டே) எல்லாம் கேள்விப் பட்டேன். ஓ...இதுதான் உஷாவோ! (உஷாவிடம்) உங்களுக்கேற்பட்ட ஆபத்தை ஆண்டவன்தான் தடுத் திருக்கிறான்.

முதலாளி: அதிருக்கட்டும் ஆள் அகப்பட்டுவிட்டான் என்றீரே!

பரந்தாமன் : ஆமாம். தொழிலாளர்களைத் தூண்டிவிடும் பலாத்காரவாதிகளின் வேலையிது !

முதலாளி : ஆங்...பலாத்காரவாதி !

பரந்தாமன் : அவன்தான் பாண்டியன்.

முதலாளி : பாண்டியனு ?

உஷா : பாண்டியனு ?

பரந்தாமன் : அவனேதான் ! அராஜகத்திற்கு ஆரம்பவிழா நடத்தியிருக்கிறான். விரைவில் ஆலைக்கே தீ வைப்பான். உங்களை அழிப்பதற்கே ஒரு சிறு கும்பலை சேர்த்து வைத்திருக்கிறான் அவன்.

முதலாளி : உம் ! அவனைப் பிடிக்க ஆதாரம் !

பரந்தாமன் : ஆதாரம் ! கொள்ளையடிக்கப்பட்ட வைர நெக்லஸ் எங்கேயிருக்குமென்று எண்ணுகிறீர்கள். சென்னையில் அவன் வீட்டில்தானிருக்க வேண்டும் உடனே போலீஸாருக்கு தகவல் கொடுத்து அவன் வீட்டை சோதனை போட வேண்டும். இதை அவசரமாகச் செய்ய வேண்டும். இப்போதே Phone செய்யுங்கள் !

முதலாளி : சபாஸ் ! சரியான யோசனை ! (போனை எடுத்துப் பேசுகிறார்) ஹலோ ! போலீஸ் ஸ்டேஷன் ;

*

காட்சி 57] [சென்னையில் குமுதா வீடு

[பாண்டியன் காலையில் குளித்துவிட்டு புது ஆடைகளுடன் உட்கார்ந்திருக்கிறான். குமுதாவும் எதிரே அமர்ந்து காப்பி சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். பூமாலை வருகிறாள் கோவையிலிருந்து !]

குண்டுமணி : சின்னம்மா ! அம்மா வர்றாங்க !

பாண்டியன் : வருவதாய் முன்கூட்டி எழுதக்கூட இல்லையே.

குண்டுமணி : எதிர்பார்க்காத நேரத்தில் வந்தாதான் சந்தோஷம் ஜாஸ்தியாகும்னு இப்படி வந்திருக்காங்க...!

குமுதா : எல்லோரும் சௌக்கியமா சின்னம்மா ?

குண்டுமணி : குமுதா அம்மாக்கு சின்னய்யா ஏதாவது பிரசன் டேசன் அனுப்பியிருக்காரா ?...

குமுதா : உம். அனுப்பியிருக்காருடா. காதுக்கு கம்மல், கழுத் துக்கு நெக்லஸ் !...

பூமாலை : (குண்டுமணியிடம்) இந்தா பெட்டியைக் கொண்டு உள்ளே வையி.

(குண்டுமணி பெட்டியை எடுத்துக்கொண்டு உள்ளே போகிறான்)

உள்ளே :—

(பூமாலை தான் கொண்டு வந்த ஆப்பில் பழங் களை எடுத்துக் கொடுக்கிறாள்)

குண்டுமணி : உம். இப்ப பழம் வாங்கிட்டு வந்திருக்கீங்க. இன்னம் நாலு மாசங்கழித்து வரும் போது பம்பரம், பட படா வண்டி, பாலாடை, கிலுகிலுப்பை எல்லாம் வாங் கிட்டு வருவீங்க...

குமுதா : ஏய், போய் காபி கொண்டாடா.

(போகிறான்).

பூமாலை : ஏன் குமுதா, உண்மையைச் சொன்னு கோபமா ?...

(போலீஸார் வந்து விட்டார்கள் உள்ளே எல்லோரும் திகைப்பு)

பாண்டியன் : வாங்க... உட்காருங்கள்...

சப்-இன்ஸ்பெக்டர் : உட்கார நேரமில்லை நீங்கள்தானே பாண் டியன் ?

பாண்டியன் : ஆமாம்...

சப்-இன்ஸ்பெக்டர் : குளியமுத்தூர் வழிப்பறி சம்பந்தமா உங்க வீட்டை சோதனை போட வேண்டியிருக்கு...

பாண்டியன் : என் வீட்டையா ?

சப்-இன்ஸ்பெக்டர் : yes !...

பாண்டியன்: என்ன சார் சொல்றீங்க...

சப்-இன்ஸ்பெக்டர்: நான் சொல்லலே, இந்த ஆர்டர் சொல்லுது! எய்ட் செவன் சிக்ஸ், கமான்....

(பூமாலை குமுதா திகைப்பு—வீடு சோதனை போடப் படுகிறது. எல்லா இடங்களிலும் போலீஸார் தேடுகிறார்கள்—)

குமுதா: சின்னம்மா (கட்டிக் கொள்ளல்)

பூமாலை: சும்மா இரு. சும்மா இரு. ஒண்ணுமில்லே.

பாண்டியன்: குமுதா! பைத்தியம்! என்ன இது! ஏன் பயப்படுகிறாய்? குற்றம் இருந்தால்தானே பயப்பட வேண்டும்.

(போலீஸார் எல்லா பெட்டிகளிலும் தேடுகிறார்கள். எதிலும் எந்தவித ஆதாரமும் கிடைக்கவில்லை.)

சப்-இன்ஸ்பெக்டர்: ம்... கிடைக்கலியே.

(குண்டுமணி பூமாலையின் பெட்டியை எடுத்துக் கொண்டு வந்து)

குண்டுமணி: ஏன் சார் இதை மிச்சம் வச்சுட்டுப் போறீங்க. இதையும் பாத்துக்குங்க ... (பூமாலையிடம்) சாவி கொடுங் கம்மா!...

(பூமாலை சாவிதர, பெட்டித் திறக்கப்படுகிறது)

சப்-இன்ஸ்பெக்டர்: என்னப்பா உனக்கு கோபம் வருது! எங்க கடமையை நாங்க செய்றோம்.

(துணிமணிகளை எடுத்துப் பார்க்கும்போது கடைசியில் நெக்லஸ் இருக்கிறது. பூமாலையின் திகைப்பு. சப்-இன்ஸ்பெக்டர் நெக்லஸை திருப்பித் திருப்பிப் பார்க்கிறார். நெக்லஸ் பின்புறத்தில் 'உஷா' என்ற எழுத்துக்கள் இருக்கின்றன.)

சப்-இன்ஸ்பெக்டர்: உஷா! இதேதான்.

(குமுதர்-பாண்டியன்-பூமாலை திகைப்பு)

சப்-இன்ஸ்பெக்டர் : அகப்பட்டுவிட்டது. பாண்டியன் உம்மை அரஸ்ட் செய்திருக்கிறேன்.

பாண்டியன் : ஆ!

பூமாலை : இது என் பெட்டி சார். அவரை விட்டுடுங்க...

சப்-இன்ஸ்பெக்டர் : ஸ்!... சொல்ல வேண்டியவைகளை கோர்ட்டில் சொல்லுங்கள். என் வேலையை யாரும் தடுக்காதீர்கள். (போலீஸாரிடம்) ம்... கொண்டு போங்கள்! ... ...

குமுதா : (பாண்டியனிடம் ஓடிவந்து அலறல்) பாண்டியன்! பாண்டியன்!

பாண்டியன் : குமுதா!

குமுதா : இது என்ன பாண்டியன். எனக்கொன்றுமே புரியவில்லை... ...

பாண்டியன் : புரியவில்லையா! இதுதான் உலகம்!

பூமாலை : சப்-இன்ஸ்பெக்டர் சார்! நான் தான் ஊரிலிருந்து வந்தேன். இது என் பெட்டிதான். பாண்டியன் மீது எந்த குற்றமுமில்லை. அவரை விட்டு விடுங்கள்.

சப்-இன்ஸ்பெக்டர் : தொந்திரவு கொடுக்காதீர்கள். உம்..... கொண்டு போங்கள்.

(பாண்டியனை அழைத்துச் செல்கிறார்கள்)

குமுதா : (திகைத்து நின்று ஓடுகிறாள்) பாண்டியன், பாண்டியன்.....(ஓடுகிறாள்)

(பாண்டியன் ஜீப்பில் ஏற்றப்படுகிறான். அலறியோடும் குமுதாவை பூமாலை பிடித்துக்கொண்டு அணைத்து)

பூமாலை : குமுதா...அமைதியாயிரு!... அழாதே! அழாதே!

குமுதா : அழாமல் ஆனந்தமடையச் சொல்கிறாயா! எனக்கு எப்படி வரும் ஆனந்தம்? அவரை ஜெயிலுக்கு அனுப்ப வேண்டும் என்று நான் சங்கணம் கட்டிக்கொண்டா வந்தேன், காரியம் கை கூடியதும் மகிழ்ச்சியடைய.....

பூமாலை : குமுதா !

குமுதா : ஏன் சின்னம்மா, எங்கள் வாழ்வை இப்படிக் கெடுத்தாய் ?

பூமாலை : குமுதா ! நான் ஒரு குற்றமும் அறியாதவள் குமுதா ! யாருடைய சூதாட்டத்திற்கோ நான் வெட்டுக்காயாக பயன்பட்டு விட்டேன், என்னையும் அறியாமல் !

குமுதா : யாருடைய சூதாட்டம் ! ஏன் மறைக்கிறாய். ஏல்லாம் உன் தம்பியின் சூதாட்டம்தான் !... தெரியும் எனக்கு !...இருவருமே சேர்ந்துகொண்டு எங்கள் இன்ப வாழ்வைக் கெடுக்க திட்டம் போட்டிருக்கிறீர்கள் என்று....

பூமாலை : குமுதா ! சந்தர்ப்பம் செய்திருக்கும் சதியை உன்னால் உணர முடியாவிட்டாலும் உன் சின்னம்மாவுக்கு இருதயம் என்று ஒன்று இருக்கிறது என்பதைக்கூடவா மறந்து விட்டாய் !

குமுதா : இருதயம் இருக்கிறது. அதில் உன் தம்பியின் ஷேம லாபங்களுக்கு மட்டுமே இடமுமிருக்கிறது.

பூமாலை : (அலறல்) குமுதா !

குமுதா : தன்னுடைய படுக்கையறைப் பதுமைகளில் ஒருத்தி யாக இருக்கவேண்டிய குமுதா பகைவன் பாண்டியனின் காதலியாகிவிட்டாளே என்ற ஆத்திரம் பரந்தாமனுக்கு ! நம்முடைய காதலனை இருக்கவேண்டிய பாண்டியன் குமுதாவோடு கொஞ்சிக் கிடக்கிறானே என்ற குமுறல் உனக்கு !

பூமாலை : ஆ ! என்ன சொன்னாய் ! அடி பாவி !

குமுதா : இனிமேல் எதுவும் சொல்ல வேண்டியதில்லை. இந்த வீட்டு பந்தம், பாசம், சொந்தம் எல்லாம் இன்றோடு தொலைந்தது ! போய் வருகிறேன். இந்தா நீ பூட்டிய பொன் அணிகள் ! பூரைங்கள் எடுத்துக்கொள் ! (நகை களைக் கழற்றி எறிதல்) தம்பியோடு சுகமாயிரு ! நான் போகிறேன்...

பூமாலை : குமுதா !....

குமுதா : என்னைத் தொடாதே ! இனி நான் யார் ? நீ யார் ?

(ஓடுகிறாள்—பூமாலை அசைவற்று நிற்கிறாள்)

★

காட்சி 58] [News Paper Sheet

[கருடன், பரந்தாமன் சிரிப்பு]

கருடன் : (பத்திரிகையை வைத்துக்கொண்டு) பாண்டியனுக்கு மூன்று வருட கடுங்காவல் தண்டனை !

(மீண்டும் சிரிப்பு)

★

காட்சி 59] [ஜெயில்

குமுதா : உங்களை விடுதலை செய்ய எவ்வளவோ முயற்சித்தேன். முடியவில்லை பாண்டியன்....

பாண்டியன் : வருந்தாதே குமுதா ! எனக்கும் விடுதலையில்லாமலா போய்விடப் போகிறது.

குமுதா : பாண்டியன் நான் திக்கற்றவள். நீங்கள் வரும்வரை எனக்கு யார் கதி.

பாண்டியன் : நீயேதான் கதி ! என்னை வெளியூர் ஜெயிலுக்குக் கொண்டு போகிறார்களாம். பரந்தாமன் கண்களில் பட்டு விடாதே. ஜாக்ரதையா இரு.

குமுதா : பாண்டியன் ! உங்களைப் பிரிந்து எப்படி இருப்பேன்.

(அழல்)

பாண்டியன் : அழாதே குமுதா ! அழாதே !...உன்னை சிரித்த முகத்தோடு என் சிந்தை குளிர ஒருமுறை பார்க்கிறேன். எங்கே சிரிப்பு காட்டு !

குமுதா : சிரிக்கவா ? சிறைச்சாலையிலே என் ஜீவனை வாட விட்டு நான் சிரிக்கவா ?

பாண்டியன் : அழாதே குமுதா! மூன்று வருடங்கள் விரைவில் ஓடிவிடும். நான் திரும்பிவந்து உன்னை சந்திக்கும் போது உன் மடியிலிருந்து அப்பா என அழைக்கும் மழலைச் செல்வத்தை வாரி அணைத்துக்கொள்வேன்.

குமுதா : (பதறி) பாண்டியன். பாண்டியன்.

வார்டர் : புறப்படம்மா / டயம் ஆச்சு.

(குமுதா பாண்டியனை விட்டு)

குமுதா : பாண்டியன். பாண்டியன்.

பாண்டியன் : போய்வா குமுதா!

(குமுதா போதல்)

*

காட்சி 60] [பூமாலை வீடு

பூமாலை : (சோகமுடன் கண் கலங்க) கண்களை விற்று விட்டு சித்திரம் வாங்குகிற கதைக்கும் குமுதா பாண்டியன் வாழ்வைச் சிரழித்துவிட்டு சகோதர வாஞ்சையைக் காப்பாற்றிக் கொள்ளும் என் நிலைமைக்கும் என்ன வித்தியாசம்....

பரந்தாமன் : கண்களை விற்கும்படி யார் சொன்னது! என்னைக் காட்டிக் கொடுத்துவிட்டுப் போவதுதானே!

பூமாலை : அது என் குற்றந்தான். அதற்கு தண்டனையே உலகத்தில் கிடையாது!

பரந்தாமன் : பாண்டியன் என்னை எதிர்த்து மேடை அதிரப் பேசலாம். கோடை மழைபோல் வசைச் சொற்களைக் கொட்டலாம். போலித் தலைவன் என புத்தகம் போட்டு பொதுஜன விரோதியாக்கலாம். இப்படியெல்லாம் உன் தம்பிக்குத் தகாத பெயர் — இழி தன்மை கற்பிக்கலாம். அதற்கு நான் சரியான பாடம் கற்பிப்பது மாத்திரம் பாபம் பாதகச் செயல். நன்றியிருக்கிறதக்கா நியாயம்.

பூமாலை : கொள்கை விரோதத்திற்காக, குடும்பத்தைக் கெடுப்பதுதான் நியாயம். இல்லியா!

பரந்தாமன் : ஆமாம்! அதற்கென்ன செய்யப் போகிறாய்....

பூமாலை: என்ன செய்யப் போகிறேனு! முன்பே சொன்னுயே; காட்டிக் கொடு என்று, அதை செய்யப் போகிறேன்!

பரந்தாமன்: ஆ!

பூமாலை: கூண்டிலே நிறுத்துகிறேன். குற்றவாளி நீதான் என்று கூறுகிறேன். ஊரார் நகைக்கட்டும். ஊதாரித் தலைவனே என்று கேலி செய்யட்டும்!

பரந்தாமன்: அக்கா வேண்டாம்!

பூமாலை: அப்படிச் செய்தாலாவது நீ திருந்தமாட்டாயா? அதையும் செய்து பார்க்கிறேன். உன்னைத் தம்பியாகப் பெற்றதற்கு வேறென்னதான் எனக்கு சுகம்!

பரந்தாமன்: என்னைக் காட்டிக் கொடுப்பதுதான் உனக்குச் சுக மென்றால், நான் கைதியாக நிற்பதுதான் உனக்குக் களிப்பு தரும் காட்சி என்றால், உன்னை நம்பி என்னை ஒப்புவித்து விட்டுப் போனர்களே—அந்த அம்மா அப்பாவின் ஆத்மாக் கள் நீ செய்யும் அந்தப் புனித காரியத்தால்தான் சாந்தி யடையுமென்றால் இப்போதே போ! போலீஸாரிடம் சொல்! பொதுமக்களிடம் பறை சாற்று! தம்பியைக் காட் டிக் கொடு! போ அக்கா போ! அம்மாவும் அப்பாவும் உனக்கு இட்ட கட்டளை அதுதானே! அதை நிறை வேற்று போ!

பூமாலை: பரந்தாமா! (அழுதல்) பரந்தாமா இனிமேலாவது நீ திருந்தி நடக்கிறாயா?

பரந்தாமன்: நான் என்ன தவறு செய்கிறேன் திருந்தி நடக்க.

(போகிறான். பூமாலை கண்ணீருடன் நிற்கிறாள்.)

★

காட்சி 61] [டைப்ரைட்டிங் ஆபீஸ்

[அங்கே பல கிளர்க்குகள். குமுதாவும் டைப் செய்து கொண்டிருக்கிறாள். எல்லா மேஜையிடமும் கவ னித்து வந்த மேனேஜர் குமுதாவுக்கு பின்புறம்

வந்து நிற்கிறார். குமுதா பாண்டியன் பாண்டியன் என்று அதே வார்த்தையை டைப் செய்து கொண்டிருக்கிறாள்]

மேனேஜர்; ரொம்ப ஒழுங்காயிருக்கு டைப் பண்ற லக்ஷணம்!

(குமுதா திடுக்கிட்டு எழுதல்)

மேனேஜர்: பாண்டியன்! பாண்டியன்! போதும் நீ செஞ்ச வேலை. வெளியே போ!

குமுதா: சார் தயவு செய்து ... .

மேனேஜர்: ஊஹூம். போன்னு போ!

(குமுதா நகருதல்)

★

காட்சி 62] [ஒரு வீட்டின் பின்புறம்

அம்மாமி: நன்னியிருக்குடியம்மா வேலை செய்றது! எங்க வீட்டு சாமானெல்லாம் நொறுக்கிண்டு போய்டுவே போலிருக்க! ... போ போ! போதும் போதும் உன் வேலையும் நீயும். அதுக்குத்தான் கர்ப்ப ஸ்திரியை வேலைக்கு சேர்க்க வேண்டாம்னேன்.

குமுதா: அம்மா! உங்கள் மகள் மாதிரி நினைச்சு ...

அம்மாமி: மகளாவது மகள்! இங்கதான் ஒன்பதும் பெண்ணு பொறந்து கிடக்கே! நீவேற்யா? போடின்னு போ!

★

காட்சி 63] [கருடன் பதிப்பகம்

புண்யகோடி: எதுக்காக இதெல்லாம் சொல்றேன்னு தொழிலாளர் கோரிக்கை கூடிய சீக்கிரம் நிறைவேறியாகணும். நம்மை நம்பிகிட்டு ஆயிரக் கணக்கான தொழிலாளிகள் இருக்காங்க!

பரந்தாமன்: கவலைப்படாதீர்!

புண்யகோடி: நீங்க அதுக்குத்தான் திட்டம் தீட்றிங்கன்னு தெரியுது! இருந்தாலும் சில தொழிலாளிங்க கொஞ்சம்

கொஞ்சமா அந்தப் பாண்டியன் கட்சியிலே சேர்ந்துகிட்டு, பகுத்தறிவு அது இதுன்னு பேசிகிட்டு நம்பகூ கொஞ்சம் கேவலமா நினைக்கிறுங்க !

பரந்தாமன்: பரவாயில்லை. அவர்களால் என்ன செய்ய முடியும்? அவனுந்தான் ஜெயில்ல கிடக்கிறுன். உம். நீங்க போங்க நான் எல்லாம் உடனடியாக கவனிக்கிறேன்.

புண்யகோடி: நான் வர்ரேன். நமஸ்காரம். என்ன, உங்கூத்தானே ...

கருடன்: வாழ்க தொழிலாளி வர்க்கம் !

பரந்தாமன்: இவன் வேற தொழிலாளி தொழிலாளின்னு உயிரைவாங்குறுன்.

கருடன்: அட சும்மா இருப்பா ! அந்தத் திரை மறைவிலே தானே நம்ம நினைச்சதெல்லாம் நடத்த முடியுது !

பரந்தாமன்: நினைத்ததெல்லாம் வெற்றிதான், ஆனாலும் அந்த உஷா விஷயம் Failure ஆயிட்டுதே !

கருடன்: அதெல்லாம் ஒண்ணும் ஆகாது ! அதுக்குத்தான் சொல்றேன், நீ உஷாவை கல்யாணம் பண்ணிட்டீன்னு, அவ்வளவு பெரிய மில்லு உனக்குச் சொந்தம் ! ஆயிரக் கணக்கான தொழிலாளிகள் உனக்கு அடிமை ...

பரந்தாமன்: தொழிலாளி தலைவன் மில் முதலாளி மகளை கல்யாணம் செய்வது ....

கருடன்: அட "மாஸ் சைகாலஜி" தெரியாது உனக்கு? அதுக்கும் ஒரு காரணம் சொல்லிவிடலாம்.

பரந்தாமன்: சொல்லலாம். ஆனால் முன்னுக்குப் பின் முரணுகப் பேசுவது ... ...

கருடன்: அப்படித்தான் பேசணும், அப்பறம் தலைவர்னு என்ன லக்ஷணம் ... நான் சொல்றபடி செய்யப்பா !

பரந்தாமன்: உஷாவைக் கல்யாணம் பண்ணவேண்டும். அவ்வளவு தானே !

கருடன்: ஆமாம்! அப்படிச் செஞ்சா எவ்வளவோ காரியத்துக்கு சௌகரியம். முதல்ல நம்ப பதிப்பகத்தையே விருத்தி பண்ணலாம்.

பரந்தாமன்: சரி, அக்காளிடமே சொல்லி பெண் கேட்கச் சொல்வோம்.

கருடன்: அட, இதுக்கெல்லாம் ஏம்ப்பா அக்கா. அதுவேற எதுக்கெடுத்தாலும் தடை சொல்லும் சனியன் மாதிரி!

பரந்தாமன்: ஏ கருடா! நிதனமா பேசு! எங்க அக்காவப் பத்தி எதுவும் பேசாதே!

கருடன்: மன்னிச்சிக்கோ, மன்னிச்சுக்க! ஒரு டெஸ்ட் பாத்தேன். அக்காகிட்ட தம்பிக்கு எவ்வளவு அன்பு இருக்குன்னு.....

★

காட்சி 64] [வாட்ச்மேன் வீடு

வாட்ச்மேன்: ஏம்மா வருத்தப்பட்டுகிட்டே இருக்கே! சந்தோஷமா இரும்மா!

குமுதா: எனக்கேது சந்தோஷம்! உங்களுடைய நிலைமையில் நான் வேறே பாரமா வந்திருக்கிறேனே என்று நினைக்கும் போது.....

வாட்ச்மேன்: பரவாயில்லேம்மா... அதனால என்னம்மா! உன் புருஷன் ஜெயில்லேருந்து வர்ர வரையிலும் நீ இங்கேயே இருக்கலாம். எனக்குத்தான் வேற யாரு! நீ தான் எம் பொண்ணு மாதிரி!.....

குமுதா: உங்க உதவியை மறக்கவே முடியாது!.....

வாட்ச்மேன்: சரி, பத்திரமாயிரும்மா! நான் ஆஸ்பத்திரிக்குப் போய்ட்டு வாரேன்.

★

காட்சி 65] [மில் முதலாளி ரூம்

முதலாளி: (பரந்தாமனிடம்) உஷாவின் இஷ்டத்துக்கு விரோதமா திருமணம் செய்ய மாட்டேன்.

பரந்தாமன் : பெண்புத்தி பின்புத்தி என்பார்கள். இந்த ஒரு விஷயத்தில் பெற்றோர்கள் அபிப்ராயத்திற்குத்தான் பெண்கள் நடக்க வேண்டும்.

முதலாளி : பெற்றோர்கள் இஷ்டமே வேறு மாப்பிள்ளைக்கு அவளைக் கொடுக்க வேண்டும் என்று தானே.....

பரந்தாமன் : அப்படியானால் முடியாது. இல்லையா? உம்.....

முதலாளி : இது என்னய்யா கேள்வி! நல்லாயிருக்கு.....

பரந்தாமன் : கடைசியாகச் சொல்கிறேன், உஷாவை எனக்குக் கொடுத்தால் சரி; இல்லாவிட்டால் பெரியதொரு புரட்சியை சமாளிக்க நேரிடும்.

முதலாளி : என்னய்யா பூச்சி காட்ற.....

பரந்தாமன் : இந்தத் தடவை பணத்தைக் கொடுத்து ஏமாற்ற முடியாது பரந்தாமனை!

முதலாளி : பெண்ணைக் கொடுத்து ஏமாறச் சொல்றியா? முடியாது! எது வேண்டுமானால் செய்துக்கொள் போ!

(பரந்தாமன் கோபமாக வெளியேறுகிறான்)

★

காட்சி 66] [மில் வாசற்புரம்

தொழிலாளி : என்ன இவ்வளவு நேரமா பேசுறுங்க முதலாளியும் பரந்தாமனும்?

புண்யகோடி : என்ன பேசுவாங்க! நம்ப கோரிக்கையை முதலாளி கவனிக்கப் போறாரா இல்லையான்னு ஒரு முடிவு கட்டிட்டுத்தான் வருவாரு பரந்தாமன். அவர் என்ன சாமான்யமா! சாக்ஷாத் புரட்சி அவதாரம்.

(பரந்தாமன் வேகமாக வருதல்)

புண்யகோடி : தம்பீ! என்ன பேசினீங்க! என்ன ஆச்சு.....

பரந்தாமன் : என்ன ஆச்சு. குறைகளை எடுத்துச் சொன்னேன். கோரிக்கையை கவனிக்கும்படியாக எப்படி எப்படியோ கேட்டுக்கொண்டேன். தொழிலாளர் புரட்சி மூளும் என்றுகூட எச்சரித்தேன். அசையவில்லை அந்த முதலாளி.

புண்யகோடி : அப்புறம்?

பரந்தாமன் : அப்புறமென்ன! திருமணம் செய்யவேண்டியது தான்!

புண்யகோடி : என்ன?

பரந்தாமன் : இல்லை ... நிர்மானம் செய்ய வேண்டியதுதான்! திட்டம் தீட்ட வேண்டியதுதான்! கோரிக்கைகளை கவனிப் பதாக இத்தனை நாள் அமைதியாயிருந்தோம். அதை கோழைத்தனம் என்று கருதிவிட்டார் குருட்டுமதி படைத் தவர்! கொதித்துக் கிளம்புவோம்! போர்க்கொடியை உயர்த்துவோம்! புரட்சி நடத்துவோம்! புரட்சி!

புண்யகோடி : புரட்சி! (எல்லோரும் புரட்சி கோஷம்)

☆

காட்சி 67] [புண்யகோடி வீடு—இரவு

[புண்யகோடி கதவைத் தட்டல்]

குரல் : ராதா ராதா!

(பரந்தாமன் வேறு பக்கமாக வெளியேறுகிறான். புண்யகோடி வருகிறான். பரந்தாமன் வந்ததைச் சொல்ல முனைகிறாள்)

புண்யகோடி : ராதா சாப்பாடு போடு சீக்கிரம்!

ராதா : ம்...ம்...ம்...

புண்யகோடி : என்னை...இன்னைக்கு நேரத்லயே சாப்ட்டு படுக்கணும்...

(கிராமபோன் வைத்துப் பாடியதற்காக கிராம போனைக் காட்டுகிறாள்)

புண்யகோடி : ஆமாம்! இப்பதான் சங்கீதம் கேட்கிற வேளை! சாப்பாட்டைப் போடு நீ!

(பரந்தாமன் போல ஜன்னலைக் காட்டுகிறாள்)

புண்யகோடி : ஜன்னல் திறந்திருந்தா சாத்துறதுதானே...

(இன்னும் ஏதோ சொல்லப் போகிறாள்)

புண்யகோடி : அது கெட்டுது போ ! நீ சாப்பாடு போடுறியா இல்லியா !

*

காட்சி 68] [போலீஸ் ஸ்டேஷன் — இரவு

போலீஸ் : போலீஸார் மீது கல்வீச்சு !

II போலீஸ் : மில்லின் கதவையே தூள் தூளாக உடைத்து விட்டார்கள். மில் முதலாளி வீட்டிலும் கல் வீசினார்கள்.

போலீஸ் : தெருவில் ஜனங்கள் நடமாடவே பயப்படுகிறார்கள்.

போலீஸ் : நாளைக்கு காலையிலே பெரிய ஊர்வலம் ஒண்ணு இருக்காம்.

சப்-இன்ஸ்பெக்டர் : (வந்து) சரி. முக்கியஸ்தர்களையெல்லாம் கைதுசெய்ய உத்திரவு வந்திருக்கு. புறப்படுங்க !

*

காட்சி 69] [சாப்பாட்டு அறை

[ராதா சாப்பாடு போட ஒடுகிறாள்]

புண்யகோடி : (சாப்பிட்டுக் கொண்டே) ராதா ! விடியக் காலம் நாலு மணிக்கு எனக்கு வேலையிருக்கு தலைவர் பரந்தாமன் கட்டளைப்படி பெரிய புரட்சி ஊர்வலம் நடத்த தொழிலாளர்களை ஒன்று சேர்க்கணும் ! மறந்துடாதே ! நாலு மணிக்கெல்லாம் எழுப்பி விட்டுடு !...

(இருவரும் தூங்கிக்கொண்டிருத்தல். மணி பனிரெண்டு அடிக்கப் போகிறது. ஒரு கை கடிகாரத்தின் முட்களை நகர்த்தி நாலுமணி காட்டச் செய்கிறது. அது பரந்தாமன் கை. மணி நான்கு அடிக்கிறது. ராதா எழுந்து விடுகிறாள் — புண்யகோடியை எழுப்புகிறாள்)

புண்யகோடி : (எழுந்து கடிகாரத்தைப் பார்த்து) சபாஷ் ! பின் தூங்கி முன் எழும் பத்தினி என்பார்கள் முன்னோர்கள். அந்தப் பத்தினி நீயேதான் !....ம் கோட்டை எடு !

(கோட்டை மாட்டிவிட போய் விடுகிறான்—ராதா படுத்துக்கொள்கிறாள். பரந்தாமன் வந்து அவள் கண்களைப் பொத்த, திடுக்கிடுகிறாள்—பரந்தாமன் சிரிப்பு)

பரந்தாமன் : எப்படி வந்தேன்னு ஆச்சரியமாயிருக்கா! இது விஞ்ஞான காலம், கடிகாரம் தேவைப்படுகிறது!

(தெருவில் போய்க்கொண்டிருந்த புண்யகோடி மணிக் கூண்டைப் பார்க்க, 12½ எனவே திரும்புகிறான். இங்கே வீட்டினுள்—அவன் நெருங்க, அவள் நடுங்க, புண்யகோடி பிரவேசம்)

புண்யகோடி : அடபாவி! பாதகா!

(பரந்தாமன் திகைத்தல்)

புண்யகோடி : அடே கலியுக இந்திரா! பாட்டாளிகளின் தலைவன் நீதானடா! உன்னை பெரிய தலைவன்னு நம்பி நான் மோசம் போனேண்டா! அயோக்கிய பயலே! இந்திரனை கௌதமர் சபிச்சாராம், உடம்பெல்லாம் கண்களாப் போச்சொல்லி! உன்னை அப்படி சபிக்கக்கூடாது! ரெண்டு கண்ணை வச்சிக்கிட்டே நீ இப்படி ரெண்டகம் பண்றியே உடம்பெல்லாம் கண்ணுப்போன நீ ஊர்ப் பெண்களையெல் லாம் விடமாட்டே! உன்னை உயிரோடவே விடக்கூடாது!

பரந்தாமன் : ஏ கிழவா! மரியாதையாகப் பேசு!

புண்யகோடி : என்ன சொன்னே சண்டாளப் பயலே!

(உலக்கையைத் தூக்கிவர, பரந்தாமன் ஓட்டம்)

புண்யகோடி : இந்தப் பகல் வேஷக்காரனை நம்பி பாட்டாளி மக்களை யெல்லாம் கெடுத்துட்டேன் பாவிப் பயல்!

(போலீஸ் வந்து அரஸ்ட் செய்கிறது)

சப்-இன்ஸ்பெக்டர் : புண்யகோடி நீர் கைதுசெய்யப்படுகிறீர்!

புண்யகோடி : ஆ! ஏன்?

சப்-இன்ஸ்பெக்டர் : ஸ்ட்ரைக் செய்து அராஜகம் நடத்தியதற்காக !

புண்யகோடி : அது என் குற்றமில்லீங்க !

சப்-இன்ஸ்பெக்டர் : கோர்ட்டில் சொல்லும் !

(கைது செய்யப்படல்)

☆

காட்சி 70] [கருடன் பதிப்பகம்

பரந்தாமன் : புண்யகோடியை அரஸ்ட் செய்ய போலீஸ் போயிருக்கிறது! இன்னும் கொஞ்ச நேரத்தில் இங்கு வந்து விடுவார்கள் !

கருடன் : அய்யோ இப்ப எங்க ஓடுறது !

பரந்தாமன் : மாறுவேஷத்தில் ஓடினால்தான் போலீஸார் கண்ணிலிருந்து தப்பிக்கலாம்.

கருடன் : மாறுவேஷமா ?

பரந்தாமன் : ஆமாம். என்ன மாறுவேஷம் போடுவது ?

கருடன் : உனக்குத்தான் பைத்யம் மாதிரி நடிக்கத் தெரியுமே!

பரந்தாமன் : சே. அதெல்லாம் பழசாப் போச்சு. போலீஸுக்குப் புரிஞ்சுடும் !

கருடன் : அப்புறம் ஆப்புட்டுக்க வேண்டியதுதானு ?

(போலீஸ் ஜீப் சப்தம் கேட்டு ஓடுகிறார்கள். மாடியில் இருந்து ஆபீஸ் பையன் தூங்கி எழுந்து வருகிறான். போலீஸார் வந்து)

இன்ஸ்பெக்டர் : ஏ....கருடன் எங்கே ?

(பையன் தூக்கக் கலக்கத்தில் விழிக்கிறான்)

இன்ஸ்பெக்டர் : பரந்தாமன் எங்கே ?

(அதற்கும் விழிக்கிறான் கண்ணைத் துடைத்தபடி)

இன்ஸ்பெக்டர் : நீ உண்மையைச் சொல்லமாட்டே. நீயும் அவங்க ஆளுதானே ?

பையன்: இல்லிங்க! நான் சேத்திலே மலர்ந்த செந்தாமரை! என்னே விட்டுடுங்க!

இன்ஸ்பெக்டர்: ம்...தேடிப் பாருங்க.

★

காட்சி 71] [ஹோட்டல்

கருடன்: எல்லாம் அரேஞ்ச் பண்ணிட்டேன்.

பரந்தாமன்: ஆன் எப்படி அழகிதானு?

கருடன்: முப்பத்தி மூணு லட்சணம் பொருந்தியவள்.

பரந்தாமன்: என்னப்பா ஒரு லட்சணம் புதுசா சொல்றே!

கருடன்: அவ லட்சணத்தெ நீ நேரா பாத்தா தெரியும்.

பரந்தாமன்: ஆ!

கருடன்: தாஸியாகப் பொறந்தாலும், நீ வர்ணிப்பியே; அது மாதிரி தங்கக் கொடி பரந்தாமா!

பரந்தாமன்: கருடா!

கருடன்: அவளெப் பாத்தோன்ன எனக்கு ஒரு ஐடியா தோணுச்சி!

பரந்தாமன்: என்ன?

கருடன்: நம்ப 'வாழ்' புஸ்தகத்தின் இரண்டாம் பதிப்புக்கு அவளே அட்டைப் படமா போடலாம்!

பரந்தாமன்: ஏ சும்மாயிருடா பிஸ்னஸ்!

(பரந்தாமன் தாசி வீட்டுக்குப் புறப்படுகிறான்)

★

காட்சி 72] [தாசி வீடு

[பரந்தாமன் தாசியின் வருகைக்காக காத்திருக்க அவள் வந்து திரைமறைவில் நிற்கிறாள்]

பரந்தாமன்: ஏ இங்கே வா! அட தச்சு வான்னு! (ஒரு ரூபாய் நாணயத்தை எடுத்து வீசுகிறான்) வாங்கிறேன்ல!

வர்ரியா நான் வரட்டுமா? (எழுந்து வந்து) அன்புக்கரசி! அழகு மணி மாளிகையின் அழங்காரத் திருவுருவே! அழித் தெழுதாச் சித்திரமே! (திரையில் குரல்)

குரல்: அழுத்தெழுதாச் சித்திரமே! ஆடிவரும் பொன் விளக்கே! கட்டாணி முத்தழகி! கண்கவரும் ரத் தினமே!

பரந்தாமன்: ஆ! யார்? (பாமா வெளிப்படுகிறாள்)

பரந்தாமன்: ஆ! பாமா!

பாமா: நானேதான்! அன்புக்கரசி என வர்ணித்தாயே அந்த அரசியின் சரசி வேஷத்தைப் பார்! அழகு மணி மாளிகையின் அலங்காரத் திருவுருவம்! சமுதாயக் குட்டிச் சுவற்றின் நிழலில் சருக்கி விழுந்து உருக் குலைந்து கிடப் பதைப் பார்! அழித்தெழுதாச் சித்திரம்! நாள்தோறும் இங்கு நடமாடும் புதுப் புது ஓவியக் கலா ரசிகர்களால் திருத்தி எழுதப்பட்டு தெருவில் நாசமாகிக் கிடப்பதைப் பார்! ஆடிவரும் பொன் விளக்கு! அனுதினமும் தேடி வரும் ஆணழகர் கையில் அகப்பட்டு அணைந்து கிடப்பதைப் பார்! கட்டாணி முத்தழகி! மொட்டாகவே கருகிவிட்ட தைப் பார்! கண்கவரும் ரத்தினத்தில், மண்படிந்து கிடப் பதைப் பார்! கயவனே, காதகனே? கவிதை பேசிய காதற் புலவனே! பார் ... பார் ... பார் ... பார்?

பரந்தாமன்: பாமா பொறு! போனதை மறந்துவிடு!

பாமா: மறப்பதா! என் மானமே போய்விட்டதடா மகா பாபி!

பரந்தாமன்: மானத்தை இழக்க நீ தானே காரணம்!....

பாமா: ஆமாம். உன் காதல் மாளிகையிலே, கனகமணி கட்டி லிலே, உல்லாச உப்பரிக்கையிலே, ஓய்யார கீதம் பாடியபடி அல்லும் பகலும் இணைபிரியாத அன்புத் தெய்வமாக வைத் திருந்தாய். நான்தான் அவமானச் சாக்கடையில் தொப் பென்று குதித்து கல்லாக மாறிவிட்டேன்! அப்படித் தானே!

பரந்தாமன் : விதியின் விளையாட்டு எல்லாம்!

பாமா : விதி!

பரந்தாமன் : ஆம் விதி! ஒரு விபரீதமான பாரசூட்! அதைப் பிடித்துக்கொண்டால் அது எங்கு இறக்கி விடுகிறதோ அங்குதான் இறங்க வேண்டும்!

பாமா : அறியாமை என்ற ஆகாய விமானத்தில் ஏறியவர்களுக்குத்தான் அந்தப் பாராசூட் தேவைப்படும்! அப்படி ஏறிய மூட்டாள் நான்தான்! மூட்டாள் நான் தான்!

பரந்தாமன் : நீ பழைய சாஸ்திரங்களை படித்ததில்லை.

பாமா : எங்கே அந்த சாஸ்திரங்களை கொண்டுவா! ஆணுக்கோர் நீதி பெண்ணுக்கோர் நீதி சொல்லும் அந்த அக்ரம சாஸ்திரத்தைக்கொளுத்தி அந்த நெருப்பிலேயே உன்னையும் போட்டு வேக வைக்கிறேன், துரோகி!

பரந்தாமன் : பாமா! வேசியாக மாறியதுமல்லாமல் அதை மறைக்க வேகமாகவும் பேசுகிறாய்!

பாமா : ஆம், வேசிதான். ஆனால், மறந்து விட மாட்டேன் உன்னுடைய மாஜி காதலி என்பதை! ஏனடா வேசியாக மாறினேன்? வேடிக்கை விநோதங்களில் காலத்தைக் கழிக்கவா? இல்லை. இல்லையடா இல்லை. வெந்துகொண்டிருக்கும் என் உள்ளத்திலிருந்து கிளம்பும் தீ ஜ்வாலைக்கு உன்னை இரையாக்க! வேதனைக் கன்லிலே கூர் தீட்டப்பட்ட வேல் முனைக்கு உன்னை விருந்தாக்க! பாமா பரத்தைக் கோலம் பூண்டது பணம் சம்பாதிக்க அல்ல. உயிர் வாழ. உயிர் வாழ்வது சாகப் பயந்து அல்ல. சண்டாள பரந்தாமனை பழிவாங்க! பழிக்குப் பழி வாங்க! இதோ பாமாவின் காரியம் முடிந்துவிட்டது. எண்ணம் ஈடேறி விட்டது! ஈடேறி விட்டது!

(என்று கத்தியெடுத்துக் குத்தப்போக, பரந்தாமன் தப்பி விடுதல்.)

★

காட்சி 73] [ரோடு இரவு

[பரந்தாமன் ஓடிக்கொண்டே இருக்கிறான்—போலீஸ் பிரவேசம்.]

இன்ஸ்பெக்டர்: உம்! அரெஸ்ட் செய்யுங்கள்.

(பரந்தாமன் கைதியாகிறான்)

★

காட்சி 74] [கோர்ட்

[பரந்தாமன் கூண்டில் நிற்கிறான்]

பரந்தாமன்: கோர்ட்டார் அவர்களே, கூறியது அத்தனையும் புரிந்தது எனக்கு. தொழிலாளர்களைத் தூண்டிவிட்டேன், போலீசாருக்குத் தொல்லை கொடுத்தேன். என் சுயநலத்திற்காகபாட்டாளி சமூகத்தை பயன்படுத்திக்கொண்டேன், அராஜகம்-பலாத்காரம் இவைகளிலே அப்பாவி மக்களை ஈடுபடுத்தும் அரசியல் ஸ்டண்ட் நடத்தினேன் என்றெல்லாம் என்மீது குற்றஞ் சாட்டப்பட்டது. இதற்கெல்லாம் நான் என்ன பதில் சொல்லப் போகிறேன்? ஒரே பதில்—தொழிலாளர்கள் அவர்களாகவே நடத்திய கிளர்ச்சிக்கு நான் எந்த விதத்திலும் தொடர்பு கொண்டவனல்ல. அப்படியே இருந்தாலும் ஒருமுறை எச்சரிக்கை செய்து என்னை மன்னிக்கும்படி கோர்ட்டார் அவர்களிடம் தலைவணங்கி மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன். மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்.

★

காட்சி 75] [கருடன் பதிப்பகம்

பரந்தாமன்: பரந்தாமனின் பாவ மன்னிப்புப் பட்டம்.

கருடன்: ம் பத்திரிகை காரனுங்க அப்படித்தான் எழுதுவானுங்க. அதுக்கெல்லாம் பயப்பட முடியுமா?

பரந்தாமன்: மன்னிப்புக் கேட்டதால் மானமே அழிந்துவிட்டதாமே.

கருடன்: நல்ல மானம்டா! மன்னிப்புக் கேக்கறதாலேயே ஒரு மானம் அழிஞ்சிடும்னு அப்பேர்ப்பட்ட மானம் இருக்கவே வேண்டாமே.

பரந்தாமன்: சபாஷ்.

★

காட்சி 76] [பூமாலை விடு

புண்யகோடி: ஏ ... பரந்தாமன் எங்கே?

குண்டுமணி: என்னய்யா ....

புண்யகோடி: அந்த பரந்தாமன் எங்கேடா.

குண்டுமணி: என்னய்யா ஒதற்றே.

(ஒடுகிறான்)

[பூமாலை வருகிறாள்]

பூமாலை: யார் நீங்கள்?

புண்யகோடி: யாரா? மோசக்காரனை நம்பிய முட்டாள். தருதலைப் பயலைப் போயி தலைவன்னு தலையிலே தூக்கிவச்சுகிட்டு ஆடிய மடையன் ....

பூமாலை: என்ன சொல்றீங்க ...

புண்யகோடி: என்னம்மா சொல்லணும்? உன் தம்பிசெஞ்ச வேலைக்கு—நூத்துக் கணக்கான தொழிலாளர்ங்க வயத்தல மண்ணைப் போட்டுவிட்டானம்மா! ...

பூமாலை: எல்லோரையுந்தான் விடுதலைசெய்து விட்டார்களே.

புண்யகோடி: கோர்ட்ல விடுதலை செஞ்சாங்க. கிளர்ச்சிக்கு முக்யமானவங்களையெல்லாம் மில் முதலாளி வேலையை விட்டு நீக்கிட்டாரு என்னையும் சேத்து. நூற்றுக்கணக்கான குடும்பம் தவிக்குதுன்னு யாராலம்மா வந்தது இந்த அநியாயம்?

பூமாலை: பொறுங்கள் பதறுதீர்கள் ... ...

புண்யகோடி: பதறும என்ன பண்றது. சொந்த விஷயத்துக்காக புரட்சி பண்ணச் சொல்லி இவ்வளவு ஏழைகளோட

சோத்ல மண்ணைப் போட்டுட்டானே பாவி. நாங்கல்லாம் நிழல் மாடு—காடு கழனிலே வேலை செய்யத் தெரியாது—எங்களுக்கு வேறஎன்ன வேலை தெரியும் பிச்சை எடுக்கலாம் அவ்வளவுதான்...ம் எங்கம்மா உன் தம்பி ?

பூமாலை : அவன் வீட்டில் இல்லை.

புண்யகோடி : ம்...அக்ரமக்காரன். அநியாயக்காரன்.

பூமாலை : ஐயா, நானே போயி மில் முதலாளியைப் பார்த்து உங்களுக்கெல்லாம் திரும்பவும் வேலை தரும்படி கேட்கிறேன். நீங்கள் போங்கள் தயவு செய்து.

புண்யகோடி : அந்தப் பய மட்டும் கண்ல அகப்பட்டான்னு...

(போகிறான்)

★

காட்சி 77] [மில் முதலாளி வீடு

[முதலாளி காரைவிட்டு இறங்கிப் போக—பூமாலை "ஐயா ஐயா" என ஓடுதல்]

முதலாளி : யார்ரா இது ?

பையன் : இவங்கதான் பரந்தாமனின் அக்காள் !

முதலாளி : பரந்தாமன் அக்காள்...இங்க எங்க வந்தே...போ—போ ....

பூமாலை : கோபிக்காதீர்கள்...நான் வந்த விஷயம்...

முதலாளி : பரந்தாமனுக்கு பெண் கேட்க...இல்லியா ?

பூமாலை : பரந்தாமனுக்கு பெண் கேட்க அல்ல—பாட்டாளிகளுக்கு வாழ்வு கேட்க !

முதலாளி : என்ன உளர்றே ?

பூமாலை : பல தொழிலாளிகளை கிளர்ச்சியில் ஈடுபட்டார்கள் என்பதற்காக வேலையைவிட்டு நீக்கிவிட்டீர்கள். அவர்கள் எல்லாம் வேதனை தாங்காமல் வாடுகிறார்கள். அவர்களை மறுபடியும்...

முதலாளி : சரிதான். இப்ப தலைமைப்பதவி மாறியிருக்கோ—தம்பி போயி அக்காள் ! குடும்பத்துக்குள்ளேயே சுத்துதோ தலைமைப் பதவி.

பூமாலை : தவிப்பவர்கள் குறையைச் சொல்ல தலைவியாகத் தான் வரவேண்டுமோ ? அய்யா அப்படியொன்றும் நான் வரவில்லை. ஏழைத் தொழிலாளிகளின் ஏக்கத்தைப் போக்குகிறேன் என்று சொல்லுங்கள்—போதும்.

முதலாளி : இந்தப் புத்தியை முன்னமேயே உன் தம்பிகிட்ட சொல்லியிருக்கணும் நீ.

பூமாலை : தம்பி செய்த பாபத்திற்க்குத்தான் அக்காள் பிராயச் சித்தம் செய்ய வந்திருக்கிறாள். தயவுசெய்யுங்கள் அய்யா.

முதலாளி : முடியாது...போ....போய்விடு.

பூமாலை : (காலில் விழுந்து) அய்யா! உங்கள் காலைப்பிடித்துக் கொள்கிறேன், கதியற்றவரின் கண்ணீரைத் துடையுங்கள். பசி, பட்டினி, பஞ்சத்தில் பாட்டாளிகளைத் தள்ளாதீர்கள். என்ன இருந்தாலும் அவர்கள் உங்களிடம் வேலை செய்தவர்கள். உங்களுக்கு குழந்தைகள் மாதிரி ஐயா !...

முதலாளி : விடு காலை.

பூமாலை : விட முடியாது. வேதனைக்குரலுக்கு நீங்கள் செவி சாய்க்கும் வரையில், வாழ முடியாதவர்களுக்கு நீங்கள் வகைசெய்யும் வரையில் விட முடியாது.

முதலாளி : சீ மூதேவி.

(காலை உதறி போதல்—பூமாலை காயமடைதல்—அப்போது வந்த உஷா)

உஷா : அடெடெ ! பூமாலையா....பலமாக அடிபட்டுவிட்டதே. டேய்...யார் அங்கே ?

✶

காட்சி 78] [ஜெயில்

வார்டர் : உனக்கு விடுதலைப்பா.

பாண்டியன் : அதற்குள்ளாகவா — மூன்று வருஷம் ஆக வில்லையே...

வார்டர் : உனக்கு மட்டுமல்ல. இன்றைக்கு இந்த உபகண்டத் திற்கே விடுதலை—சுதந்திரதின விழா — அதனால்தான் நீ விடுதலை செய்யப்பட்டே.

பாண்டியன் : சார்! நான் மெட்ராஸ் போரதுக்கு பாஸ் கொடுப்பாங்கள்ளே!

வார்டர் : ஓ. நீ போகவேண்டிய ஊருக்கே கொடுப்பாங்க. மெட்ராஸிலே தானே உன் குடும்பம்....

பாண்டியன் : ஆம். அங்கேதான் என் குமுதா.

*

காட்சி 79] [குமுதா வீடு

[வீடு பூட்டியிருப்பதை பாண்டியன் பார்க்கிறான்]

அவன் குரல் : குமுதா நீ எங்கே போய்விட்டாய். கோயமுத் தூருக்கே போய்விட்டாயா? அங்கு வந்து உன்னை நான் எப்படிப் பார்ப்பேன். பூமாலை, பரந்தாமன்—அவர்கள் முகத்திலியே விழிக்கக்கூடாது. அந்தப் பொல்லாதவர்கள் வீட்டிலே என் குமுதா—கூடாது—அவளை அங்கு போய் பார்க்கக்கூடாது.

*

காட்சி 80] [பூமாலை அறை

பூமாலை : உஷா உன் உதவியை மறக்கவே முடியாது.

உஷா : பரவாயில்லேம்மா.

பூமாலை : தினம் தினம் ராத்ரீலே இங்கே படுத்தின்னு அப்பா ஏதாவது ஆத்திரப்படுவாரு. இன்னைக்கு வீட்டுக்குப் போம்மா.

உஷா : வேண்டாம் இன்னைக்கு ஒருநாள்தானே. நாளையிலே ருந்து மருந்துகூட போடவேண்டியதில்லை, நாளைக்கு போறேன்.

பூமாலை : சரி...சொன்னால் கேட்க மாட்டே. ம்...போயி படு.

உஷா : நிம்மதியா தூங்குங்க...ம்.

(போகிறாள்—பரந்தாமன் வருகை)

பரந்தாமன் : அக்கா எப்படி இருக்கிறது?

பூமாலை : எல்லாம் சௌக்யமாய் இருக்கிறது.

உஷா : (வந்து) கூப்பிட்டிங்களா?

பூமாலை : உனக்கு ஒன்றுமில்லையம்மா! நீ போய் படு.

பரந்தாமன் : நான் வர்றேன் அக்கா! நீ நல்லாத் தூங்கு.

(பரந்தாமன் நிம்மதியில்லாமல் உலாவுகிறான். பிறகு மெதுவாக வந்து கட்டிலருகே சென்று—உஷா என உச்சரிக்கிறான். பிறகு மெதுவாக தொடுகிறான்—பூமாலை குதித்தெழுகிறாள்)

பூமாலை : தெரியுமே எனக்கு உன் சேதி.

பரந்தாமன் : அக்கா!

பூமாலை : தோட்டத்தை அழிக்கப் புறப்பட்ட குரங்குகூட சில மலர்களை பாக்கி வைத்துவிடும்... செந்தாமரை குளத்தில் புரளும் எருமைகூட சில புஷ்பங்களைத் துவைத்து நாசப் படுத்தாமல் விட்டுவிடும். குரங்கு மனமும் எருமைப் பண்பும் ஒருங்கே அமையப் பெற்றவனே, உன் கண்ணுக்கு இறையாகாமல் தப்ப எந்தப் பெண்ணுக்கும் உரிமை கிடையாதா? உன் வெறிபிடித்த தர்பாரிலே கற்புநெறி காத்துக்கொள்ளும் கன்னியர்களே வாழக்கூடாதா? எட்டாத பழத்தை புளிக்குமென்று சொல்லிவிட்டுப் போகிற குள்ள நரியின் புத்திகூடவா உனக்குக் கிடையாது? முயச்சி திருவினையாக்கும் என்ற முதுமொழியை இந்த மோச காரியங்களுக்குத்தானா நீ பயன்படுத்த வேண்டும்.

பரந்தாமன்: அக்கா....நான் ஒன்றும் கெட்ட எண்ணத்தோடு வரவில்லை.

பூமாலை: ஆமாம். உன் தங்கைபோல நினைத்து உஷாவை உபசரிக்கும் நல்ல எண்ணத்தோடுதான் வந்திருக்கிறாய்! அக்ரம ஆட்டங்களுக்கு ஆதாரந்தேடியாக காட்டிக் கொண்டு அதிகநாள் வாழமுடியாது. அதற்கு அழிவு காலம் விரைவிலே உதயமாகிவிடும்.

பரந்தாமன்: அழிவு எனக்கு மட்டுமா. அவனியிலே காண்ப தெல்லாம் ஒருநாள் அழியக் கூடியதுதான்.

பூமாலை: அதைத்தான் நீ நன்முக உணரவேண்டும் அழிய முடி யாதது ஒன்று இருக்கிறது. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் ஓடினாலும் யுக யுகாந்திரங்கள் உருண்டு போனாலும் அழிய முடியாது - புகழ். நல்லவன் என்ற புகழ் - வீரன் என்ற புகழ். விவேகி என்ற புகழ். என் தம்பிக்கு கிடைக்க வேண்டுமென்று தவங் கிடந்தேனே அந்தப் புகழ்.

பரந்தாமன்: எனக்குத் தேவையில்லை அந்தப் புகழும் புகழ் பற்றிய உனது புதிய உபதேசமும். மனிதன் பிறக்கிறான் சாகிறான். இறப்பதற்கு முன்னுள்ள இடைக்காலத்திலே அவன் எண்ணியதெல்லாம் நடக்க வேண்டும். இதுதான் பரந்தாமன் கொள்கை. இதற்கு இடையூறு செய்ய யாருக் கும் சுதந்திரம் கிடையாது.

பூமாலை: சூதும், சூழ்ச்சியும் சுகபோக வெறியும் கொண்ட உனக்கிருக்கிற சுதந்திரம் உன்னால் பாதிக்கப்பட்ட பரிதா பத்துக் குரியவர்களுக்கு, பாட்டாளிகளுக்கு, பாவையர் களுக்கு ஏன் பல லட்சம் பாமாக்களுக்கு இருக்கக்கூடாது. அப்படித்தானே அக்ரமக்காரா... ...

பரந்தாமன்: ஆமாம், அப்படித்தான். அதைக் கேட்க நீ யார்?

பூமாலை: நான் யாரா? நான் யாரா? நான்தான் அப்பா அம்மாவால் அனுதையாக விடப்பட்ட குழந்தை பரந் தாமனை, அனுதினமும் அக்கரையோடு வளர்த்தவள்.

தம்பிக்கு தலைவலி என்றால் தனக்கு தேள் கொட்டியதுபோல் வேதனை அனுபவித்தவள். நீ நெல்லையைத் திருடி நிரபராதிப் பாண்டியனை குற்றவாளியாக்கியபோது, தங்கம் நிகர் மேனியாளை பொங்கு கண்ணீர் அருவியோடு தனியேவிட்டு விட்டு சிங்கம் நிகர் பாண்டியன் சிறை சென்றபோது தம்பியைக் காட்டிக் கொடுக்கக் கூடாது என்ற ஒரே காரணத்திற்காக நியாயத்திற்கு எதிர் திரையிலே நின்றவள். இப்போது புரிகிறதா? நான் யாரென்று. என்னையா கேட்கிறாய் யாரென்று?

(பரந்தாமன் போக)

பூமாலை: எங்கே போகிறாய்—நில்—உஷாவிடம் போகாதே—வெளியே நட....

பரந்தாமன்: ஆ அவளிடந்தான் போகிறேன் என்ன செய்வாய்...

பூமாலை: நில். உனக்கு இப்போது ஒரு பெண் தானே வேண்டும். பரந்தாமா உனக்கு இப்போது ஒரு பெண் தானே வேண்டும். இதோ நானிருக்கிறேன்.

பரந்தாமன்: ஆ. அக்கா...

பூமாலை: ஆம்! உன் அக்காள்தான். ஊர்ப்பெண்கள் மீது ஓயாமல் வீசும் உன் காமவார்த்தைகளை எல்லாம் ஒன்று சேர்த்து உடன் பிறந்தவளிடம், உனக்கு முன்பிறந்த ரத்தத் திடம் வீசு! பேசு! பேசுவாயாமே அன்புக்கரசி என ஆரம்பித்து அடுக்கு மொழியிலே ஆரணங்குகளை வசியப் படுத்துவாயாமே...ம்...பேசடா...ம்...பேசு...

(பரந்தாமன் திரும்ப)

பூமாலை: தியவனே திரும்பிப்பார்! இங்கல்ல. நீ நடந்துவந்த பாதையிலே உன் காலடிபட்டு நசுங்கிப்போன ஜீவன்களைத் திரும்பிப்பார். உன் துரோகத்தால் துவண்ட தொழிலாளி வர்க்கத்தின் துடிதுடிப்பை திரும்பிப்பார். அழறியழுத பாமா — அடுக்குமா என்று சாபமிட்ட புண்யகோடி — அய்யகோ ஏமாந்தோம் என்று கதறி கண்ணீர் வடிக்கும் ஆதரவற்ற குடும்பங்கள். அந்தியின் மொத்த வியாபாரியே

அவைகளையெல்லாம் திரும்பிப்பார். ஏன் நிற்கிறாய் பயங்கர மிருகமே, ஏன் நிற்கிறாய்?

பரந்தாமன்: அக்கா!..... பரந்தாமா! நீ மனிதனல்ல, மிருகம். மிருகம்.

(ஓடுகிறான்)

*

காட்சி 81] [பாழடைந்த மண்டபம்

பரந்தாமன்: பரந்தாமா! பாவி! உனக்கு இந்த தண்டனை போதாது. இன்னும் வேண்டும். இன்னும் வேண்டும். (வானத்திலே பல நட்சத்திரங்கள் திடீரென உதிர்ந்து பெண்ணாக மாறுகின்றன. பரந்தாமன் Reaction-Echo)

Echo: வானத்திலே பல நட்சத்திரங்கள்-ஒரே நிலவு-வையகத்திலே உனக்குப் பல சகோதரிகள்—ஒரே மனைவி—ஒரே மனைவி.... ....

பரந்தாமன்: அக்கா! அன்பின் சிகரமே! என்னை மன்னித்து விடுங்கள். நான் பகுத்தறிவாளனாகி விட்டேன். பகுத்தறிவாளனாகி விட்டேன். திரும்பிப்பார்—எனக்கு மட்டுமல்ல-உலகத்திற்கே என் அக்காள் வழங்கிய ஒப்பற்ற உபதேசம். திரும்பிப்பார்—ஏ மாஜி மனிதனே—மகா பாதகனே—நீயும் திரும்பிப்பார். நீ உருண்டு வந்த சாலையிலே அள்ளித் தெளித்திருக்கும் மண்டையோடுகள் எத்தனை? பிழிந்தெறியப்பட்ட இருதயச் சக்கைகளின் தொகை எவ்வளவு? எண்ணிப்பார். இழிவு நிறைந்தவனே திரும்பிப்பார். ஏ, மானிட ஜாதியே நீ குரங்கிலிருந்து வளர்ந்தாயாம்—அந்தக் குரங்கு மனப்பான்மை உன்னை விட்டு குறைந்துவிட்டதா என்று ஒருமுறை திரும்பிப்பார்-திரும்பிப் பார்—திரும்பிப் பார்—அக்கா! நான் திரும்பிப் பார்த்துவிட்டேன் அக்கா! திருந்திவிட்டேன் அக்கா!

(ஓடுகிறான்)

*

காட்சி 82] [கருடன் பதிப்பகம்

பையன்: சார்! ஆசிரியர் சார்!

பரந்தாமன்: அப்படிக் கூப்பிடாதே! ஆசிரியன்—அறிவு நூல்கள் எழுதும் ஆசிரியன்—அழகான எழுத்தோவியன்—அவதிப்படும் பாட்டாளிகளின் தலைவன்—இந்தப் பளபளப்பான பட்டுத் திரைகளுக்குப் பின்னே மறைந்துகிடக்கும் பயங்கரமான ரகசியங்கள் உனக்குத் தெரியாது தம்பி! உனக்குத் தெரியாது.

கருடன்: பரந்தாமா!

பரந்தாமன்: பரந்தாமனல்ல—பயங்கர மிருகம், மிருகம்! மிருகமல்ல—மனிதனுகிவிட்டேன். இன்றுதான் மனிதனானேன்.

கருடன்: என்னப்பா சொல்றே பைத்யம் பிடிச்சவன் மாதிரி.

பரந்தாமன்: பைத்யம் பிடிப்பதா—பிடித்திருந்த பைத்யம் இப்போதுதான் தெளிந்திருக்கிறது என் அக்காளால்.

கருடன்: சரிதான். அக்காள் உபதேசம் பண்ணீருக்காப்ல இருக்கு. உருப்டாப்லதான்.

பரந்தாமன்: அக்காளைப்பற்றி ஒன்றும் சொல்லாதே—அது என் தெய்வம். மூடிக்கிடந்த என் இருதயக் கதவுகளைத் திறந்து விட்ட தெய்வம்! என் இருண்ட பாதையிலே ஜோதி விளக்குக் காட்டிய மங்கையர் குல திலகம். இழிவுப் படுகுழியிலே விழப்போன எனக்கு இறுதி மூச்சு வழங்கி-பாரடா பண்பு கெட்ட வீணனே. நீ நடந்துவந்த பாதையிலே உன் காலடி பட்டுக் கசங்கிப்போன மலர்முகவதிகள் எத்தனை பேர்—திக்கற்றவர்கள்—திசைமாறிப் போனவர்கள்—திண்டாடித் தெருவில் நிற்போர் அவர்களின் தொகை எவ்வளவு? துரோகியே திரும்பிப்பார் என்று ஆணையிட்டு என்னைத் திருத்திய தெய்வம் என் அன்புச் சகோதரி அவள்தாண்டா எனக்கு கண்கண்ட தெய்வம். கருடா, நான் தியவழியிலேதான் நடந்துவிட்டேன். நீயுந்தான், நீயுந்தான். நீயும் திருந்திவிடு—திரும்பிப்பார் என் தோழனே—திரும்பிப்பார்!

கருடன் : அட போப்பா !

பரந்தாமன் : உன்னால் சுலபத்தில் திரும்பிப்பார்க்க முடியாது நீ ஒரு யானை.

கருடன் : பரந்தாமா, உனக்கு ஏனப்பா திடீர்ன்னு இந்த கெட்ட புத்தி.

பரந்தாமன் : நல்ல புத்தி வந்துவிட்டதடா நாசகாரா—இனியும் என்னை உன் வலையில் தள்ளாதே. பரந்தாமன் பாதை மாறி விட்டது. அவன் செய்த அக்ரமங்களுக்கு சாந்தி தேடப் போகிறான். அக்கா ! உங்கள் தம்பி உடனடியாக ஒரு நல்ல காரியத்தில் பிரவேசிக்கப் போகிறான். பாண்டியன் குமுதா அவர்களை ஒன்று சேர்த்து மகிழப் போகிறான். பாமாவிடம் மன்னிப்புக் கேட்கப் போகிறான்.

கருடன் : பரந்தாமா !

பரந்தாமன் : வருகிறேன். என்னைக் கூட்பிடாதே.

பையன் : நானும் வர்றேங்க உங்களோட.

பரந்தாமன் : வா தம்பி வா. இங்கிருந்தால் நீயும் கெட்டு விடுவாய்.

(பையன் எழுத)

கருடன் : ஏய் என்னடா ?

பையன் : திரும்பிப்பார்.

(கருடன் பதிப்பகம்—திருடன் பதிப்பகமாக்கப் படுகிறது)

*

காட்சி 83] [சென்னை ஹோட்டல்

[பரந்தாமன் எழுதுவது]

அவசர வேண்டுகோள்.

அன்புள்ள குமுதாவுக்கு ! உன்னைப் பார்க்கவேண்டும் என்று துடிக்கிறேன். நடந்தவைகளை மறந்துவிட்டு

உடனே உன்னுடைய விலாசத்தை எனக்குத் தெரியப் படுத்தினால் ஓடி வந்து சந்திக்கிறேன்.

இங்ஙனம்,
உன் அன்பு மாமன்
பரந்தாமன்,
ரூம்–15, இமாலயா ஓட்டல்,
சென்னை.

(எழுதிய கடிதத்தை ஒருமுறை படித்துவிட்டு பையனிடம்)

பரந்தாமன்: நீ உடனே தினசரி பத்திரிகை ஆபீஸ்களுக்குச் செல்லவேண்டும்.

பையன்: ஏங்க...

பரந்தாமன்: இந்த விளம்பரத்தை எல்லாப் பத்திரிகைகளிலும் போடவேண்டும்.

பையன்: ஏங்க வீணு சிரமம் குமுதா அம்மாளுக்கே நேரா ஒரு கார்டு போட்டா போவுது!

பரந்தாமன்: ஏ. என்ன எனக்கு புத்தி வந்தவுடனே உனக்கு புத்தி மழுங்குது! குமுதா விலாசம் தெரிஞ்சா இந்த விளம்பரம் எதுக்கு! உம்..

பையன்: ஓ....அதை மறந்துட்டேன்.

பரந்தாமன்: (நூறு ரூபாய் பணம் எடுத்துக் கொடுத்து) இந்தா விளம்பர சார்ஜுக்குக் கொடு! எல்லா பத்திரிகையிலும் இன்னிக்கே போடச் சொல்லணும்!

பையன்: (பணத்தையும் காகிதத்தையும் வாங்கியபடி) சரிங்க!...

பரந்தாமன்: நிச்சயம் என் குமுதா இருக்குமிடம் தெரிந்து விடும்: அவளிடம் ஓடுவேன். மன்னிப்பு கேட்பேன். சீரழிந்த குடும்பத்திலே மறுமலர்ச்சி உண்டாக்குவேன்!

★

காட்சி 84] [பிரசவ ஆஸ்பத்திரி

[வாட்ச்மேன் கூண்டில், பத்திரிகையுடன் வாட்ச்மேன் உட்கார்ந்திருக்கிறான். பரந்தாமனின் விளம்பரம் கண்ணில்படல்]

"அன்புள்ள குமுதாவுக்கு" (ஆர்வமாய்) என்னது! என்னது! நம்ப குமுதா பேரு வருது! (மீண்டும்) அன்புள்ள குமுதாவுக்கு...(பிறகு முணகல்) (உரக்க) இப்படிக்கு உன் மாமன் பரந்தாமன், 15, இமாலயா ஹோட்டல், சென்னை...ஆகா, குமுதாவோட கவலையெல்லாம் ஒழிஞ்சிடும்! இப்பவே எழுதுகிறேன் குமுதா விலாசத்தை. (கார்டைத் தேடி) எங்கடா கார்டு! இதுவேற....ம்....

(எடுத்து எழுதுகிறான். எழுதி முடிக்கும்போது அந்தப் பக்கம் பாண்டியன் வருதல்)

வாட்ச்மேன்: (பாண்டியனைப் பார்த்து) தம்பீ! கொஞ்சம் நில்லேன்! (அருகே வந்து) இந்தப் பக்கம்தானே போறே?

பாண்டியன்: ஆமாம்.

வாட்ச்மேன்: உம். இந்தக் கார்டை கொஞ்சம் தபால் பெட்டியிலே போட்டுட்டு போய்டேன். (பாண்டியன் வாங்குதல்) ரொம்ப அவசரம் எனக்கு ஆஸ்பத்திரி நேரம். வெளியே போகக்கூடாது! போட்டுர்ரீயா?

பாண்டியன்: ம்... (வாங்கிக்கொண்டு போகிறான்)

★

காட்சி 85] [தெரு

[கார்டை எடுத்துச் சென்ற பாண்டியன் தெரு மூலையிலுள்ள பெட்டியில் போடும்போது தவறி கீழே விழுகிறது. அதில் விலாசம் தெரிகிறது]

பரந்தாமன்,
15, இமாலயா ஹோட்டல்,
சென்னை.

பாண்டியன்: (திடுக்கிட்டு) பரந்தாமன்! ... ... (கார்டைப் படிக்கிறான்) ஆ! குமுதாவின் விலாசம்! குமுதா! குமுதா! என் குமுதா அகப்பட்டுவிட்டாள்! குமுதா! குமுதா!

(ஓடுகிறான்)

*

காட்சி 86] [வாட்ச்மேன் வீடு

பாண்டியன்: குமுதா! குமுதா!

குமுதா: பாண்டியன்! ....

(தழுவிக்கொள்ளல்)

பாண்டியன்: குமுதா! உன்னைத் தேடி எங்கெல்லாம் அலைந்தேன் தெரியுமா? ஆமாம் குழந்தை எங்கே? (குழந்தையை கொஞ்சுதல்)

பாண்டியன்: என்ன குமுதா குழந்தைக்கு பெயர்?

குமுதா: என்னவாயிருக்கும் சொல்லுங்களேன்!

பாண்டியன்: தாத்தா பெயரா?

(புண்யகோடியும், ஊமைப் பெண் உள்பட ஆணும் பெண்ணுமாக ஒரு கூட்டம் "சாம்ப சதாசிவம்—சாம்ப சதாசிவம்—சாம்ப" என்று பிச்சை யெடுத்து வரல், வீட்டுக்கு வந்த வாட்ச்மேன் அவர்களைப் பார்த்து)

வாட்ச்மேன்: என்னப்பா....ஒருத்தன் வந்தாவே பிச்சைபோட ஆள் இல்லை. நீ பெரிய பட்டாளமே திரட்டிக்கிட்டு வர்ரியே.

புண்யகோடி: ஒருத்த ஒருத்தரா வந்தா தொல்லையா இருக்கும்னு தான் எல்லோரும் சேர்ந்து வர்றோம். ம் என்ன செய்றது! எங்க காலம். நல்லாத்தான் வாழ்ந்தோம்!

வாட்ச்மேன்: ஓகோ நெசவாளிங்களா!

புண்யகோடி : அது கெட்டுது போ! நாங்கள்ளாம் மில் தொழிலாளிங்க. அதும் கோயமுத்தூரு! வேலை கிடை யாது. இப்படி வேதனைபடுறோம்.

வாட்ச்மேன் : குமுதா! குமுதா! கொஞ்சம் அரிசி கொண் டாம்மா!

புண்யகோடி : கொஞ்சமா—கூட்டத்தைப் பார்த்துட்டு ....

வாட்ச்மேன் : பின்னை என்ன குருணியா போடுவாங்க!

(பாண்டியன் குமுதா வருகை)

பாண்டியன் : (புண்யகோடியைக் கண்டு) அப்பா! அப்பா!

புண்யகோடி : பாண்டியா! என் மகனே! பாத்தியா உங்கப்பன் கதியை!

பாண்டியன் : அப்பா! பரதேசியாக மாறிவிட்டீர்கள்?

புண்யகோடி : மாத்திட்டான் அந்தப் பரந்தாமன்.

குமுதா : (வாட்ச்மேனிடம்) இவர்தான் பாண்டியன்! என் கணவர்!

வாட்ச்மேன் : அப்படியா!

பாண்டியன் : ஆமாம். (வாட்ச்மேனிடம்) இவர்தான் எங்கப்பா. அப்பா! என்னப்பா நடந்தது?

புண்யகோடி ; பரந்தாமன் சுயநலத்துக்காக வேலை நிறுத்தம் பண்ணி மன்னிப்பு. அதுக்காக எங்களுக்கெல்லாம் வேலை இல்லேனுடான் முதலாளி.

பாண்டியன் : ஆ! குற்றம் செய்தது யார்? கொடுமை அனுபவிப் பது யார்?

புண்யகோடி : நாங்கமாத்திரம் இல்லப்பா! நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இப்படி ஆயிட்டுது!

பாண்டியன் : நூற்றுக்கணக்கான குடும்பங்கள்! வேதனைப் படும் தொழிலாளர்களின் சார்பில் நான் அந்த முதலாளியை சந்திக்கிறேன்.

புண்யகோடி : என் மகன்னு மகன்தான். (கட்டிக்கொள்கிறான்)

*

காட்சி 87] [பூமாலை வீடு—காலை

[பூமாலை காப்பி சாப்பிட்டு முடிகிறது. குண்டுமணி பேப்பருடன் ஓடிவந்து]

குண்டுமணி : அம்மா அம்மா பாத்திங்களா! குமுதா அம்மா விலாசத்தைக் கேட்டு உங்க தம்பி விளம்பரம் பண்ணி யிருக்காரு!

பூமாலை : ஆ! (பத்திரிகையைப் பார்த்தல்) குமுதாவைத் தேடு கிறான் பரந்தாமன்—பாவி! அவளுக்கும் ஏதோ ஆபத்து வரப்போகிறது! குண்டுமணி நான் உடனே மதராஸ் புறப் பட் வேண்டும்.

குண்டுமணி : சரிங்க...

பூமாலை : நான் போனால்தான் அந்த நாசகாரனிடமிருந்து குமு தாவைக் காப்பாற்ற முடியும்!

*

காட்சி 88] [ஹோட்டல் ரூம்

[பரந்தாமன் அறையிலிருக்கும்போது ஹோட்டல் பையன் வந்து தந்தியைக் கொடுத்துவிட்டுப் போகிறான். பரந்தாமன் பிரித்துப் படிக்கிறான். ஆனந்தம். ஆபீஸ் பையன் உள்ளே வருகிறான்.]

பரந்தாமன் : நம்ம குமுதா அட்ரஸ் கெடைச்சிட்டுது. தந்தி கொடுத்திருக்கிறாள். ம்.....ம்.....குழந்தைக்கு வாங்கின பொம்மை, கிலு கிலுப்பை எல்லாத்தையும் எடுத்து வை. (பையன் போக) சீரழிந்த குடும்பத்திலே மறுமலர்ச்சி உண்டாக்குவேன்.

*

காட்சி 89] [ஹோட்டல் அறை-பகல்

பூமாலை: (ஆபீஸ் பையனிடம்) பரந்தாமன் எங்கே?

பையன்: குமுதாகிட்ட போயிருக்கிறார்.

பூமாலை: அட்ரஸ் ...

பையன்: இதோ அவுங்க அடிச்ச தந்தி!

(தந்தி தருவது வாங்கிப் பார்த்துவிட்டு வேகமாக வெளியேறுவது)

*

காட்சி 90] [பாமா வீடு

[கதவு திறந்திருக்கிறது—ஹாலில் போய் உட்காருகிறான் பரந்தாமன்]

பரந்தாமன்: குமுதா! குமுதா!

(பதிலில்லை — உட்கார்ந்திருக்கிறான். பிறகு பலான் ஊதுகிறான். வெடிக்கிறது)

பாமா: அப்படித்தான் வெடித்துச் சிதறப்போகிறது உன் வாழ்வும்!

பரந்தாமன்: பாமா! (என்று திகிலுடன் எழுகிறான்)

பாமா: பாவி! இந்த முறை நீ தப்பமுடியாது! நீ செய்த அக்ரமங்களுக்கு பிராயச்சித்தம் செய்யப்போகிறேன்.

பரந்தாமன்: பாமா! என்னை உணர்ந்துகொள்! அவசரப்பட்டு விடாதே! துடிக்கத் துடிக்க பாமாவை விட்டுவிட்டு ஓடிய துரோகி பரந்தாமனல்ல! துன்மார்க்க செயல்களுக்கு சமாதி கட்டிவிட்டு தூய்மையின் தூதுவனாகவே மாறி விட்ட புதுப் பரந்தாமன்!

பாமா: ஆமாம்! அதனால்தான் குமுதாவுக்கு வலைவீச வந்திருக்கிறாய்.

பரந்தாமன் : இல்லே பாமா இல்லே. அவளிடம் மன்னிப்புக் கேட்க வந்தேன். எதிர்பாராதவிதமாக உன்னையும் கண்டேன். பாமா நீயும் நடந்தவைகளை மறந்துவிடு! மீண்டும் நம் வாழ்வைப் புதுமை செய்வோம்.

பாமா : வாழ்வு எனக்கா? நான் முறிந்துபோன பால்! விஷங் கலந்த தேன்! எனக்கா வாழ்வு! சதிகாரா! போதுமடா உன் உபதேசம்! போதும். (ரிவால்வாரை நீட்டி)

பரந்தாமன் : பாமா!

பாமா : உலகத்திலே இருக்கிற என்போன்ற பேதைகளைக் காப்பாற்றுவதற்காக உன்னைக் கொல்லுகிறேன்!

(சுடப்போகிறாள்)

பரந்தாமன் : பாமா! (தடுக்கிறான்—இருவருடைய போராட்டத்தில்) பாமா! நான் சொல்வதைக் கேள்! என்னைக் கொல்லாதே! நான் உண்மையிலேயே திருந்திவிட்டேன்...

பாமா : பாவி! விடு என்னை!

("குமுதா! குமுதா" என்ற பூமாலையின் ஒலி கேட்கிறது! அதற்குள் பாமாவின் ரிவால்வார் வெடிக்கிறது. ரிவால்வார் அவள் பக்கமே திரும்பியிருந்ததால் பாமாவின் உயிர் போகிறது. பாமா விழுகிறாள்.)

பரந்தாமன் : ஆ!....(கவலை)

(அதே சமயம் அவன் மார்பில் குண்டுவீச்சு)

பரந்தாமன் : ஆ!...(அலறல்)

(துடித்தபடி சோபாவில் விழுகிறான். இப்போது சுட்டது பூமாலை)

பூமாலை : தொலைந்துபோ துஷ்டனே! இனிமேலாவது உலகம் நிம்மதியாயிருக்கட்டும்! (கீழே கிடப்பவளிடம்) குமுதா! குமுதா! (அருகே போய் பார்க்கிறாள்) ஆ! பாமா!

[மரணமூச்சுவிடும் பரந்தாமன்]

பரந்தாமன் : அது குமுதா இல்லக்கா ! பாமா ! (விம்மலுடன்) என் பாமா ! அவளே அவளைக் கொன்றுகொண்டாள் !

பூமாலை : ஆமாம் ! என்றைக்கு உன்னை முதன்முதலாகப் பார்த்தாளோ அன்றைக்கே அவள் தன்னைத்தானே கொல்ல ஆரம்பித்துவிட்டாள் !

பரந்தாமன் : அக்கா ! என்னை இன்னும் தவறாக நினைக்கிறீர்கள் அக்கா ! தகாத செயல் புரியும் தம்பியை அல்ல தாங்கள் கொன்றது ! தனலில் புடம்போட்டு எடுக்கப்பட்ட தங்கத்தை ! கோர விளையாட்டுக்களின் குகையாயிருந்த பரந்தாமனை முன்பே கொன்றுவிட்டீர்கள் அக்கா ! இப்போது நீங்கள் கொன்றது உங்களால் புதிதாக சிருஷ்டிக்கப்பட்ட உத்தமனை ! உங்களுக்கு யார் தம்பியாய் இருக்க வேண்டுமோ அந்தத் தம்பியை கொன்றுவிட்டீர்களே அக்கா. குமுதாவிடத்திலே மன்னிப்புக்கேட்க வந்தேன் அக்கா. பழிவாங்க எண்ணியிருந்த பாமா....பாமா...

பூமாலை : தம்பீ...

பரந்தாமன் : இதோ பாருங்கக்கா ! குமுதாவின் குழந்தைக்காக நான் வாங்கி வந்த விளையாட்டுச் சாமான்கள் !

பூமாலை : பரந்தாமா ! அவசரப்பட்டு அறிவிழந்தேன்—என்னை மன்னித்துக்கொள்ளடா என் செல்வமே...

பரந்தாமன் : நீங்கள் குற்றமற்றவர். நான் சாகவேண்டியவன் அக்கா ! எனக்குத் தேவையான தண்டனைதான். எனக்கு மட்டுமல்ல என்னைப்போலுள்ள எல்லோருக்கும். என்னைத் திருத்திய தெய்வமே, எங்கே திரும்பிப்பார் என்று சுட்டிக் காட்டிய அந்தப் பொன்கரத்தை இப்படிக் கொடுங்கள்.

பூமாலை : சுட்டிக்காட்டிய கரமல்ல. சகோதரனை சுட்டுத் தள்ளிய கரம்...சுட்டுத்தள்ளிய கரம்.

பரந்தாமன் : இல்லே அக்கா ! இல்லே. கொடுங்கள் என்னே வளர்த்த அந்த அன்புக் கரங்களே... ஆசைக் கரங்களே... அக்கா....விடை கொடுங்கள் !

பூமாலே : பரந்தாமா !

பரந்தாமன் : நீங்கள் ஓடிவிடுங்கள். போலீஸாரிடமிருந்து தப்பி விடுங்கள் அக்கா.

பூமாலே : வேண்டாம். நீயே போனபிறகு எனக்கு எதற்கடா வாழ்வு.

பரந்தாமன் : அக்கா ! அக்கா !

பூமாலே : போலீஸ் ! போலீஸ் !

பரந்தாமன் : அக்கா ! அக்கா !

பூமாலே : பரந்தாமா !

(பரந்தாமன் சாதல்)

★

காட்சி 91] [மில் முதலாளி வீடு

உஷா : பரந்தாமன்தான் வழிப்பறிசெய்து நெக்லஸை திருடினன் என்பது பூமாலே பரந்தாமன் சச்சரவின்போது எனக்கு நன்றாக புரிந்து விட்டதப்பா.

முதலாளி : பாபம் நிரபராதியான பாண்டியனே வீணே கஷ்டப் படுத்தி விட்டேன்.

உஷா : அந்தப் பாபத்தை போக்கிக்கொள்ள ஒரே வழிதான் இருக்கிறது.

முதலாளி : என்ன உஷா ?

உஷா : பாண்டியனின் கொள்கைப்படி பாட்டாளிகளுக்கு சமத்துவம் வழங்குங்கள்.

(பாண்டியன் பிரவேசம்)

முதலாளி : பாண்டியன் !

பாண்டியன் : பல்லிக்காட்டி ஏமாற்ற நீனைக்காதீர் மறுபடியும்! இம்முறை இரண்டிலொன்று. அநியாயமாக நீக்கப்பட்ட தொழிலாளருக்கு வேலைதரவேண்டும் உடனடியாக.

முதலாளி : பாண்டியன்!

பாண்டியன் : யாரோ ஒருவன் செய்த தவறுக்காக இத்தனை குடும்பங்கள் மீது பழிவாங்கிக்கொள்வதுதான் மனிதத் தன்மையா?

முதலாளி : நான் அதை உணர்கிறேன் பாண்டியன்!

பாண்டியன் : உணர்ந்தால் போதாது. உடனடியாக பரிகாரம் தேட வேண்டும்.

முதலாளி : பாண்டியன்! தொழிலாளிகளை வேலைக்கு சேர்ப்பது மட்டுமல்ல. குற்றமற்ற உனக்கு நான் செய்த கொடுமைக் காக சிவசக்தி மில் நிர்வாகமே உன் கொள்கைப்படியும் உஷாவின் கொள்கைப்படியும் நடக்க அனுமதி தருகிறேன்.

(பாட்டாளிகளைக் காட்டி—இதோ மில்லின் சொந்தக் காரர்கள்! உன் தோழர்கள்! கைபோட்டுக் கொடுத்து—இதோ மில்லின் நிர்வாகம்!)

பாண்டியன் : அப்படியா! வாழ்க உங்கள் புகழ்! வளர்க இந்த பண்பு! தோழர்களே! சிவசக்தி மில் இன்று முதல் ஜன சக்தி மில்லாக மாறும்! சக்திக்கேற்ற உழைப்பு, தேவைக் கேற்ற வசதி. சமத்துவம் கொழிக்கும்-சமதர்மம் திகழும்-சமூதாய மறுமலர்ச்சி உருவாகும்!

தொழிலாளர்கள் பாண்டியன் வாழ்க! பாண்டியன் வாழ்க!

(வேலைக்காரன் ஓடிவந்தபடி)

வேலைக்காரன் : எஜமான் பாத்திங்களா?

முதலாளி : ஆ! என்ன!

(பத்திரிகையை பாண்டியனிடம் கொடுத்தல்)

பாண்டியன் : ஆங் !

பத்திரிகை News

(அக்காள் தம்பியைக் கொன்றாள்)

*

காட்சி 92] [கோர்ட்

நீதிபதி : (ஜட்ஜ்மெண்ட் படிக்கப்படுகிறது) பத்திரிகை மூல மாக செய்தி கேள்விப்பட்டுதான் பாண்டியன் வந்திருக் கிறார் ! கொலைக்கும் அவருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை யென்பது சிவசக்தி மில் முதலாளியின் சாட்சியத்தாலும், ஆஸ்பத்திரி வாட்ச்மேன் சாட்சியத்தாலும் தெளிவாகிறது. பரந்தாமனுக்கும் பாண்டியனுக்கும் விரோதம் என்கிற காரணத்தாலேயே கொலைசெய்தார் என்பது நம்பத்தகுந்த தல்ல ! ஆகவே பாண்டியனை விடுதலை செய்யப்படுகிறது. (பூமாலை புன்னகை) கொலை குற்றத்தை ஒப்புக்கொள்ளும் பூமாலைக்கு மரண தண்டனை விதிக்கப்படுகிறது.

குமுதா : சின்னம்மா !

*

காட்சி 93] [ஜெயில்

குமுதா : சின்னம்மா ! சின்னம்மா !

பூமாலை : அழாதே குமுதா !...

பாண்டியன் : நீங்கள் கொல்லவில்லை உங்கள் தம்பியை ! அவ னுடைய பழைய செயல்கள் அவனைப் பழிதீர்த்துக் கொண்டன !

பூமாலை : ஆரம்பத்திலிருந்தே அவன் நல்லவனாயிருந்தால் எனக் கேன் அவன்மீது ஆத்திரம் வரப்போகிறது. தொட்டுத் தொட்டு வளர்த்த என் செல்வத்தை துடிக்கத் துடிக்க ஏன் கொல்லப்போகிறேன்.

குமுதா : சின்னம்மா !

பூமாலை : குமுதா ! உன் மாமன் உனக்கும் ஊராருக்கும் தந்த உபத்திரவங்களுக்கு உகந்த பரிசு வாங்கிக்கொண்டான் ! உன்னுல் சந்தேகிக்கப்பட்ட நானும் களங்கமற்றவள் என்று காட்டிக்கொண்டேன், இந்தக் காரியத்தைச் செய்து ! ...

குமுதா : என்னை மன்னித்துவிடு சின்னம்மா !

பூமாலை : அழாதே கண்ணே அழாதே ! கரி நேரமாகிறது ! குமுதா ! பாண்டியன் ! வருகிறேன் !

(மாணவிகளின் கண்களில் நீர். அதைக்கண்ட பூமாலை)

பூமாலை : குமுதா ! என் ஒரே வேண்டுகோளை நிறைவேற்று ! (மாணவிகளைக் காட்டி) இதோ புதிய ஜகத்தின் பூங் கொத்துகள் ! இந்த இளம் இதயங்களிலே அறிவு விளக் கேற்றி வைக்கப் பாடுபடு. திரும்பிப்பார் என்னும் அறி வுரையை நன்முக வாழ்பவர்கள், நலிந்து கிடப்பவர்கள், நாசவேலையில் ஈடுபட்டிருப்பவர்கள் அத்தனை பேருக்கும் தேவையான அறிவுரையாக்க நீயும் பாண்டியனும் முயற்சி யுங்கள் ! வருகிறேன்.. (மாணவிகளிடம்) என் சிங்காரச் சிட்டுகளே ! எல்லோருக்கும் வாழ்த்து ! திரும்பிப்பார் உப தேசத்தை மறந்துவிடாதீர்கள், நான் திரும்பாத இடத் திற்குச் செல்கிறேன்.

(குழந்தைகள் கண்ணீருடன் நிற்கிறார்கள். பூமாலையை வார்டர்கள் கூட்டிப் போகிறார்கள்)

வணக்கம்.

★